திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, வருடமொன்றுக்கு எத்தனை ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்படுகிறது? அப்படி ஏற்றுமதி செய்யப்படுகிற தாதுக்களை குமரி மாவட்டத்தில் உள்ள மணவாளக்குறிச்சி போன்ற பகுதிகளுக்கு அனுப்பி அங்கே டைடானிஸ் குளோரைடு, டைடானிஸ் ஆக்ஸைடு, டைடானிஸ் மெட்டல் போன்ற பொருட்களை உற்பத்திசெய்வதற்கு மத்திய அரசாங்கத்தை இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1971–72 ஆம் ஆண்டு 12,270 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 1972-73, 1973-74 இல் 21 ஆயிரம் மெட்ரிக் டன்னும், 1974-75 இல் 6,500 மெட்ரிக் டன்னும், 1975-76 இல் 3,000 மெட்ரிக் டன்னும், 1976-77 இல் 12 ஆயிரம் மெட்ரிக் டன்னும், 1977-78 இல் 8 ஆயிரம் மெட்ரிக் டன்னும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதை வைத்து தொழில் ஆரம்பிக்க முடியுமா என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே உள்ள புதிய துறைமுகத்தில், ஏற்றுமதி இறக்குமதி இயந்திர மயமாக்கப்பட்டிருக்கிறது. புதிய துறைமுகம், பழைய

துறைமுகம் ஆகியவை இணைக்கப்பட்ட பின்னர், அதன் காரணமாக 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை இழக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்குவரத்திற்கு நிவாரணம் அளிக்க, ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறைக்கு இந்தக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியிலே அந்த ஆலையை விஸ்தரித்து பல பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டம் இருந்ததாகவும், ஆனால் அதற்குப் போதிய மின்சார சக்தி கொடுக்க தமிழ்நாடு அரசு தயாராக இல்லையென்ற காரணத்தால் அந்தத் திட்டம் கேரளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்கள், அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னிடத்திலே தற்போது விவரம் இல்லை.

இலுப்பப்பட்டு நீலகண்டேஸ்வரர் கோயில் பணியாளர்கள்.

* வினா எண் 462 ;—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டைச் சேர்ந்த இலுப்பப்பட்டு அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் பணியாற்றி வந்த ஊழியர்கள் பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருவாவடுதுறை ஆதீனத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளது இவ்வாலயம். அதில் பணிபுரிந்த ஏழு ஊழியர்கள் 15-3-1977 முதல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுள் ஒருவர் 30-6-1977 அன்று இறந்துவிட்டார். மீதமுள்ள ஆறு பேர் 1-7-1977 முதல் வேலைக்கு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல முறை இந்த மாமன்றத்திலே இத்தகைய பிரச்சினைகள் வரும்பொழுது குறிப்பாக மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான

1979 மார்ச் 19]

திருக்கோயில்களை அறநிலையத் துறையே மேற்கொண்டால் இத்தகைய சிரமங்கள் வராது என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் மேற்கண்ட கோயிலில் பணியாற்றி நீக்கப்பட்டவர்கள் இனி யாரேனும் சேர்க்கப்படாமல் இருந்தால் அப்படி இருப்பவர்களுக்கு வேலையில் சேர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா? செய்தி துறையில், நெருக்கடி காலத்திலே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை அமைச்சர் அவர்கள் அளித்து இருக்கிறார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே இதையும் கருதி அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பை இழந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்கு ஆவன செய்யமுன்வருவார்களா?

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஏழு பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் துர்ப்பாக்கியவசமாகக் காலமாகிவிட்டார். பாக்கி ஆறு பேர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், இதைத் தவிர வேறு எங்கெங்கு அப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைத் தந்தால் அதை அரசு நிச்சயமாகப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இன்னொரு கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். இந்த மடங்கள் இவைகளின் நிர்வாகத்திற்குள்ளே இருக்கின்ற ஆலயங்களையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று இத்தனை ஆண்டுக்காலமாக எந்தக் காரணத்தின் அடிப்படையிலே அல்லது வேறு சிக்கல்களின் அடிப்படையிலே அல்லது வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இது விடப்பட்டிருக்கிறதோ அதுதான் இப்பொழுது தொடர்ந்துகொண்டிருக்கிறது. என்றாலும் அவைகளை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மஞ்சத்தட்டை' பகுதியை சுற்றுலா மையமாக்கல்

* வினா எண் 463—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி பணகுடிக்கு மேற்காக உள்ள மேற்கு மலைத்தொடரிலுள்ள குமரி மாவட்டத்தைச் சார்ந்த மஞ்சத்தட்டை என்ற இடத்தைச் சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

Archeological findings in Thiruppudaimarudhur temple

*Q. No. 464.— THIRU N. KITTAPA : Will the Hon· the Minister for Education be pleased to state :

(*a*) whether the Archeological Department of the Government of Tamll Nadu has found out sculptures depicting the relationship between Tamil Nadu and Arab Countries on the temple towers of Thiruppudaimarudhur temple in Tirunelveli district and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்து திருப்புடை மருதூரைச் சேர்ந்த சிவன் கோயிலில் வெளி கோபுரத்தில் கி. பி. 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் கோபுரத்தின் ஐந்து நிலைகளிலும் நல்ல நிலையில் காணப்படுகின்றன. ஓவியம் காணப்பெறும் கோவிலின் தலபுராணம் பற்றியும், சைவநாதன் மார்களைப் பற்றியும் மதுரை சொக்கநாதரின் திருவிளை யாடல்களைப் பற்றியும், வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன அவைகளில் தமிழ்நாட்டுக்கும் அரபு நாடுகளுக்கும் வணிகத் தொடர்பு இருந்து வந்தது என்பதை விளக்கும் வகையில் அரபியக் கப்பல் ஒன்றில் குதிரைகளை ஏற்றி வருவதுபோன்றும் அந்தக்கப்பலில் அராபிய வணிகர்களின் உருவங்களும் காணப் படும் ஓவியங்களும் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, தமிழ்நாட்டிற் கும் வேறு நாடுகளுக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறப்படும் கல்வெட்டுக்கள் வேறு ஏதேனும் கோயில்களில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதா? குறிப்பாக, பூம்புகார் பகுதியிலே கூட அத் தகைய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பண்டைய பூம்புகார் பகுதிக்கும் ஏனைய அயல்நாடுகளுக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறும் அத்தகைய கல்வெட்டுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அத்தகைய முறையிலே வேறு ஏதாவது புதிய தகவல்களை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே. அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அறிவிக்க இயலும்.

1979 மார்ச் 19]

ஆ. நாகூர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

* வினா எண். 465—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் பொள்ளாச்சி கல்வி மாவட்டத்துக்கு உட்பட்ட ஆ. நாகூர் மத்திய உயர்நிலைப் பள்ளிக்கு போதிய கட்டிட வசதி இல்லாமல் இருப்பது பற்றி அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) தனியார் நடத்தும் பள்ளியானாலும் 12 வருடங்களாக அனைத்து மாணவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி அடைந்துள்ள அப்பள்ளிக்கு கட்டிடம், விளையாட்டு மைதானம், மரச்சாமான்கள் வசதிகளையாவது செய்ய அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ); இல்லை. இப்பள்ளியில் 6 பிரிவுகளில் 210 மாணாக்கர்கள் பயிலுகின்றனர். இப்பள்ளிக்கு தற்பொழுது உள்ள இடவசதி போதுமானதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்வதைப்போல அந்தப் பள்ளிக்கு இடவசதி சரியாக இருக்கிறது என்று அவருக்குக் கீழிருந்த அதிகாரிகள் ஏதாவது தகவல் கொடுத்திருந்தால் அது சரியான தகவல் அல்ல என்பதை நான் தாழ்மையோடு சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தப் பள்ளியை நான் பார்த்தேன். ஒரு மாணவர் கூட பாக்கியில்லாமல் அத்தனைபேரும் 12 வருடங்களாகத் தேர்வு பெற்று வந்திருக்கிறார்கள். அந்தப் பள்ளியை பற்றிக் கவனம் செலுத்தவில்லை என்று அந்தப் பள்ளியின் நிர்வாகிகள் மிகவும் வருந்துகிறார்கள். ஆகவே, இங்கு இடவசதி செய்து கொடுக்கவும் விளையாட்டு—மைதானத்திற்குச் சரியான மைதானம் இல்லை, இடம் தரத் தயார்—அதைச் செய்வதற்குமான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே. இது ஒரு தனியார் பள்ளி. தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்கி அரசு உதவி செய்கிறது. கட்டிடம் கட்ட 35,000 ரூபாயும், விளையாடுமிடம் வாங்குவதற்கு 35,000 ரூபாயும், மற்றும் மாணவர்கள் உபயோகத்திற்கான மரச்சாமான்களுக்காக 5,000 ரூபாயும் அதிகபட்ச மானியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியிடமிருந்து எந்தவகையான மான்யமும் கோரி

நாளதுவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. ஏதும் விண்ணப்பம் இனி பெறப்பட்டால் அது பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனை செய்யப்படும்.

முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி.

* வினா எண். 466—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிலுள்ள 137 முந்திரி ஆலைகளில் உள்ள 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி அமுல்படுத்துவதில் காலம் கடத்துவது ஏன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாட்டிலுள்ள முந்திரி ஆலைகளுக்கு, வேண்டிய அளவு மூலப்பொருள் (கச்சா முந்திரி) கிடைக்காததால் பெரும்பாலான முந்திரி ஆலைகள் இயங்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் பலர் வேலையின்றி உள்ளனர். தொழிலின் நலனைக் கருதியும், இப்பொழுது வேலையிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க வேண்டுமென்பதாலும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவரவர்களே, ஒரு ஆண்டுக்கு இரண்டு மாத வேலைதான் கிடைக்கிறது. அப்படிக் கழிந்த இரண்டு ஆண்டுகளாக, அந்த வேலையில்கூட ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறது. பல்வேறு தொழில்கள் ஏற்படுத்தப்படுவதற்கு இந்தத் தொழில் ஏற்படுத்துவதன் காரணத்தால் முதலாளிக்கு அதிக இலாபம் கிடைக்க வசதியாக இருக்கிறது. ஆகவே, கொஞ்ச நாள் வேலை கொடுத்தாலும் கூட அதற்குத் தகுதியான சம்பளம் கிடைக்கும் அளவிலே இந்தத் தொழிலிலே மினிமம் வேஜ் ஏற்படுவதற்கு அமைச்சரவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டு, முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு தென் மாநிலங்களிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளின் பிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மத்திய தொழிலாளர் நல இலாகா கூட்டுச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, முந்திரித் தொழில் நல்ல ஏற்றுமதி செய்யக்கூடிய தொழில். இதற்கு மூலப்பொருளான முந்திரிக்கொட்டை கிடைப்பதில் சிரமமாக

1979 மார்ச் 19]

இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து நிறைய முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்ய எந்தவிதமான சிரமமும் கிடையாது. ஆகையினாலே அந்தத் தொழில் நல்ல வளர்ச்சி அடையவும், தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவும் இறக்குமதி செய்வதிலே தடையில்லை. அந்த ஃபாக்டரி சொந்தக்காரர்கள் நிறைய இறக்குமதி செய்து, தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதைப் பற்றி. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப் படவில்லையென்ற காரணத்தாலே தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பெற முடியாது என்பதல்ல. அந்தந்தத் தொழிற்சாலையில் உள்ளவர்கள், ஊதியம் அதிகமாகக் கேட்டு, முதலாளிகளோடு பேசி—வெற்றிபெற்று, ஒப்பந்தம் செய்தால் நல்லது. ('வெல் அன்ட் குட்') ஒப்பந்தம் ஏற்படவில்லையென்றால், தொழில் தகராறு எழுப்பினால்' அதை 'கன்சிலியேஷ' னுக்கு அனுப்ப—சமரச முயற்சியில் அரசு தேவையானால் முயற்சி செய்யும். அதிகம் வெற்றி பெறவில்லையென்றால், தொழில் மன்றத்திற்கு அனுப்புவது பற்றியும் அரசு ஆராயும்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், சிந்திரித் தொழில் வளர்கிறது வடக்கே; முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே என்று. அதை அடிப்படையாக வைத்து,—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி அறிவித்தார்கள்,—பேரறிஞர் அண்ணா அவர்கள் முந்திரித் தொழில் கூட இங்கே சிதைந்து கொண்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டியதற்கிணங்க, அந்த முந்திரித் தொழில் வளர தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்க முன் வருமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் போதுமான கச்சாப் பொருள் இல்லை. கேரளத்திலிருந்து தமிழகத்திற்கு முந்திரி வருவதற்குத் தடையிருக்கிறது. மத்திய அரசில் இருக்கக் கூடிய 'காஷு கார்ப்பரேஷ'னுக்கு எழுதியதில் அதிகமாக நமக்குக் கொடுக்க இயலாது என்று எழுதிவிட்டார்கள். இதற்கிடையில் உச்ச நீதிமன்றத்தில் இந்தத் தடையை எதிர்த்து கேரள மாநிலத்திற்கு வெளியே உள்ள முந்திரி பயன்படுத்துவோர் ஒரு வழக்கு தொடர்ந்ததால், அத்தடையை நீக்குவது குறித்து கேரள அரசுடன் தொடர்புகொள்ள இயலாது எனவும் மத்திய அமைச்சர் தனது 6–6–1978-ல் தனது கடிதத்தில்

கூறியுள்ளார். தமிழ்நாட்டிலேயே மூலப்பொருள் உற்பத்தியைப் பெருக்க விவசாயத் துறையையும் வனநீர் வளத் துறையையும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மூலப்பொருள் பற்றாக்குறையினால் முந்திரிப்பருப்புத் தொழிலாளர்கள் பிரச்னை தீர்வதற்கு வழியில்லாத ஒரு காரணத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கூறினார்கள். சென்ற மாதம் வெளி நாட்டிலிருந்து நமக்குத் தேவையான அளவுக்கு முந்திரிக்கொட்டை இறக்குமதி செய்வதாக பத்திரிகையில் பார்த்தேன். இறக்குமதி செய்தாலும் கூட, அது கேரளாவுக்குப் போகிறதே தவிர, தமிழ்நாட்டில் இருக்கிற ஆலைகளுக்குப் பயன்படத்தக்க விதத்தில் நமக்குக் கூட கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கனவே மத்திய அரசு மறுப்பு தெரிவித்து இருக்கிறது என்று கூறினாலும் கூட மீண்டும் அதனை வலியுறுத்தி கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற ஏறத்தாழ 150 பாக்டரிகளுக்குத் தேவையான முந்திரிப்பருப்பை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை, சுருக்கமாக ஜேம்ஸ் கேட்கமுடியவில்லையா? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நேரடியாக பெறுவதற்குள்ள முயற்சியை அரசு முற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே தெரிவித்ததைப் போல் இது குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதைப் பற்றியதாகும். இருப்பினும் மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ள குழுவினுடைய பரிந்துரையைப் பார்த்து, இந்த அரசு அதன்மேல் முடிவு எடுக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

திரு. தே. ஞானசிகாமணி: அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது தொழில் ஜாஸ்தியாக இல்லாத காரணத்தால் 'மினிமம் வேஜஸ்' தேவையில்லையென்றும் அவர்கள் போராடி வாங்கினால் பரவாயில்லை என்றும் பொருள்படக் கூறினார்கள். போராடி வாங்குவது வேறு விஷயம். வேலைக்கு அடிப்படை சம்பளத்தை நிர்ணயித்து அமுலுக்குக் கொண்டு வரவேண்டியது அரசினுடைய கடமை. அப்படிக் கொண்டு வந்தால் முதலாளிகள் தொழிலாளர்கள் ஓரளவாவது சம்பளத்தைக் கொடுப்பார்கள். அதோடு கூட, தமிழகத்திலே 13,000 டன் முந்திரி உற்பத்தி கிடைப்பதாகச் சொன்னார்கள். அதை இன்னொரு கார்ப்பரேஷன் மூலமாக லைசன்ஸ் எடுத்து அங்கேயிருக்கிற 137 பாக்டரிகளுக்குத் தொழிலாளர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்து கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 19]

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொழிலாளர்கள் போராட வேண்டும் என்று சொல்லவில்லை. குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்கவில்லை என்று சொல்லும்போது, ஊதிய உயர்வு பெற முடியாது என்பது அல்ல. ஊதிய உயர்வு எந்தெந்த வழிகளில் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் சுருக்கமாக பதில் சொல்ல வேண்டும் என்று அடிக்கடி சொல்கிறார்கள். ஆனால், கேள்வியை மட்டும் நீட்டமாகக் கேட்க அனுமதிக்கிறார்கள். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதில் நிறையச் சிரமம் இருக்கிறது. குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயித்து விட்டால், அந்த ஊதிய நிர்ணயம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், அந்த நிறுவனம் இருக்கத் தேவையில்லை என்று வழக்கு மன்றம் (case law) தீர்ப்பளித்திருக்கிறது.

An industry which is not in a position to pay the minimum wage prescribed by the Government has no right to exist என்று இருக்கிறது. இவைகளை எல்லாம் மனதில் கொண்டுதான் நாங்கள் இதை ஆலோசனை செய்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்; தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. சி. ஆறுமுகம்; தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, பேரவைத் தலைவர் அவர்கள் கேள்வியை மட்டும் நீட்டிக் கொண்டு போக அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். பேரவைத் தலைவர் நீட்டிக்கவில்லை. உறுப்பினர்கள் நீட்டிக்கிறார்கள். அது அவர்கள் உரிமை, அவர்களை அதற்கு அனுமதிப்பது தலைவர் அவர்களின் கடமை. அதனால், பேரவை தலைவர் நீட்டிக் கொண்டு போக அனுமதிக்கிறார் என்று சொன்னதைக் குறிப்பேட்டிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால் பரவாயில்லை. அனுபவம் உள்ள உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று சொல்கிறேன். திரு. ஞானசிகாமணி அவர்கள் புதிய உறுப்பினர், பெரியவர், அதனால் அவரை கேட்க அனு

மதித்தேன். இனிமேல் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. அனுபவம் உள்ளவர்கள் சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும். அமைச்சரவர்கள் அதைவிடச் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் ; தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊதியத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். இந்த முந்திரி பருப்புத் தொழிலில் வேலை செய்கிற தொழிலாளர்களுடைய கையில் அதன் பால் பட்டு பல காயங்கள் ஏற்படுகிறது. அது பல வியாதிகளுக்கும் மூல காரணமாக இருக்கிறது. ஆகவே இந்த முந்திரித் தோட்ட தொழிலாளர்களுக்கு அரசு தனியாக பாதுகாப்பு ஏற்படுத்தி தருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி குறைநத பட்ச ஊதியம் நிர்ண யிப்பதில் காலதாமதம் ஏன் என்பதாகும். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள் கிறேன்.

திரு. க. சுப்பு ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதில், மற்ற முந்திரித் தோட்டத் தொழிலாளர்களை விட சேர்வராயன் மலையிலுள்ள முந்திரித் தோட்ட தொழிலாளர்களுக்குக் குறைவாக இருக்கிறது என்றும் அதை ஒரே சீராக மாற்றியமைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இருந்தாலும், நான் அது விஷயமாகத் தான் இன்று காலை 8.20-லிருந்து 8.32 வரையில் பேசிவிட்டு வந்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் 137 முந்திரி ஆலைகள் இருப்பதாக இந்த அறிக் கையில் பார்க்கிறோம். இந்த 137 முந்திரி ஆலைகள் தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன, அப்படி இல்லாத மாவட்டங்களில் ஒரு முந்திரி ஆலை அரசின் சார்பில் நிறுவ முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. மு. அம்பிகாபதி ; தலைவர் அவர்களே, தமிழகத்தில் 137 முந்திரித் தொழிற்சாலைகளும், 76,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மினிமம் வேஜஸ் (குறைந்த பட்ச ஊதியம்) என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவில்லை என்று தெரிகிறது. அந்தத் தொழிலாளர் களுக்குக் கூலி நிர்ணயம் செய்யும் போது அந்தத் தொழிலில் இருக்கின்ற முறைகளைப் பரிசீலித்து, அதிலே பால் பட்டு காயம் அடைவது மற்றும் உள்ள சிக்கல்களைப் பரிசீலித்து, அதிலே இருக்கிற பல்வேறு அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, கூலி நிர்ணயிப்பது தான் வழக்கம். அமைச்சர் அவர்கள் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, முந்திரித் தொழிலாளர்களுக்கு உள்ள குறைகளைப் பரிசீலித்து, குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க அதைக் குறித்து பரிசீலிக்க, ஒரு கமிட்டி அமைத்து, அவர்களை இது குறித்து சிந்தனை செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவர் அவர் களே, மத்திய அரசு ஒரு குழுவை ஏற்கனவே அமைத்து இருக்கிறது. அது தன்னுடைய வேலையைச் செய்துகொண்டு இருக்கிறது. குழுவின் அறிக்கை வந்தபிறகு நடவடிக்கை எடுக் கப்படும் என்று முன்னதாகவே கூறிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அந்த நேரத்தில் இங்கே இல்லை என்று கருதுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மு. அம்பிகாபதி, தாங்கள் துணை வினா கேட்க 3 நிமிடம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள்.

நல்லான்குப்பம் குடிசைக் பகுதியில் மராமத்துப் பணிகள்

* வினா எண். 467— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை அசோக்நகர் பகுதியிலுள்ள நல்லான் குப்பம் குடிசை மாற்று வாரியப் பகுதியிலுள்ள கழிவு நீர்க் குழாயில் அடைப்பு ஏற்பட்டு அப்பகுதியில் சுகாதாரம் கெடு வதால் அதை உடனே சீர் செய்வது குறித்து குடியாத்தம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரது 17-7-1978 தேதியிட்ட மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; (அ) ஆம்.

(ஆ) சென்னை அசோக்நகர், நால்லான்குப்பம் குடிசைப் பகுதியில் கழிவு நீரை குழாய்கள் மூலம் அப்புறப்படுத்த ரூ. 2.94 லட்சம் அளவில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப் பட்டுள்ளது. இதில், கழிவு நீரை மாநகராட்சி கழிவு நீர்க் குழாயுடன் இணைத்தல், குளியலறை மற்றும் கழிப்பிடங் களுக்கு மராமத்து செய்தல், சாலைகள் பழுது பார்த்தல் ஆகியன அடங்கும். குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேற்படி செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் ; சார், இந்தக் கழிவு நீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டது மட்டுமல்ல, குடிநீர்க் குழாயிலும் அந்தக் கழிவு நீர் புகுந்த காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் அதைக் குடித்ததன் விளைவாக மஞ்சள் காமாலை போன்ற வியாதிகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு புகார் வரவில்லை. இது கூட மாம்பலம் பகுதி மார்க்சிஸ்ட் கட்சி செயலாளர் எழுதிய கடிதத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் என்குளோஸ்ட் லெட்டர் வைத்து, இதைப்பற்றிக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில், அது குடிசை மாற்று வாரியத் திற்கு அனுப்பப்பெற்று, அந்த வாரியம் அந்தக் கடிதத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இந்த பதிலாகும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அவர்கள் சொல்வது போல் அங்கே விரும்பத்தகாத காரியங்கள் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற் போது சென்னையில் கழிவு நீர் அடைப்பு ஏற்பட்டால், அதைத் தவிர்க்க பாதாளச் சாக்கடையில் தொழிலாளர்கள் இறங்குகிற போது, பலர் உயிர் துறக்கிறார்கள். அதைப் போக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சில வாரத்திற்கு முன்னால் அவர்களுக்குப் புதிய சாதனத்தை அளிக்கப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்த சாதனம் என்ன என்று அவர் விளக்கவில்லை. அது மேல் நாட்டுச் சாதனமா, நம்நாட்டுச் சாதனமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்னை அசோக் நகர் பகுதி யிலுள்ள நல்லான்குப்பம் குடிசை மாற்று வாரியப் பகுதியில் கழிவு நீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டது பற்றியதாகும்.

1979 மார்ச் 19]

திரு. தீ. சு. நல்லதம்பி ; தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கின்ற தற்போதுள்ள 120 வட்டங்களில் ஏறக்குறைய பெரும்பாலும் வடசென்னை, மேற்குச் சென்னை பகுதியில் அவைகள் பற்றி அமைச்சருக்குத் தெரியும்—குடிநீரிலே கழிவு நீர் கலந்து அதனால் பல தொல்லைகளுக்கு மக்கள் ஆளாக்கப் பட்டதும் தெரியும். அது குறித்து சென்னையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட என்னைப்போன்ற சட்டமன்ற உறுப் பினர்கள் அதிகாரிகளை அணுகி சொன்னபின்னாலும் அது உடனடியாகக் கவனிக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட குறை பாடுகளைப் போக்க இன்றைய அமைச்சர் அவர்கள் பொறுப் பேற்று இருக்கின்ற குடிநீர் வடிகால் வாரியம் செய்யவேண்டுமா அல்லது மாநகராட்சி செய்யவேண்டுமா என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கவேண்டும். அதைப்போன்று குறை பாடுகள் ஏறக்குறைய 100 வட்டங்களில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து என்னோடு வருவாரானால், இந்த 6 மாத காலத்தில் எந்தெந்தப் பகுதியில் அப்படிப்பட்ட உடைப்பு இருக்கின்றன என்பதை நிரூபிக்க இயலும். அந்த நிலைமைதனைத் தடுக்க அரசு உத்தரவாதம் தருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9·40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்டகால நண்பர் என்ற காரணத்தால் நான் பதில் சொல்கிறேன். இது குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்தது அல்ல. Madras Metropolitan Water Supply and Sewerage Board. குடிநீர் வழங்குதல்-கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தினுடைய பணி. இந்த மாதிரியான புகார் வந்துள்ளது. உடனடியாக 'ஆன் தி ஸ்பாட் இன்ஸ்பெக்ஷன்' என்ற முறையில் அதிகாரிகளுடன் சென்று, காரணத்தைத் தெரிந்து நடவடிக்கை எடுத்திருக்கிறேன் அதற்கான பாராட்டுக் கடிதங்கள் பல எனக்கு வந்திருக்கின்றன; பத்திரமாக வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு ஒருநாள் நான் வருகிறேன். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் கூட்டம் முடிவடைந்த பின்னால் ஒருநாள் இருவரும் போவோம். அன்றைக்கு 4 மணி நேரம் ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள். you must spare atleast four hours.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, பாதாள சாக்கடையில் மூழ்கி, அடைப்பை அகற்றுகின்ற தொழிலாளர்களுக்கு புதிய சாதனம் கொடுத்து, அவர்களுடைய உயிரைக் காப்பாற்றப் போவதாக அமைச்சர் அறிவித்தது பத்திரிகைகளில் வந்தது. அந்த புதிய சாதனம் எப்போது கொடுக்கப்படும்?

[1979 மார்ச் 19

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே. மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் தலைவர் அனுமதிக்கிற காரணத்தால் 'மேன் ஹோல்' என்று சொல்லக்கூடிய அந்தப் பள்ளத்திற்கு உள்ளே இறங்கி, உடலெல்லாம் மலமாக வெளியே வந்த தொழிலாளியைப் பார்த்த புரட்சித் தலைவர் மிகுந்த வேதனையுற்று, இந்த நிலையை உடனடியாகப் போக்க வேண்டுமென்று என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார்கள். அதற்காக 50 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் (குறுக்கீடு) இது முக்கியமான விளக்கம். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் 3 வகையான இயந்திரங்கள் மேல் நாடுகளிலிருந்து வாங்கப்படுவதாக இருக்கிறது; ஒன்று இந்தியாவில் தயாராவது. ஃபாரின் மேய்டு 3, இன்டிஜினிஸ் 1. அந்த இயந்திரங்கள் வந்துவிட்டால் தொழிலாளி மூழ்கி அடைப்பை எடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல் மேலே இருந்தே செய்ய முடியும். இன்னும் இரண்டாண்டுக்குள்ளாக அந்த நிலையை ஏற்படுத்திவிட முடியும், We are at it 'விஹேவ் கம்மன்ஸ்ட் நெள. phased புரோகிராமாக இரண்டாண்டுக்குள் முடித்துவிடலாம் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது,

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, குடிநீர்-வடிகால் பிரிவு நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னதைப்போல 'குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல்' வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டதால் சென்னை மாநகரம் முழுவதும் எங்குபார்த்தாலும் கழிவு நீர் சாலைகளில் பாண்டிச்சேரியில் ஓடுவதைப் போல இங்கும் ஓடுவதை அமைச்சரவர்கள் அறிவார்களா? இந்தக் குறையைப் போக்க முன்போலவே சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலேயே குடிநீர்-வடிகால் பராமரிக்கும் பணியை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா? இன்னொன்று, நான் சென்னை மாநகராட்சியின் சுகாதாரக் குழுத் தலைவராக இருந்தபோது கழிவுநீர் ஆழ்கிணற்றில் அடைப்பு ஏற்பட்டால் அதை அகற்ற உள்ளே மூழ்கி தொழிலாளி உள்ளே இறங்கும்போது மலம் அவன்மீது படாமல் இருக்க 'பிளாஸ்டிக்' கவசம் வழங்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; அது குறிப்பிலும் இருக்கிறது. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்லும்போது உடனடியாக அது செயல்படுத்தப்படும் என்று சொன்னார், இன்னும் செயல்படுத்தப்படவில்லை. இந்த அமைச்சராவது உடனடியாக அதைச் செயல்படுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட சாக்கடைகளில் தொழிலாளர்கள் இறங்கி சுத்தம் செய்கிறபோது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைத் தவிர்க்க 50 இலட்சம் ரூபாய் செலவிற் கருவிகள்—வெளிநாட்டிலிருந்தும் இந்தியாவில் இருந்தும் வாங்கும் ஏற்பாட்டைப் பற்றிச் சொன்னார்கள். 5 இலட்சம்அல்லது 10 இலட்சம் ரூபாய் செலவிலேயே அவர்கள் உயிர் பாதுகாப்புக்கான காரியத்தை உடனடியாக செய்யக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது என்று அறிகிறேன். கடலிலே மூழ்கும் போது மூச்சுத் திணறலைத் தடுக்க முகமூடி அணிகிறார்கள். அதைப்போல நச்சுக்காற்றில் வேலை செய்கிறவர்கள் பாதுகாப்பு முகமூடி அணிகிறார்கள், அதைப்போன்ற கருவிகளை இந்தச் சாக்கடைத் தொழிலாளர்களுக்கும் வாங்கிக் கொடுத்தால் நல்லபலன் இருக்காதா? அப்படிப்பட்ட கருவிகளை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது உடனடி ஏற்பாட்டைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவரவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கேட்கின்ற காரணத்தால் தனிக் கேள்வி போடுங்கள் என்று சொல்லாமல் பேராசிரியரிடம் எப்போதும் வைத்திருக்கிற மதிப்பை வைத்துச் சொல்கிறேன். உள்ளே இறங்காமல் வெளியிலேயே இருந்து அடைப்பை அகற்றுகின்ற திட்டத்தைப்பற்றி நான் சொன்னேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்போது தொழிலாளி உள்ளேயே இறங்க வேண்டிய தேவையில்லை. நீங்கள் சொன்னதைவிட ஒருபடி மேலேயே செய்கிறோம். We are a step in advance of the suggestion that you have already made.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, 5 இலட்சம் மக்கள் இருந்தபோது இந்தக் கழிவு நீர் அகற்றுவதற்கான அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இப்போது சென்னை நகரில் 30 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அதற்குத் தகுந்தவாறு குழாய்களைப் பெருக்கி இதனை விரிவு படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கேள்விகள் எல்லாம் மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கின்றன.

[1979 மார்ச் 19

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, பற்பல இடங்களில் இப்படிப்பட்ட சாக்கடைகளில் அடைப்பு இருந்ததைக் குறித்து நானே நேரடியாக சம்பந்தப்பட்ட ஆதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் இந்தக் கழிவு நீர் சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவதற்குரிய வண்டி இரண்டே இரண்டுதான் இருக்கின்றன என்ற தகவலைத் தந்தார்கள். இரண்டு வண்டிகள்தான் இந்தச் சென்னை நகரில் உள்ள எல்லா பகுதிகளுக்கும், அதாவது வட சென்னை, தென் சென்னை, போன்ற எல்லா பகுதிகளுக்கும் சென்று பணியினை மேற்கொள்கின்றன. ஆகவே அந்த வண்டியை அதிகரிக்க ஆவன செய்யப்படுமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் கேள்வி கேட்டபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களுடைய தொகுதிக்கு வருவதாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதி அதைவிட மிக மோசமாக இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதிக்கும் அவர்கள் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே முதலில் கேட்ட கேள்விக்கு ஓ தனிக் கேள்வி போடவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இரண்டாவது கேட்ட கேள்விக்கு வருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான் பல தொகுதிகளுக்குச் செல்ல இருக்கிறேன். ஏற்கெனவே பல தொகுதிகளுக்குச் சென்றும் இருக்கிறேன். அந்தந்த அமைப்புக்கள் கூப்பிட்டவுடன் செல்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு நேரம் இல்லாமல் போய் விடுகிறது, ஆகவே இன்னும் பல இடங்களுக்கும் செல்ல இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் கலந்து அவருடைய தொகுதிக்கு வருவதற்கு, வந்து பார்வையிடுவதற்கு ஏற்பாடுகளை ஒரு நாள் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா. எண். 468, 469—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெற்றன.

கூவம் சீரமைப்புப் பணிகள்

* வினா எண். 470 திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூவம் சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து எத்தனை ஆண்டுகள் ஆகியுள்ளது?

(ஆ) இதன் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?

1979 மார்ச் 19]

(இ) பின்னர் இப்பணி பாதியில் நிறுத்தப்பட்டதா?

(ஈ) இதனைச் சரி செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) கூவம் சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து பத்துஆண்டுகள் ஆகியுள்ளது.

(ஆ) கடைசி திருத்திய மதிப்பீட்டுச் செலவு ரூ. 221.64 இலட்சங்கள்.

(இ) இல்லை,

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

* வினா எண்- 471 திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் கூவம் நதியினைச் சீரமைப்பதற்கு அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த பத்தாண்டுக் காலத்தில் பல இலட்ச ரூபாய் செலவு செய்தும் கூவத்திலுள்ள நாற்றம் இன்னும் போகவில்லை. இந்த சென்னைப் பட்டணத்தில் பல இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் சுகாதாரமாக வாழ்கின்ற வகையில் மீண்டும் கூவத்திலுள்ள நாற்றத்தை அப்புறப்படுத்துவதற்கு ஏதேனும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே அளித்திருக்கின்ற விடையிலேயே விவரமாகச் சொல்லி இருக்கிறேன். ஏற்கெனவே கூவம் சீரமைப்பு திட்டம் என்ற பெயராலே ஒரு திட்டம் 1958-ம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே 4-7-19 7-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலே 118 இலட்சம்

ரூபாயில் ஒரு திட்டத்தினைப் போட்டார்கள். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கடந்த 1971-ம் ஆண்டிலே மீண்டும் திருத்த மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்காக 199 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டம் 1974-லே முடிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றிக் கேள்விகள் வருகிறபோது அதாவது உறுப்பினர்கள் அனைவரும் வற்புறுத்திச் சொன்னபோது அதனை அரசு பரிசீலிக்கும் என்று அமைச்சரவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். அதன் பின்னர் வரவு செலவுத் திட்டத்திலேயும் ரூபாய் 6 இலட்சத்து 70 ஆயிரம் ஒதுக்கி இருக்கிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் நாற்றம் பொறுக்க முடியவில்லை என்று சொல்லியும் அதைப்பற்றிப் பரிசீலிப்பதாகச் சொன்ன அமைச்சரவர்கள் ஏன் பரிசீலிக்கவில்லை? ஆகவே அதை மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்தில் அதற்குண்டான விரிவான அறிக்கைகளை வெளியிடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கூவத்தை மணக்கச் செய்வதற்காக நான் ஒரு திட்டத்தை இந்த அரசுக்குக் கூறி இருந்தேன். இந்தக் கூவத்தின் நாற்றம் பொறுக்க முடியவில்லை. இந்த கூவத்திலே வருகின்ற நீர் நல்ல சத்துள்ள நீராக இருக்கின்ற காரணத்தால் அந்தக் கூவம் நீரைக் கொண்டு அந்தக் கூவம் கரைகளில் வாழைத் தோட்டம் காய்கறித் தோட்டம் போடுவதுநல்லது என்று கூறி இருந்தேன் ஆகவே அவ்வாறு கூவம் நீரை வடித்தெடுத்து அருகில் தோட்டம் போடுவதால் அது சுத்தமாக ஆவதற்கு வழி ஏற்படும். ஆகவே அவ்வாறு செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதற்கான ஒரு திட்டத்தை இந்த அவையிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதாவது இதில் புல் வளர்க்கும் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூ1.64 லட்சம் ரூபாயில் தயாரிக்கப்பட்ட கூவம் திட்டத்தின் மூலம் கூவம் மணப்பதற்குப் பதிலாக மனதைக் குமட்டுகிற

நிலையில் இருக்கிறது. இதை மாற்றி கூவம் மணப்பதற்கு தகுந்த திட்டம் எதையாவது இந்த அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு பக்கிம்காம் கானாலை சீர்படுத்தி அதில் உள்நாட்டுப் போக்குவரத்து நடத்துவதற்கு ஏதுவாக படகுகள் விடுவதற்கும் ஏதேனும் செயற்குறிப்புகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூவம் சீரமைப்புத் திட்டம் ஏற்கனவே 74-ல் முடிக்கப்பெற்றது. இப்போது சிறப்புத் திட்டமாக அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை. ஆனாலும் கூவம் ஆற்றோடு ஒட்டிய பக்கிம்காம் கானால் திட்டமும்.... It is all interconnected. it is inseparable என்கின்ற அளவில் பக்கிம்காம் கால்வாயைச் சீர்படுத்தி, அதன் மூலமாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படகுகளை விடுவதற்கும்; அத்துடன் உட்நாட்டு போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு மாஸ்டர் பிளான் ஒன்றை தயார் செய்து மைய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இதற்கு 560 லட்சம் ரூபாய் செலவாகும். இதற்கான அனுமதியை வழங்கும்படி மைய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் தருவதாக சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வாங்காத பொருளுக்கு-கொள்ளை விலை என்பது போல், 221.64 லட்சம் ரூபாய் செலவாகியும் கூவம் இன்னும் சீராக்கப் படவில்லை. இதற்கு வேறு ஏதாவது புதிய திட்டத்தை ஏற்படுத்தி இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் முடிக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட புதிய திட்டம் எதுவும் இந்த அரசின் பரிசீலனைக்கு வரவில்லை. 1976-77-ல் கூவம் ஆறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, கூவத்தில் கழிவு நீர் கலக்கின்ற காரணத்தால்தான் இந்த துர்நாற்றம் ஏற்படுகிறது. இதை தடுத்தால் துர்நாற்றம் நின்று விடும். ஆகவே கழிவு நீரை இதில் கலக்காமல்—இதில் விடாமல் வேறு வழியில் கொண்டு செல்வதற்கும், கூவத்தைச் சீரமைப்பதற்கும் ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டால்தான் கூவம் பயன்பெற முடியும். ஆகவே இதில் ஒரு ப்ராஸ்பெக்டீவ் அஸெஸ்மெண்ட் செய்து ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்துவார்களா, அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா? இருக்கிறதென்றால் அதன் விவரங்கள் என்ன?

[1979 மார்ச் 19

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே சொன்னதைப் போல் பக்கீம்காம் கால்வாய்த் திட்டத்தோடு சேர்த்து அந்தத் திட்டம் அமலுக்கு வந்தால்-கூவம் திட்டத்தையும் அதில் எடுத்துக்கொண்டு, இன்று மணக்காமல் இருக்கின்ற கூவம் மணக்கின்ற அளவிற்குத் திட்டத்தை நடத்த-இந்த நல்ல பணியைச் செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கூவம் ஆறு திட்டத்தில் தெர்மல் பிளான்ட்-டிலிருந்து வருகின்ற தண்ணீரும், கழிவு நீர் கலப்பதாலும் வருகின்ற துர்நாற்றத்தைப் போக்குவதற்கு பொதுப்பணித்துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பக்கீம்காம் கனால் ஆந்திர மாநிலத்திலிருந்து ஆரம்பித்து புதுவை மாநிலத்தில் போய்ச் சேருகிறது. இந்த பக்கீம்காம் கனாலை சீரமைப்புச் செய்வதற்கு மத்திய அரசிலிருந்து பணம் வாங்குவதற்கு—இதற்கென்று இருக்கின்ற நேவிக்கேஷன் இலாகாவில் பேசி—அங்கிருந்து நிதியைப் பெற்று பயன்படுத்துவதற்கும், அதன் மூலம் பக்கீம்காம் கனாலை போக்குவரத்துக்குப் பயன் உள்ளதாக ஆக்குவதற்கும் நேவிக்கேஷன் இலாகாவிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே எனது பதிலில் சொன்னேன். இதைப்பற்றி மத்திய போக்குவரத்து அமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். இதற்கான ஒரு மாஸ்டர் பிளான் அனுப்பியிருக்கிறோம். இதற்காக 560 லட்சம் ரூபாய் ஆகும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறோம். இவைகள் எல்லாம் பக்கீம்காம் கனால் சீரமைப்புக்காகத்தான்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்த இந்தத் திட்டம் சரியாக நிர்வகிக்கப்படாததன் காரணமாக குறிப்பாக நெருக்கடி காலத்தில் சரியாக நிர்வகிக்கப்படாததன் காரணமாக இப்போது சீரழிந்து கிடக்கிறது. இதைத் தற்போதைய அரசும் அறிவித்ததாக என் நினைவு. இந்தக் கூவத்தின் இரு ஓரங்களிலும் சீர்கேடு அடைந்துவருவதைச் சுட்டிக்காட்டிய நேரத்தில்—அதற்கான சீரமைப்பு வேலைகள் நடந்து வருவதாக அறிவிக்கப்பட்டது. அந்த வேலைகள் இப்போது நடைபெற்று வருகிறதா? மேலும் தேசீயக் கவி பாரதியார் பாடியது போல்—

1979 மார்ச் 19]

''சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தர தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்....

என்று.— இதற்காக ஏற்படுத்தப்பட்ட தோணிகள் முன்பு ஓடிக் கொண்டிருந்தன. இப்போது அந்தத் தோணிகள் ஓடுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விக்கே தாங்கள் மூன்று நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுகிறீர்கள். சீக்கிரமாகக் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். சீக்கிரம் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா : எனவே, நமது பாரதியார் கூற்றின்படி, அத்தகைய தோணிகளை மீண்டும் அங்கே விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய திட்டம் தான் இது. 4-7-1967 அன்று அதற்கு 118 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப் பட்டது. ஆனால், முடிவு பெற்ற காலம் கடந்த 1974 என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூவம் மணக்கும் என்று மட்டும் சொல்லவில்லை. இதே வார்த்தைகளை அந்த நேரத்திலும் சொன்னார்கள். சிந்து நதி மீதினிலே படகு விடுவோம், சுந்தரத் தெலுங்கினிலே பாட்டிசைப்போம், பெண்கள் குலாவி வருகின்ற காட்சிகளையெல்லாம் பற்றிச் சொன்னார்கள். ஆனால், 1974-க்குப் பிறகு 76 ஜனவரி 31 வரையிலும் அந்த ஆட்சி இருந்தது என்பதை மறந்து விட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். 74-க்குப் பின்னால். இந்தத் திட்டம் என்ன ஆயிற்று, எப்படிப்பட்ட நிலைமையில் அந்தத் திட்டம் இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசித்துப் பார்த்தால், உண்மை விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது ஒழுங்குப் பிரச்னை இல்லை; தன்னிலை விளக்கம் இல்லை. உட்காருங்கள். தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பல திட்டங்கள் போட்டு, இந்தக் கூவத்தை சீரமைக்க முடியாது என்ற காரணத்தால், இந்த கூவத்திலே இருக்கின்ற தண்ணீரை பெரிய பெரிய குழாய்களின் மூலமாக செங்கற்பட்டு மாவட்டத்

திற்கு கொண்டுபோய், அங்கே விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அந்த மெஷின்கள் எல்லாம் பிரயோஜனப் படாமல் இருக்கின்றன. இந்த மெஷின்களை எல்லாம் ஏலம் போடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குக் கொண்டு போகக்கூடிய சிறப்புத் திட்டம் நம்மிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

திரு. ப. சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டத்திலே என்ன பணிகள் மேற்கொள்ளப் பட்டன? அந்தப் பணிகள் அவரவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இப்போது சீராக நடைபெற்று வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதற்காகத் தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

ஏரி மராமத்துக்குத் தனிப்பிரிவு

* வினா எண் 472—திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-க்கு முன்னால் செயல்பட்டு வந்த ஏரி மராமத்துப் பிரிவை மீண்டும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை;

எலத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம்

* வினா எண் 473—திரு. எம். எம். ஏ. ரசாக்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை தாலூக்கா, எலத்தூர் கிராமத்தில், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடமும், அலுவலர் குடியிருப்பும் கட்டி நான்கு ஆண்டு காலமாகியும் கட்டிடம் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

1979 மார்ச் 19]

(ஆ) ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) செங்கோட்டை தாலூகா, எலத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், அலுவலர் குடியிருப்புக் கட்டிடம் இன்னும் கட்டப் படவில்லை.

(ஆ) ஆம். ஆனால் 23-6-78-ம் தேதி முதல் எலத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் குடும்பநல மையத்திற்காக புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(இ) செங்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், எலத்தூர், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கிடைக்கப்பெற்று, பங்குத் தொகையான ரூ.10,000ஐ ஊராட்சி ஒன்றிய கருவூலத்தில் செலுத்தியுள்ளார். திருநெல்வேலி மாவட்ட சுகாதார அதிகாரி, நிலம் கிடைத்ததற்கான ஒப்பாவணமும், பங்குத் தொகையை அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்ட விபரங்களை அனுப்புமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையரைக் கேட்டுக் கொண்டுள்ளார். அந்த நிலம் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு பங்குத் தொகையை அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டபின் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் மேற்கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்.

சொக்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம்

* வினா எண் 474— திரு. எம். எம். ஏ. ரசாக்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசித் தாலூகா சொக்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டி முடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகாலமாகியும் திறக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அதனை விரைவில் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) 12-10-77 முதல் ஆரம்ப சுகாதார நிலையம் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம நீட்டிக்கப்படுகிறது.

குன்னூர் அரசு மருத்துவமனை

* வினா எண் 475—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு ஒன்று துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : குன்னூர் அரசினர் மருத்துவமனையில் ஒரு 100 எம். ஏ, எக்ஸ்ரே கருவி ஏற்கனவே பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது,

திரு. க. அரங்கசாமி: அங்கு எக்ஸ்ரே கருவி அமைக்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை அது சரிவர இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா? அதைச் சரிவர இயக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : 1-1-78 முதல் 29-11-78 வரை 3107 எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மாதத்திற்கு சராசரி 259 படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து அந்த இயந்திரம் சரியாக இயங்குவதாகத்தான் தெரிகிறது.

திரு. க. அரங்கசாமி : கடந்த மாதம் நானே அந்த மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் எக்ஸ்ரே படம் எடுக்கவேண்டுமென்று அழைத்துச் சென்று வோல்ட்டேஜ் குறைவாக இருக்கிறது என்று காரணம் சொல்லி எடுக்கவில்லை. இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : வோல்டேஜ் குறைவது என்பது எல்லா இடத்திலும் மின்சாரத்தில் ஏற்படுகிற கோளாறுதான்; அது அந்த இயந்திரத்தின் கோளாறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குலசேகரன்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை:

* வினா எண் 476—திரு. இரா. அமிர்தராஜ் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

1979 மார்ச் 19]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Building for Veterinary Hospital at Kookal Union.

* Q. No. 477—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the steps taken for the construction of a Veterinary Hospital at Kookal Union in Gudalur Assembly Constituency?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கூக்கலில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்காக செயற் குறிப்பு ஏதும் பெறப்பட வில்லை. தற்போது கூக்கலிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கூட்லூரில் கால்நடை மருந்தகம் ஒன்று செயற் பட்டு வருகின்றது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : அங்கு உடனடியாக கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் இப்போது இல்லை யென்றாலும் அந்தப்பகுதி மலைவாழ் மக்களுடைய நலன்களைக் கருதி நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியையாவது விட அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ; இதுபற்றி அரசு ஆய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 478, 479 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா-விடை நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சனிக்கிழமை அன்று தமிழகத்தில் இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மேலும் மேலும் நலிந்து கொண்டிருக்கின்றன என்பதைக் குறித்து இந்த மன்றத்தில் அரைமணி நேர விவாதம் வேண்டுமென்று உங்களிடத்தில் நோட்டீஸ் கொடுத்தி

ருக்கிறேன். அமைச்சர் அவர்கள் சனிக்கிழமை பதில் சொல்லியதிலிருந்து எதிர்காலத்தில் நம்முடைய சர்க்கரை ஆலைகள் இயங்க முடியுமா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நாள் நேரத்தைக் குறிக்க வேண்டும். நேரத்தை பிக்ஸ் பண்ணிய பிறகு உங்களுடைய விளக்கத்தை எல்லாம் சொல்லுங்கள்.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்களது புது விடுதியில் நடைபெறும் திருட்டுகள் குறித்து

திரு. மு. ஜான் வின்செண்ட் : நேற்று இரவு 12 மணிக்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் புது ஹாஸ்டலில் 222 ஆம் எண் அறை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதைப் பற்றி இங்கே பேசப் பேச நிறைய அப்படிப்பட்டவர்கள் வந்து பிரச்சினை வளருகிறது. காவல் துறையினரும், நம்முடைய செயலாளரும் கலந்து தேவையான நடவடிக்கை எடுப்பார்கள். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். தொடர்ந்து இவ்வாறு அங்கு நடந்து வருவதாக எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. நானும் செயலாளரும் இதுபற்றிக் கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

நான் ஒரு வேண்டுகோள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கிறேன். உறுப்பினர்கள் அதிகமான விருந்தினர்களைக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கிடையில் இப்படிப்பட்டவர்களும் நுழைந்து விடுகிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் அவர்களை மற்றவர்களுடைய விருந்தினர் என்று நினைத்துக் கொள்கிறார்கள். பல பேர் இப்போது உள்ளே நுழைகிறார்கள். இரவில் ஜன்னல் வழியாக எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமையைப் போக்க உறுப்பினர்களும் ஒத்துழைக்கவேண்டும். இல்லையென்றால் இந்தப் பிரச்சினை வளர்ந்து கொண்டே போகும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, பொதுவாகச் சொல்வது சரியல்ல. நாங்கள் எல்லாம் குழுவிலே என்ன முடிவு செய்தோம் என்பதைப் பாருங்கள். முடிவு செய்தபடிதான் ஆட்களை அங்கே அனுமதிக்கிறோம், ஆகவே அவைகளை யார் செய்கிறார்கள் என்று கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கூத்தகுடி சண்முகம், திரு. அம்பிகாபதி ஆகியவர்களுக்கு குறிப்பிட்ட விருந்தினர்களுக்கு மேல் இல்லை என்பது எனக்குத் தெரியும், நான் எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மப்டியிலே போலீசார் அங்கே வருகிறார்கள், கேட்டால் நாங்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அப்படியானால் அவர்களை எஸ்டேட் ஆபீசரிடம் அழைத்துச் சென்று அவரிடம் காட்டி அவர்தானா என்று கேட்க வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்; நாங்கள் ஏன் அவர்களை அழைத்துக் கொண்டு போய்க் கேட்க வேண்டும்.

திரு. க. அன்பழகன்; தலைவர் அவர்களே, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கண்காணிப்புக்காகவோ பொறுப்புக் காகவோ சாதாரண ஆடையிலே செல்வார்களானால் அவர்களை யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்று கேட்பார் களானால் ஐடன்டிட்டி கார்டை இவர்களிடம் அவர்கள் காட்டி அதன் மூலம் இன்னார் என்று நிரூபிப்பதற்கு வழி இருக்கிறது. அதே போன்று விருந்தினர்கள் என்று வருகின்றவர்கள், யாருடைய விருந்தினர்கள் என்று காட்டுகிற முறையிலே பச்சை அட்டையோ அல்லது நீல அட்டையோ அவர்களுக்குத் தரப்பட்டு அவர்கள் அந்த அட்டையுடன் தான் இருக்க வேண்டும், அட்டையில்லாமல் இருந்தால் அவர்கள் யாருடைய விருந்தினராக இருந்தாலும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்ற நிலைமையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி இருந்தால் தான் பாதுகாப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; பேராசிரியர் சொல்வது இரவு நேரத்திலே வருவதாயிருந்தால் சரி, ஆனால் பகல் நேரத்திலே வருகிறவர்களை அட்டை கொண்டுவரவேண்டு மென்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உறுப்பினர்களுடைய 2, 3 விருந்தினர்கள் எஸ்டேட் ஆபீசரிடம் சென்று அட்டை வாங்கிக் கொண்டு வரலாம் அல்லவா?

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, எங்களைப் பார்க்க பகலிலே ஆயிரக்கணக்கான பேர்கள் வருகிறார்கள். பல பிரச்சினைகளைச் சொல்வதற்காக வருகி றார்கள். அப்போது எல்லாம் அட்டையை வாங்கமுடியாது. அதற்காகத்தான் சொல்கிறேன். குழுவிலே கொண்டு வாருங்கள். அங்கே நாங்கள் பேசி முடிவு செய்கிறோம்.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, ஹவுஸ் கமிட்டி கூடுவதே இல்லையே ஏன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் யோசனையை ஏற்றுக் கொள்கிறேன், உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேராசிரியர் ஒரு ஆலோசனை சொன்னார். பகல் நேரத்திலே எங்களிடம் வருகிறார்கள் என்றால் அவர்கள் கார்டு வாங்க முடியாது. ரொம்ப சிரமங்கள் வந்துவிடும், ஊரிலே எங்களைக் கேட்பார்கள், ஆகவே அதைப்பற்றி நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர் யோசனையே தவிர முடிவு அல்ல.

திரு. மு. ஜான் வின்சென்ட்: கதவுகளை அடைத்துவிட்டு படுத்து இருக்கிறோம் அறைக்குள்ளே. கதவுகளைத் திறந்து கொண்டு வந்து எடுப்பது இல்லை. பின்னாலே ஜன்னல் வழியாக கம்பை விட்டு எடுத்து இருக்கிறார்கள். ஆகவே விருந்தினர்கள் எடுப்பதில்லை, விருந்தினர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. போலீஸார் வராண்டாவிலேதான் நிற்கிறார்கள். ஆனால் பின் பக்கம் இருந்து—பின்பக்கம் பாது காப்பு இல்லை—எடுத்துவிடுகிறார்கள். எல்லா ஜன்னல் களையும் அடைத்துவிட்டு படுக்கச் சொல்கிறார்கள் காவல் துறையினர். எப்படி அவ்வளவு ஜன்னல்களையும் மூடமுடியும். ஆகவே இதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: மற்ற மாநிலங்களிலே அண்டை மாநிலங்களிலே கேரளா உட்பட, என்ன நிலைமைகளைக் கையாள் கிறார்கள் என்று பார்த்து அந்த முறையைக் கையாண்டால் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும். விருந்தினர்கள் என்றால் நம்மைப் பார்த்துவிட்டுப் போகிறவர்கள் ஒரு ரகம், ஆனால் அங்கே வந்து தங்கக்கூடியவர்கள் இருக்கிறார்களே, அதுதான் அதிகம். இந்தியாவிலேயே வேறு எந்தச் சட்ட மன்றத்திலேயும் இல்லாத முறையிலே விருந்தினர்கள் அங்கே வந்து தங்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்கேயும் அது அனுமதிக்கப்படுவதில்லை. அந்த விடுதியிலே யாருமே விருந்தினர்கள் இரவு நேரத்திலே தங்கக்கூடாது, பகல் நேரத்தில் வந்து விட்டுப் போகலாம், ரெப்ரசன்டேஷன் சொல்லிவிட்டுப் போகலாம். ஆனால் இரவு நேரத்திலே தங்குவது என்பது எந்தச் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேயும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே அந்த முறை யிலே முடிவு எடுத்து பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தக் குழுவிலே 5 ரூபாயோடு, இரண்டு பேர்கள் தான் தங்கலாம் என்ற முறையை நாம் வகுத்து இருக்கிறோம், அதை நல்ல முறையிலே அமல்படுத்த வேண்டும். அந்த விதிமுறைக்குப் புறம்பாக முரணாக யார் நடந்தாலும் நடவடிக்கை எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. ஏற்கெனவே வகுக்கப்பட்ட முறை அமல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 2, 3 நாட்களில் ஹவுஸ் கமிட்டி கூடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, அங்கே எங்களிடம் வருகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள், அவர்கள் வந்த வேலை உடனடியாக முடியவில்லையென்றால் அவர்கள் வேறு எங்கேயும் போகமுடியாது, அவர்களை அங்கேதான் தங்கச் சொல்ல வேண்டியிருக்கிறது.

[முற்பகல் 10-10]

இரண்டாவதாக, நேற்றிரவு என்னுடைய அறையிலிருந்து 70 ரூபாயும், சில தஸ்தாவேஜுகளும் திருடுப் போயிருக்கிறது. பின்பக்கமாக யாரோ ஏறி வந்து எடுத்திருக்கிறார்கள். எனவே வருகின்ற விருந்தாளிகளுக்கும் களவு போனதற்கும் தொடர்பு இல்லை. பின்பக்கமாக நடப்பதால் இதைத் தாங்கள் முடிவு எடுத்து எங்கள்—சட்டமன்ற உறுப்பினர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்,

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, சென்ற வாரம் இந்த அவையில் வழக்கறிஞர்கள் பிரச்னை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை வரும்பொழுது பேசலாம், உட்காருங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் ; எக்ஸ்பிளனேஷன் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வரும்பொழுது பேசலாம். அப்பொழுது சான்ஸ் தருகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, உறுப்பினர் விடுதிக்குள்ளே வரக்கூடியவர்கள் உறுப்பினர்களைப் பார்க்க வருகிறார்கள். உறுப்பினர்களுக்கு வேண்டிய....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஹவுஸ் கமிட்டியைக் கூட்டுகிறேன் என்று சொல்லிவிட்டேன். பிரச்னை தீர்ந்து விட்டது. இப்பொழுது மேலும் வளர்க்க வேண்டாம்.

(3) அறிவிப்பு

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மதுவிலக்குத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1979);

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1979).

(4) உரிமைப் பிரச்னைகள்

(அ) அலைஓசை, முரசொலி, தினகரன் நாளேடுகள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை.

9-3-1979 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார்கள். 6-3-1979 அன்று பேரவையில் எழுப்பப்பட்ட சில கோஷங்கள் பேரவைத் துணைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தும், 6-3-1979 தேதியிட்ட ''அலை ஓசை'' நாளேட்டிலும், 7-3-1979 தேதியிட்ட ''தினகரன்'' மற்றும் ''முரசொலி'' ஆகிய நாளேடுகளிலும் வெளியிடப்பட்டிருந்தன என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். உரிமை மீறல் பிரச்சனை பத்திரிகைகள் மீது இருப்பதால், அப்பத்திரிகைகளுக்கு எழுதிக் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை வழங்குவதாக நான் அறிவித்திருந்தேன்.

இப்பிரச்சினை குறித்துக் கேட்டதற்கு, ''அலை ஓசை'', ''தினகரன்'' நாளேடுகளின் ஆசிரியர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளனர்.

1979 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

அலை ஓசைதங்களது 9-3-79 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். அதில் தாங்கள் கேட்டுக் கொண்டவாறு, அலை ஓசை பத்திரிகை மீது எழுப்பப்பட்டுள்ள பிரச்சனை குறித்துக் கீழ்க் கண்ட விளக்கத்தை தருகின்றோம்.

''சட்ட மன்ற நடவடிக்கைகளை அதிக அளவு எங்களுடைய பத்திரிகையில் வெளியிட்டு வருகின்றோம். அதில் பேரவைத் தலைவர் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று நீக்கிவிடும் பகுதிகளை எங்கள் பத்திரிகையில் இடம் பெற்று விடாதபடி பார்த்துக் கொள்வதிலும் மிகுந்த அக்கறையோடு இருக்கின்றோம். 6-3-79 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தின் போது துணைத் தலைவர் அவர்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கிய பகுதிகள் எங்கள் பத்திரிகையில் மட்டுமல்லாமல் தினகரன், முரசொலி போன்ற பத்திரிகைகளிலும் வெளி வந்திருப்பது குறித்து உரிமைப் பிரச்சனை எழுப்பப்பட்டுள்ளது. தினமணி போன்ற ஏடுகள் கூட அன்று சட்டப்பேரவையில் துணைத் தலைவர் பேசியது சரியாகக் காதில் விழவில்லை என்றும் வெளியிட்டிருக்கின்றன. அன்றைய தினம் தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளும், அதன் காரணமாக எழுப்பப்பட்ட முழக்கங் களுக்கு இடையே துணைத் தலைவர் அவர்களின் தீர்ப்பு சரியாக அனைவரின் காதுகளிலும் விழுந்திருக்க இயலாது என்பதும் அனைவரும் உணர்ந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும். துணைத் தலைவர் அவர்களுக்கே தன்னுடைய உத்திரவு அனைவரின் காதுகளுக்கும் கேட்டிருக்காது என்ற வகையில் தான் அவர்கள் சபையிலிருந்து வெளியே செல்கையில் பேரவைத் தாழ்வாரத்தில் சில பத்திரிகை நிருபர்களிடம் அவையில் அவர் என்ன கூறினார் என்பதைத் தெரிவித்துள்ளார். அப்போது எங்கள் பத்திரிகை நிருபர் யாரையும் அழைக்கவும் இல்லை. அதற்குப் பிறகும் அவைத் தலைவர் அலுவலகத்தி லிருந்தோ அல்லது செய்தித்துறை அலுவலகத்திலிருந்தோ எங்களுக்கு அதுபற்றி செய்தி அறிவிக்கப்படவில்லை. ஆகவே, அவைத் தலைவரின் தீர்ப்பு வேண்டுமென்றே மீறப்படவில்லை. என்பதைத் தெளிவாக்குவதோடு உரிமை மீறிய செயல் எதையும் நாங்கள் செய்யவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கி றோம்.'

முரசொலி நாளேட்டின் ஆசிரியரும் மேற்கண்டவாறே விளக்கம் அளித்துள்ளார்.

''தினகரன்'' நாளேட்டின் விளக்கம். 'தங்களது 9-3-79 தேதியிட்ட கடிதம் கிடைத்தது,

'தினகரன்' மீது எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்சனைபற்றிக் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தருகிறோம்.

[பேரவைத் தலைவர்] [1979 மார்ச் 19

சட்டமன்றப் பேரவை நடவடிக்கை செய்தி அதிக அளவு தினகரனில் வெளியிட்டு வருகிறோம் என்பது தாங்கள் அறிந்ததே. பேரவைத் தலைவர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி உத்தர விடும் பகுதிகள் எங்கள் பத்திரிகையில் இடம் பெற்றுவிடாத படி பார்த்துக்கொள்வதில் மிகுந்த கவனத்துடன் இருந்து வருகிறோம்.

6-3-1979 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தில் பேரவைத் துணைத் தலைவர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கிய பகுதி தினகரனில் பிரசுரிக்கப் பட்டிருப்பதாக உரிமைப் பிரச்சினையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று வழக்கத்துக்கு மாறாக எழுப்பப்பட்ட முழக்கங் களுக்கு இடையே நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பு கேட்காமல் போய் விட்டது. தவிர அவைத் தலைவர் அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு இதுபற்றி செய்தி எதுவும் அறிவிக்கப்படவும் இல்லை. ஆகவே, பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பு வேண்டும் என்றே மீறப்படவில்லை என்பதை விளக்குவதுடன் சட்டமன்றப் பேரவையில் உரிமை மீறிய செயல் எதையும் செய்யவில்லை என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விளக்கங்கள் ஏற்கப்படக் கூடியனவாக இல்லை.

6-3-79 அன்று அவை நடவடிக்கைகள் 11-40 மணி அளவில் ஒருமுறை ஒத்திவைக்கப்பட்டு, அவை மீண்டும் 12-05க்குக் கூடி, மறுபடி அவையில் ஏற்பட்ட கூச்சல் குழப்பம் காரண மாக அவை மறுநாள் வரை ஒத்திவைக்கப்பட்டது.

அன்றைய நடவடிக்கைகளை மீண்டும் ஒருமுறை பார்வை யிட்டேன். 11-20 மணி அளவிலேயே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் "திரு. உமாநாத் அவர்கள் இனிமேல் பேசுவது அனைத்தையும் கூட அவை நடவடிக்கைக் குறிப்பி லிருந்து நீக்கப்பெறும் என்று உத்தரவிடுகிறேன்" என்று கூறியுள்ளார். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இவ்வாறு எச்சரித்தும் திரு. உமாநாத் அவர்கள் கேளாமல் பேசியதால் 11-25 மணி சுமாருக்குப் பேரவைத் துணைத் தலைவர் கீழ்க் கண்ட உத்தரவினை பிறப்பித்துள்ளார்—"நான் பேசக்கூடாது. என்று சொல்லியதிலிருந்து திரு. உமாநாத் தொடர்ந்து பேசியது அனைத்தையும் நீக்க உத்தரவிடுகிறேன்." இதற்குப் பின்தான் திரு. உமாநாத் அவர்களும் அவரது கட்சியைச் சார்ந்தவர் களும் மற்றவர்களும் கோஷங்களைக் கிளப்பினார்கள். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு 15 நிமிடங்கள் அவை நடந்தபின் அவை ஒத்திவைக்கப்பட்டது.

1979 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

எனவே, ''கூச்சல் குழப்பத்திற்கிடையே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டது தாங்கள் கேட்க முடிய வில்லை'' என்று பத்திரிகைகளின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருப்பது ஏற்கக் கூடியதாக இல்லை. அவ்வாறு கேட்க முடியாமற் போயிருந்தாலும், அவையில் ஏற்பட்ட குழப்பத்தினைப் பயன் படுத்திக் கொண்டு, பேரவைத் தலைவரின் தீர்ப்பு தங்களுக்கு கேட்கவில்லை என்று கூறுவது சரியல்ல. அவைத் தலைவரின் தீர்ப்பு விளக்கமாக இல்லை, அல்லது பத்திரிகை நிருபர்களுக்கு கேட்கவில்லை என்றால், அந்த நிருபர்கள் அவைத் தலைவரையோ அல்லது பேரவைச் செயலாளரையோ அணுகி பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்துத் தேவையான விளக்கம் பெறவேண்டும். பேரவையின் நடவடிக்கைகளைச் சரியானபடி வெளியிடுவதற்கு இவ்வாறு செய்வது அந்த நிருபர்களுடைய கடமையாகும். மேலும் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அன்று பேரவையைவிட்டு வெளியே போகும்போது, பல்வேறு பத்திரிகைகளைச் சேர்ந்த நிருபர்கள் அவரிடம் சென்று விளக்கம் கேட்டுள்ளனர். சில நிருபர்கள் செல்லவில்லை என்றால் அது அவர்களுடைய தவறு. பத்திரிகை நிருபர்கள் இம்மாதிரி நேரங்களில் அழைக்கப்படுவதில்லை. அவைத் தலைவர் தீர்ப்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்வது அவர்களது கடமை என்பதை மறுபடி வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

எனவே எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்றாலும். இதுவே முதல் முறையாக இருப் பதால், பத்திரிகை நிருபர்களை எச்சரித்துவிட்டு, மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் இப்பிரச்சனையை முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 10-20]

(ஆ) மின்சாரத்துறை அமைச்சர் மீது—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. நேற்றைய முன்தினம் 17—3—79 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் திரு. உமாநாத் அவர்களும் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை அவையில் எழுப்பினார்கள். இது குறித்து மாண்புமிகு மின்சராத்துறை அமைச்சர் அவர்களும் தம் விளக்கத்தை அளித்துள்ளார்கள். இதன் மீது என் தீர்ப்பை இன்று வழங்குவதாக நான் அறிவித்தி ருந்தேன்.

ஒரு குறிப்பிட்ட பிரச்னையில் வழக்குரைஞர்கள் சங்கம் தம் இசைவை அளித்தது, அல்லது அந்தச் சங்கத்தை கேட்டு, அதன் கருத்தை அறிந்து அரசு முடிவு செய்தது என்று மாண்புமிகு அமைச்சர் 'வர்கள் அறிவித்தார்கள் என்றும்,

ஆனால் வழக்குரைஞர்கள் சங்கம் தாங்கள் சம்மதம் அளிக்கவில்லை என்று கூறுவதாகவும், திரு. உமாநாத் அவர்களும் திரு. சுப்பு அவர்களும் குறிப்பிட்டு, எனவே அமைச்சர் அவர்கள் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தில், தாம் வழக்கறிஞர் சங்கங்களை கலந்துகொண்டதாகவோ அல்லது அவர்கள் சம்மதத்தைப் பெற்றதாகவோ கூறவில்லை என்றும், அச்சங்கத்தின் ஒரு பொறுப்புள்ளவர் முதல்வரின் தனிச் செயலரிடம் இசைவு அளித்ததையே, வழக்கறிஞர்களை கலந்து கொண்டு என்று தான் அவையில் அறிவித்தாகவும் கூறினார்கள்.

பேரவைக்குத் தரப்படும் தவறான செய்தியை, தவறு என்று தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அவையைத் திசை திருப்பும் எண்ணத்துடன் அத்தவறான செய்தி சொல்லப்பட்டால்தான் அது அவை உரிமை மீறிய செயல் ஆகும். மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திலிருந்து, அவர் தவறான செய்தியை தவறு என்று அறிந்திருந்தும் அவைக்கு அளித்தார் என்று கொள்வதற்கில்லை. அப்படி அவர் அளித்தார் என்பதற்கான எந்தவித ஆதாரமும், இப்பிரச்னையை எழுப்பிய உறுப்பினர்களால் கொடுக்கப்படவும் இல்லை. எனவே, இப்பிரச்னையில் மெலெழுந்தவாரியாகக் கூட அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்,

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) உறுப்பினர்கள் கொடுத்த பிரச்னைகள் எடுத்துக் கொள்வது குறித்து

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இன்னொரு உரிமைப் பிரச்னை நீண்டகாலமாக எடுக்கப்படாமல் இருக்கிறது. அது என்றைக்கு வரும்? மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது நான் இங்கு எழுப்பிய உரிமைப் பிரச்னை அது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இன்னும் இரண்டு நாட்களில் கொண்டு வரப்படும்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, நானும் ஒரு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

1979 மார்ச் 19]

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, அதேபோல 16-ம் தேதி ஒரு உரிமைப் பிரச்னையை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் அரங்கநாதன். இது முதலில் முடிந்து விடட்டும்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்

வழக்கறிஞர்கள் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு முழுவதிலும் உள்ள வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடாது என்ற முடிவு செய்ததால் எழுந்துள்ள அவசர முக்கியததுவம் வாய்ந்த நிலை குறித்து திரு. சுப்பு, திரு. துரைமுத்துசாமி, திரு. சி. கோவிந்தராசன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. மாரிமுத்து, திரு. ப. சந்திரன், திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். முதலில் திரு. சுப்பு அவர்களை சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை உண்மையிலேயே அவசரமான பதட்ட நிலைமையை உருவாக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லவில்லை, நீதிமன்றங்கள் செயல்பட முடியாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன. அதனால் இதை ஆராயும்போது, கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்தும், உணர்ச்சிவசப் படாமலும், அதிகார வர்க்கத்துக்கு அடிபணிந்து விடாமலும் முடிவு எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலும் மற்றும் எல்லா மாவட்ட வழக்கறிஞர்களும் ராமநாதபுரம் தவிர என்று போட்டிருக்கிறது-ராமநாதபுரத்தை தவிர எல்லா மாவட்ட வழக்கறிஞர்களும் கூடி முடிவு எடுத்திருக்கிறார்கள் — நீதிமன்றங்களுக்கு போவதில்லை என்று. அவர்களின் அசோசியேஷன் எல்லாம் இருக்கிறது. அவர்களையெல்லாம் விட்டு விட்டு, நாங்கள் வழக்கறிஞர்களை கலந்து ஆலோசித்தோம் என்று சொல்லுகிறது அரசு. இதிலே முக்கியமானது என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய விஷயங்கள் உண்மைக்கு மாறானது என்று சொல்கிறார்கள். வழக்கறிஞர்கள் சங்க காரியதரிசி லட்சுமிநாராயணன் முதல்வரின் அந்தரங்கச் செயலாளர் லட்சுமிநாராயணனைக் கண்டு பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி பேசவில்லை என்று வழக்கறிஞர் லட்சுமிநாராயணன் வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஓர் முதலமைச்சர் இப்படி ஒரு வழக்கறிஞர் மனம் புண்படும்படி

பேசலாமா? வழக்கறிஞர்கள் சங்கத்தில் தீவிரவாதிகள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். தீவிரவாதி என்றால் நக்ஸலைட்டுகள், அல்லது தி.மு.க. காரர்கள் என்று சொல்லி விடுவது. இது மட்டும் அல்ல, அவர்களுக்கு பார் கவுன்சிலுக்கு கையெழுத்து இல்லாத ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். அது யார் செய்கிற வேலை? ஒரு முதலமைச்சர் கையெழுத்து இல்லாத மொட்டை கடிதாசி அனுப்பலாமா? மொட்டை கடிதாசி முதலமைச்சராக மாறலாமா? அதுவும் பார் அசோசியேஷனுக்கு, பார் கவுன்சிலுக்கு ஒரு பொறுப்புள்ள முதலமைச்சர் அனுப்பலாமா? ஒரு மணிக்கு முடிவு எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். அவர்கள் அதற்காக $3\frac{1}{4}$மணிவரை காத்திருக்கிறார்கள். கையெழுத்துப் போடாத கடிதம் ஒன்று வருகிறது $3\frac{1}{2}$மணிச்கு. அதிலும் ஒரு எச்சரிக்கையை புகுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் என்ன கேட்கிறார்கள். நீதி விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்கள், போர்டு ஆப் என்குயரி தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். இதுவரை போர்டு ஆப் என்குயரி எதற்காவது போட்டிருக்கிறார்களா? அடிபட்டவர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவர் அடிபட வேண்டியவர்தான். அது வேறு இருந்தாலும், வழக்கறிஞர் என்று வரும்போது தங்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்கிறார்கள். அடி பலமாக இருக்கிறது, முகம் வீங்கி விட்டது என்று சொன்னார்கள். பாவம் முகம் வீங்கி விட்டது என்று பேசாமல் இருக்க முடியுமா? நீதி விசாரணை வேண்டும், போர்டு ஆப் என்குயரி வேண்டாம் என்று சொல்கிறார்கள். அடித்த சப் இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள் என்றால் இதில் என்ன தப்பு? கோடம்பாக்கத்தில் ஒரு துணை நடிகை சம்பந்தப்பட்ட விஷயத்தில், நமது முதலமைச்சர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் பிரச்னையை சுமூகமாக்க வேண்டும். பிரச்னைக்கு சம்பந்தமில்லாத விஷயங்கள் எல்லாம் பேசக்கூடாது.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே. இதையெல்லாம் மறுபடியும் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். பிரச்னைக்கு சம்பந்தம் இருப்பதால் சொல்கிறேன். அந்த கோடம்பாக்கம் நடிகைக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து பாயிண்டைப் பற்றிப் பேசவும். இந்த நடிகை எல்லாம் வேண்டாம்......

1979 மார்ச் 19]

திரு. க. சுப்பு : அதைப் பிரச்னையில் சம்பந்தப்படுத்தி விடுகிறேன். அந்த நேரத்தில், கைது செய்ய அஸிஸ்டெண்ட் கமிஷனருக்குத்தான் உரிமை உண்டு என்று கைது செய்த சப் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்தார்கள். அதை செய்யத் தெரிந்த முதலமைச்சருக்கு இதற்கு மட்டும் தெரிய வில்லையா? அந்த திறமை நமது முதலமைச்சருக்கு இல்லையா? ஒரு துணை நடிகையை விட வழக்கறிஞர் என்ன குறைவா? அப்போது போலீஸ்காரர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள். ஒரு இன்ஸ்பெக்டர், 4 கான்ஸ்டேபிள்கள் ஏ. சி.க்கு பதிலாகச் சென்று அரெஸ்ட் செய்து வந்தார்கள் என்பதற்காகச் சஸ்பெண்டு செய்ய வேண்டும் என்று சொல்லவில்லையா? மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனில் நடித்த** துணை நடிகைக்கு இந்த நடவடிக்கை எடுக்க முடியுமென்றால், வக்கீல்களைப் பொறுத்த வரையில் அந்த நடவடிக்கை எடுக்காதது ஏன்? அரசாங்கம் எடுத்துள்ள ஒரு அணுகு முறையின் காரணமாக இன்றைக்கு ஒரு அபாயகரமான நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமானால் அரசாங்கம் இரண்டு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒன்று. நீதி விசாரணை வைக்க வேண்டும். மற்றொன்று, அந்த போலீஸ் அதிகாரி சஸ்பெண்டு செய்யப்பட வேண்டும். இப்போது சஸ்பெண்டு செய்தால் என்ன? மறுபடியும் அவரைச் சம்பளம் முழுமையும் கொடுத்து சேர்த்துக் கொள்ளப் போகிறீர்கள். அதுதான் இந்த அரசாங்கத்தில் வழக்கமாக நடந்து வருகிறது. ஆகவே, நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புவது. ஜுடிசியல் என்கொயரி தேவை, போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்ய வேண்டும். இன்று ஒரு பதட்ட நிலை நிலவியிருப்பதால், இது குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும். அப்படி ஒத்தி வைத்தால், சுந்தரபாண்டியன் கதை எல்லாம் நான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் ** நடிகை என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த * என்ற வார்த்தையை எடுத்து விடுவது நல்லது. அந்த வார்த் தையை யாருமே பயன்படுத்தக் கூடாது. பெரியவர்கள் பயன் படுத்துவதாகக் கேள்வி. ஆகவே, அந்த வார்த்தையைப் பயன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பட்டது.

படுத்தத் தேவையில்லை. துணை நடிகை என்று இருக்கலாம். ஏனென்றால் அந்த விவகாரம் ஒரு முறை சட்டமன்றத்தில் பேசப்பட்டு, அது பதிவாகியிருக்கிறது. ஏற்கெனவே பதிவாகி யிருக்கின்ற ஒன்றைத்தான் இங்கே திரு. சுப்பு அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறாரே தவிர வேறு அல்ல. ஆகவே, * நடிகை என்பதற்கு பதிலாக 'துணை நடிகை' என்று மாற்றிக்கொள்ள தாங்கள் ஆணையிடவேண்டும் என்று கேட்டுக்கொளகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. மு. கருணாநிதி : போலீஸ் அதிகாரிகள் சஸ்பென்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள், வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூறி, இந்த முறை பின்பற்றப் படவேண்டும் என்பதற்காக ஒரு முன் உதாரணம் தான் கொடுத்து இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்...

திரு. க. சுப்பு : அது என்ன அசிங்கமான வார்த்தையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது போல், * நடிகை என்பதை நீக்கிவிட்டு, துணை நடிகை என்று மாற்றவேண்டும் என்று உத்தரவிடுகிறேன். இன்னும் 5 பேர் பேசவேண்டியிருப்பதால், திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன் ; தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான, சீரியசான விஷயம். மற்றவர்களுக்காக நீதிமன்றங்களில் பேசி நீதி பெறுவதற்காக இருக்கக்கூடிய அந்தச் சமுதாயம், அவர்களுக்காகவே நீதி கோரி இன்று மாநிலம் முழுவதும் இயக்கம் நடத்தவேண்டிய ஒரு துர்பாக்கிய மான சூழ்நிலைக்கு வழக்கறிஞர்கள் ஆளாக்கப்பட்டு இருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை வழக்கறிஞர் தாக்கப்பட்டார் போலீசாரால் என்று அங்கே உள்ள பார் அஸோசியேஷன் தெரிவித்து, அந்தப் போலீஸ் அதிகாரியை சஸ்பெண்டு செய்யவேண்டும் என்று தான் ஆரம்பத்தில்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப் பட்டது.

இருந்து இன்று வரையில் கோரிவருகிறார்கள். அன்று இங்கே கூறப்பட்டது, அப்படி அவர் தாக்கப்படவில்லை என்று. அது மட்டுமல்ல அய்யாத்துரை என்று வழக்கறிஞர் முதலமைச்சரைச் சந்தித்ததாகவும், தான் போலீஸ் அதிகாரியைத் திருப்பித் தாக்கியதாகவும் ஒப்புக் கொண்டதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதுமட்டுமல்ல, அப்படி ஒரு மறுப்பு வந்த பிறகு மதுரையைச் சேர்ந்த பார் அஸோசியேஷனைச் சேர்ந்த திரு. ராம சுப்பிரமண்யம் வேதனையோடு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு அடுத்தாற்போல் இங்கேயுள்ள பார் கவுன்சில், பார் அஸ்ஸோசியேஷன்களை கலந்து தான் போர்ட் ஆப் என்கொயரி போடப்பட்டது என்று சொல்லப் பட்டது. பார் அஸோசியேஷன், பார் கவுன்சில் அப்படி தாங்கள் கலக்கப்படவில்லை என்று மறுத்து இருக்கிறார்கள். மூன்றாவதாக, லட்சுமிநாராயணன் என்கிற வழக்கறிஞர் பார் அஸ்ஸோசியேஷன் செக்ரடிரி என்று தன்னைக் கூறிக் கொண்டு முதலமைச்சரின் பிரைவேட் செக்ரடரி லட்சுமிநாராயணனோடு பேசியதையும் மறுத்து இருக்கிறார்கள். அப்படி போர்ட் ஆப் என்கொயரி நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர் வேதனையோடு குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான்காவதாக, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; எல்லாவற்றையும் இப்போதே பேசி விடப்போகிறீர்களா? பதட்ட நிலை எப்படி இருக்கிறது என்பதைமட்டும் சொல்லி இது எப்படி ஒத்தி வைக்க வேண்டியது அவசியம் என்பதை மட்டும் குறித்துச் சொல் லுங்கள்.

திரு. சி. கோவிந்தராசன் ; சனிக்கிழமை ஊர்வலத்தில் கல் வீசியதாக கூறப்பட்டது. அப்படி கல் வீசவில்லை என்றும் வழக்கறிஞர்களால் மறுக்கப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 10–30.]

அப்படியானால் படிப்படியாக, இந்த அவையிலே அமைச்சர் களால் சொல்லப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் மறுக்கப் பட்டிருக்கின்றன. அதற்காக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய பிரச்சனை ஒரு பக்கம் இருக்க, இது உரிமைப் பிரச்சனையாக வரக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது; பல்வேறு சம்பவங்கள் குறித்து இங்கே சொல்லப்பட்டது. ஒவ்வொன்றும் இல்லை, இல்லை என்று மறுக்கப்பட்டிருக்கின்றன. இதுதான் உண்மை என்று இங்கே சொல்லவும், சம்பந்தப்பட்ட நபர்கள் இல்லை என்று மறுக்கின்ற நிலைமையும். இந்த அவைக்கு தவறான தகவலைக் கொடுத்து திசைதிருப்பு கின்ற செய்கையும் விசித்திரமாக இருக்கிறது என்பதால் இதிலே உரிமைப்பிரச்சனையும் அடங்கி இருக்கிறது.

[திரு. சி. கோவிந்தராசன்] [1979 மார்ச் 19

அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சனையிலே அதிதீவிரவாதிகள் தலையீடு இருக்கிறது ; அவர்கள் தங்கள் கையிலே எடுத்துக் கொண்டார்கள் என்று கடிதம் எழுதியது சீனியர் லாயர் களுடைய மனதை புண்படுத்துவதாக இருக்கிறது. இப்படி பதில் எழுதுவது இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணாது. அவர்கள் கேட்பது, போலீஸ் அதிகாரி உள்ளிட்ட 'போர்ட் ஆப் என்குயரி' கூடாது ; எவிடன்ஸ் ஆக்டிவ்க்கு இது புறம்பாக இருக் கிறது. அதனால் நீதிபதி விசாரணை வேண்டுமென்று கேட் கிறார்கள். அதை அனுமதிக்காமல், அவர்களுடைய மனம் புண் படும் வகையில், இந்தப் பிரச்சனைக்கு வேறு ஆட்கள் தலைமை தாங்குகிறார்கள் என்று சொல்லி, பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதைப் பெரிது படுத்தும் நிலைதான் இருக்கிறது. அதனால் நாடு முழுவதும் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் நடவடிக்கை 'எரிகிற நெருப்பில் மேலும் எண்ணெய் ஊற்றுவது' போல இருக்கிறது. அதனால் தற்போது இது ஒரு சூடான பிரச்சனையாக இருக்கிறது. என்றைக்கும் எந்தவிதமான காலகட்டத்திலும் நாடு பூராவும் இப்படிப்பட்ட ஒரு இயக்கத்தை வழக்கறிஞர்கள் தொடங்கியது கிடையாது. ஆகவே, இந்தப் பிரச்சனையைப் பற்றி மேலும் விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி ; பேரவைத் தலைவரவர்களே, தமிழக வரலாற்றிலேயே இல்லாத ஒரு விஷயம் இப்போது நடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் உங்களுடைய ஒழுங்குப் பிரச்சனையைச் சொல்லுங்கள். தங்களுடைய பெயரை நான் படிக்கவில்லை. நானும் இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் என்று கேட்கப்போகிறீர்களா, அது என்னவாயிற்று என்றுதான் நீங்கள் இப்போது கேட்கலாம் ; விவாதத்தில் ஈடுபடக்கூடாது.

திரு. மு. அம்பிகாபதி ; நானும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதால் என்னையும் அனுமதிக்கிறீர்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உங்கள் பெயர் இருக் கிறது. திரு. ஜேம்ஸ் அவர்களுக்குப் பின்னால் பேசுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி ; மிக்க நன்றி.

திரு. ஜே. ஜேம்ஸ் ; தலைவரவர்களே, வரலாறு காணாத நிகழ்ச்சி தமிழ்நாட்டில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து வழக்கறிஞர்களும்

1979 மார்ச் 19] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வேலை நிறுத்தம் செய்வதன் காரணமாக இன்று தமிழ்நாட்டில் நீதிமன்றம் எதுவும் செயலாற்ற வழி இல்லாமல் இருக்கிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

கடந்த 16-ந்தேதி அன்று ஆரம்பித்து இன்றுவரை வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்றையதினம் அவர்கள் கோரிக்கை நிறைவேறும் வரை வேலை நிறுத்தம் செய்வது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆக, இந்த வேலை நிறுத்தத்தினால் இந்த நாட்டில் எந்த அளவுக்கு பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை சட்ட மன்றத்தின் உள்ளே இருந்து நாம் கிரகிக்க முடியவில்லை என்றாலும் நாட்டில் எத்தனையோ பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் கிரிமினல் கோர்ட் இல்லை என்றால் எந்த அளவு பதட்டம் ஏற்படும்; சிவில் கோர்ட் இல்லை என்றால் எந்த அளவு மனித உரிமை பாதிக்கப்படும் என்பதை எல்லாம் விளக்க நேரம் இல்லை. அவைகளுக்கு எல்லாம் காரணம் என்ன என்று எண்ணிப்பார்க்கும்போது ஒரு போலீஸ்காரர் வழக்கறிஞரை அடித்திருக்கிறார். அதைத் தொடர்ந்து தேவையான நடவடிக்கையை இந்த அரசு ஆராய்ந்து எடுப்பதற்குப் பதிலாக மூன்று பேர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமித்து இருக்கிறார்கள், ஒரு நீதிபதி, ஒரு போலீஸ் அதிகாரி ஒரு வழக்கறிஞர்—இந்த குழுவை வைத்து விசாரணை நடத்துவது தவறு என்று நான் இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வழக்கறிஞர்கள் இதை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல; இதுவரையில் வழக்கத்தில் இல்லாத ஒரு விசித்திரமான நீதிவிசாரணையாக இது இருக்கிறது. யார்மீது விசாரணை நடத்த வேண்டுமோ அதே இலாகாவைச் சேர்ந்த அதிகாரி விசாரணை நடத்துவது என்றால் இது ஒரு விளையாட்டுத்தனமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, நீதிபதி விசாரணை என்றால் அது ஒரு நீதி மன்றத்திற்கு ஒப்பாகும். நீதி மன்றத்தில் இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தால்தான் நிர்வாகத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரியைச் சேர்த்து நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; இது ஒரு விசித்திரமான முறை.

இது ஒரு கண்டம்ப்ட் ஆப் கோர்ட் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது ஒரு நீதிபதி விசாரிப்பதற்கு பதிலாக போடப்பட்டிருக்கின்ற குழுவிலே போலீஸ் அதிகாரியையும் இணைத்து விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது கண்டம்ப்ட் அப் கோர்ட் ஆகிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றங்கள் இன்டிப்பென்டன்டாகச் செயல்படுவதற்குப் பதிலாக அவை கட்டுப்பட்டுதான் செயல்படவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு ஒரு போலீஸ் அதிகாரியையும் இணைத்து இந்த விசாரணைக்

குழு அமைத்திருக்கிறது. இதைத்தான் வழக்கறிஞர்கள் இன்று எதிர்க்கிறார்கள். நீதிபதிதான் விசாரணை நடத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். மேலும் சம்பந்தப் பட்ட அதிகாரியை சஸ்பென்ட் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பதிலாக நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த அதிகாரியை, அவரது மனைவி வேலை செய்கிற இடத்திற்கே அதாவது திருமங்கலத்திற்கு இட மாற்றம் செய்திருக்கிறார். ஆகவே நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது இதுவரையிலும் நிகழ்ச்சிகள் இப்படியெல்லாம் நடந்து விட்டன. இந்த மன்றத் திலே இது குறித்துப் பேசுகின்றபோது மாண்புமிகு முதலமைச்ச ரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது சட்டம் தனது வேலையைச் செய்யும் என்று தெரிவித்தார்கள். இவ்வாறு வழக்கறிஞர்களைப் பார்த்து சட்டம் தனது வேலையைச் செய்யும் என்று எச்சரிப்பது சரியல்ல. இது குறித்து இந்த நாடே எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. சட்டம் தனது வேலையைச் செய்யும் என்று சொல்கின்ற முதலமைச்சர் சம்பந்தப் பட்ட போலீஸ் அதிகாரிமீது இந்தச் சட்டத்தை ஏவி விடுவ தற்குப் பதிலாக வழக்கறிஞர்கள் மீதே ஏவி விட முயலுகின்ற தன்மையினை ஏற்றுக்கொள்ள முடியாது. இது மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு இதனை விவாதித்தால்தான் இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும். நிலைமை இன்னும் மோசமடையாமல் பார்த்துக்கொள்ள இயலும். ஆகவே உடனடி யாக இந்தக்காரியம் குறித்து நாம் விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, 17-ஆம் தேதி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எழுதிக்கொடுத்திருந்தேன். அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஒரு 5 நிமிடத்திற்கு முன்புதான் எங்களுக்கு பதில் வந்தது. ஆகவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சனிக்கிழமை கொடுக்கப்பட்டது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. காரணம் அதற்கு முன்னாலே பின்னாலே இருந்த நிலையே வேறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே,

1979 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகப் பேச வேண்டும்.

*திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் செய்கின்ற அளவுக்கு இந்தப் பிரச்சினை நடந்துகொண்டிக்கிறது. இந்தப் பிரச்சினையில் அவர்களுடைய முக்கியமான கோரிக்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நான் மதிப்பிற்குறிய வழக்கறிஞர் திரு. வானமாமலை அவர்களைக்கூட சந்தித்துப் பேசினேன். அப்போது அவர்கள் வழக்கறிஞர் அய்யாத்துரையைத் தாக்கிய அந்த அதிகாரியை சஸ்பென்ட் செய்யவேண்டும்.

அவர்களை ஊர் மாற்றம் செய்வது பெரிதல்ல, சஸ்பென்ட் செய்யவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே அவ்வாறு சஸ்பென்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்த விசாரணையை ஹைகோர்ட் நீதிபதியைக் கொண்டு நடத்தவேண்டும். இதைத்தான் வலியுறுத்தி அவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இன்றைக்கு ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வழக்கறிஞர் திரு.வானமாமலை அவர்கள் கூட அவ்வாறு ஹைக்கோர்ட் நீதிபதியை வைத்து விசாரணை செய்யவேண்டும் என்று வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-40]

எனவே இதைப்பற்றி விவரமாக விவாதிக்கவேண்டும். அரசாங்கத்தினுடைய தெளிவான கருத்து என்ன என்பதையும் தெளிவாகச் சொல்லவேண்டும். சுற்றி வளைத்து ஏதோ நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று கூறிக்கொண்டிருக்காமல், இதைப்பற்றி விவாதிக்க முன் வரவேண்டும். அதிகார மனோபாவத்தை விட வேண்டும். அதற்காக அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன.

* திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழகத்தில் இருக்கின்ற வழக்கறிஞர் சங்கத்தின் முடிவு, நேற்றையதினம் ஒற்றுமையோடு, கட்டுப்பாடோடு எடுத்த முடிவின் விளைவாக இன்றைக்கு பாதிக்கப்பட்டிருப்பது யார் என்று

சொன்னால், தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்கள் தான். அந்த வகையில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கிறோம். இதை கவுரவப் பிரச்னையாக அல்லது பலப்பரீட்சையாக கருதாமல் சுமூகமாக ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும் என்று அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அங்கே தமிழக வக்கீல்கள் சங்கம் என்ன சொல்லியிருக்கிறது என்றால், அரசாங்கம் அறிவித்தது போல், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ஒருவரும், அப்பாற்பட்டு போலீஸ் இலாகாவிலிருந்து ஒருவரும், அதற்கு மேல் வக்கீல்களில் ஒருவரும் போட்டு ஒரு விசாரணைக் குழுவை அமைத்து இருப்பதை— அந்த முடிவை வக்கீல்கள் சங்கம் ஆட்சேபிக்கிறார்கள். அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கேட்டிருப்பது, ஹைக் கோர்ட் நீதிபதி ஒருவரை இதைப்பற்றி விவாதிப்பதற்கு நியமிக்கவேண்டும், அத்துடன் இது சம்டந்தப்பட்ட போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது.

அடுத்தாற்போல், இன்றைக்கு தமிழகத்திலுள்ள எல்லா கோர்ட்டுகளும் மூடப்பட்டிருக்கின்றன. அனைத்து வழக்கறிஞர்களும் கோர்ட்டுக்குச் செல்லவில்லை. டாக்டர்கள் என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் மக்களது உயிருக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள் ஆனால் வழக்கறிஞர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் மக்களது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லாததால் எந்தவிதமான பாதுகாப்பும் மக்களுக்கு இல்லாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. கடவுளால்தான் ஆக்கவும் அழிக்கவும் முடியும். அப்படிப்பட்டவர்கள் இந்த வழக்கறிஞர்கள். இப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு கோர்ட்டுகளுக்குச் செல்லவில்லை என்றால் இதனால் பாதிக்கப்படுகிறவர்கள்— ஏழை எளிய மக்கள். இன்றைக்குக் கோடிக்கணக்கான மக்கள் நல்ல நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக கோர்ட்டுகளுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். பல சிவில் வழக்குகளில் பலம் உள்ளவர்கள் தங்கள் சொத்துக்களை அபகரித்து வைத்துக்கொண்டிருந்தால் அதை மீட்டுக் கொள்வதற்கு கோர்ட்டுக்கு செல்லவேண்டியிருக்கிறது. ஜாமீனில் வரவேண்டியிருக்கும். இன்றைக்கு அப்படி வரமுடியாத நிலையில் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அத்துடன் சட்டக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. இதுவும் வேறு முக்கிய விஷயமாக இருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக விரிவாக விவாதிப்பதற்காக அவை அலுவல்களை ஒத்தி வைத்து இந்த விவாதத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கம் நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்றால், அரசாங்கத்தின் அமைப்பு, நீதித்துறை, சட்டத்துறை. சட்ட

1979 மார்ச் 19] [திரு. ப. சந்திரன்]

மன்றத் துறை இவைகள் எல்லாம் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட நீதித்துறை இன்றைக்கு செயல் இழந்து உயிர் இழந்து காண்கிறது. நாட்டில் சாதாரண மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதே நேரத்தில் பார் கவுன்ஸில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தார்கள். முக்கிய மாக மாவட்ட நீதிபதி தகுதியிலுள்ள ஒருவரை நியமித்து இந்தப் பிரச்னையைப்பற்றி விசாரிக்கவேண்டும் என்றும், காவல்துறை அதிகாரியை பதவி நீக்கம் செய்யவேண்டும் என்றும் பார் கவுன்ஸில் உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய மார்க்கபந்து அவர்கள் மதிப்பிற்குரிய பாண்டியன் அவர்கள் சேர்ந்துதான் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, அரசு நீதித் துறையில் அக்கறை கொண்டு—முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் தேர்தல் வெற்றி பெற்றிருந்தது— செல்லுபடியாகாது என்று அவர்கள் ஆட்சியில் இருந்தபோதே ஒரு நீதிபதி தீர்ப்புக் கூறினார்கள். ஆகவே நீதிபதிகள் மீது நம்பிக்கை வைத்து — நீதிபதி ஒருவரை நியமிக்கவேண்டும். காவல் துறையினரை இந்த விசாரணைக் குழுவில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இந்தப் பிரச்னையில் நீதிபதி பாரபட்சமற்ற முறையில் செயல்படுவார்கள் என்பதை ஏற்றுக் கொண்டு, மாவட்ட நீதிபதி தகுதியுள்ள ஒருவரை இந்தப் பிரச்னையைப்பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கவேண்டும். மேலும் சட்டக் கல்லூரி மாணவர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டி ருக்கின்றார்கள் என்பதை பார்க்கும்போது, பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருப்பதால், இதைப்பற்றி மேற் கொண்டும் விரிவாக விவாதிப்பதற்காக சபையின் அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் யதார்த்த நிலையில் நாம் அணுகு முறையை ஏற்கெனவே மேற்கொண்டிருந்தால், இவ்வளவு தூரம் வளர்ந் திருக்காது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஏற்கனவே ஒரு வழக்கறிஞர், ஒரு போலீஸ் அதிகாரியால் தாக்கப்பட்டிருக் கிறார் என்பது ஒரு குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா, இல்லையா என்று கேட்கும் போது, விசாரணை செய்துதான், மற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்வது, நீதியின் தேவை. அதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இங்கே ஏற்பட்டிருக்கிற பிரச்னையை கவனத்தில் வைத்து 'பென்டிங் என்கொயரி, ஹீ இஸ் கெப்ட் அண்டர் சஸ்பென்ஷன்' என்று சொல்லியிருக்க வேண்டும். இந்த விசாரணை முடியும் வரையில் அவர் சஸ்பென்ஷனிலே இருக்கவேண்டும் என்று அரசாங்கம் அன்றைக்கு முடிவு எடுத்திருந்தால் நல்லது. இப்படி பல தடவை எடுத்திருக் கிறோம்; அது தேவையுங்கூட. உடனடியாக இப்படி செயல்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 மார்ச் 19

படுவதுதான் நிர்வாகம். ஏதோ ஒரு என்கொயரி கமிஷன் போல், அவ்வப்போது இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கவேண்டியதில்லை. இப்படிச் செய்தால், அது ஒரு என்கொயரி கமிஷனைப் போல் தான் இருக்குமே தவிர, நிர்வாகம் செய்வதாக அமையாது. 'பெண்டிங் என்கொயரி' என்று உடனடியாக அந்த போலீஸ் சப் — இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்துவிட்டு அதற்குப் பிறகு விசாரணை செய்து தீர்ப்பளித்திருக்கலாம். அவர்கள் டிபார்டுமெண்டிலேயே ஒரு என்கொயரியை வைத்திருக்கலாம். அதை விட்டு விட்டீர்கள். இன்றைக்குப் பிரச்னை மிகப் பெரிய அளவுக்கு பூதாகாரமாக வளர்ந்து, வழக்கறிஞர்கள் இப்படி நாடு முழுவதும் இந்த நிலைமைக்குப் போவது என்பது, எங்களுக் கெல்லாம் பெருத்த வேதனையை அளிக்கிறது.

இப்போது ஏதோ இந்த தனிப்பட்ட இந்த வழக்கறிஞருக்கு ஏற்பட்ட பிரச்னை அல்ல. வழக்கறிஞர்கள் சமுதாயத்திற்கு இது ஒரு அறைகூவலாக அமைந்துவிட்டிருக்கிறது. இரண்டு பொறுப்பிலே உள்ளவர்களும் பேசுகிறார்கள். ஒன்று, முதல் அமைச்சர் அவர்கள் பதவிப் பிரமாணம், விசுவாசப் பிரமாணம் சட்டப்படி எடுத்துக்கொண்டிருக்கிறார். இரண்டு, இதேமாதிரி வழக்கறிஞர்கள் 'அட்வகேட்ஸ் ஆக்டின்கீழ்' சட்ட விதிகளின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டுதான் வழக்கறிஞர் களாக வருகின்றோம். ஆகையால் உங்களுக்கும் பொறுப்புண்டு; எங்களுக்கும் பொறுப்புண்டு. இன்னும் சொல்லப்போனால், உங்களை விட எங்களுக்குப் பொறுப்பு அதிகம். முதல் அமைச்சர் அவர்களுக்கும், இன்னொரு துறைக்கும் தகராறு வந்துவிட்டால், அந்தத் தகராறை நடத்தி, வாதிடக்கூடிய நிலையில், நாங்கள் உங்களைவிடப் பெரியவர்கள். ஆகவே, நான் இன்றைக்குச் சொல்வது முதல் அமைச்சர் அவர்கள் அந்த குறிப்பிட்ட வழக்கறிஞர் உண்மைக்கு மாறாகச் சொல்கிறார் என்கிறார். லட்சுமிநாராயணன் என்பவர் முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு பின்னர் ஒன்றைச் சொல்கிறார் என்ற வாதத்தை முதல் அமைச்சர் சொல்கிறார். அய்யாத்துரை என்ற இந்த அட்வகேட் இப்படி நானும் அடித்தேன் என்று ஒப்புக்கொண்டதாக முதல் அமைச்சர் சொல்கிறார். அதற்கு மாறுபட்ட கருத்தை லட்சுமிநாராயணன் அவர்களும், அந்தக் குறிப்பிட்ட வழக்கறிஞரும், மற்றவர்களும் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். பொது வாழ்க்கையில் இது எவ்வளவுதூரம் களங்கப்படுத்தும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டக் கருத்தைப் பேசிக்கொண்டிருந்தால், மக்களிடையே இது பரவி, பொது வாழ்க்கையை பாதிக்கும் என்பதை இந்த அரசு சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

எனக்குத் தெரிந்த வரையில், இது வரலாற்றிலேயே நடைபெற்றதும் நடைபெறாததுமான ஒன்று. அதன் காரணமாக வழக்கறிஞர்கள் சங்கம் வழக்கு மன்றங்களுக்குச் செல்ல

1979 மார்ச் 19] *[திரு. எம். ஏ. லத்தீப்]*

மாட்டோம் என்று முடிவெடுத்திருப்பதன் காரணமாக, அந்த வழக்கு மன்றங்கள் காலியாக இருக்கும் காட்சி, வரலாற்றிலே நடைபெற்றும் இருக்கிறது, இன்றைக்கு நடைபெற்றதாகவும் இருக்கிறது 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி மொழிப் போராட்டம் நடைபெற்ற காலத்திலும், எல்லா நீதி மன்றங்களுக்கும் அன்றைக்கு ஒருநாள் கோர்ட்டுக்குச் செல்லாமல் இருப்போம் என்று முடிவெடுத்து அதன் காரணமாக, ஆர்பாட்டத்தை நடத்தியிருக்கிறோம். அதற்குப் பிறகு, இந்த மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டாலும், தொடர்ந்து, இப்படி மறியல் செய்வது என்ற ஒரு அறிவிப்பு அப்போதுகூட வரவில்லை. ஆனால், இன்றைக்கு இத்தகைய ஒரு போராட்டத்தை தொடர்ந்து நடத்துவது என்று சொன்னால், இந்தப் பிரச்னை எவ்வளவு தூரம் பெருகியிருக்கிறது எந்த அளவுக்கு உருவாக்கியிருக்கிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதிலே இந்த அரசாங்கத்தின் அணுகு முறை காரணமாகவும், சட்டம் அதன் வேலையைச் செய்யும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்வதும் — அதுவும் யாரிடத்திலே சொல்லுகின்றார்கள்? வழக்கறிஞர்களாகிய எங்களிடத்தில், 'சட்டம் ஒரு இருட்டறை' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அந்த இருட்டறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ரொம்பவும் ஆவேசமாகப் பேசவேண்டாம். சீக்கிரம், பிரச்னையின் மீது ஒரு முடிவுக்கு வாருங்கள். பேசுவதாக இருந்தால், ஒரு மணி நேரம் கூடப் பேசலாம்.

[முற்பகல் 10-50]

திரு. எம். ஏ. லத்தீப்: விஷயம் சூடாக இருக்கிறது. நான் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன். வழக்கறிஞர் சமுதாயத்தைச் சார்ந்தவன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உணருகிறேன். மேலும் சூடாக்க வேண்டாம். அமைதிபடுத்துகிற கடமையை ஆற்றுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: நாங்கள் இல்லாவிட்டால் சட்டமே இல்லை. யாருக்கும் சட்டத்தைப் பற்றிப் பேசுகிற உரிமையும் இல்லை, அறிவும் இருக்காது. அனுபவமும் இருக்காது. சட்டத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் நாங்கள் தான். எங்களைப் பொறுத்துத் தான் சட்டம். நாங்கள் அந்தச் சட்டத்திற்கு எங்களுடைய விளக்கங்களைத் தரத்தயாராக இருக்கிறோம். யாருடைய சவாலையும் இந்த வழக்கறிஞர்கள் சமுதாயம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 மார்ச் 19

வேறு பிரச்னைகளைப் பேச விரும்பவில்லை. தயவு செய்து அரசு இந்த விஷயத்தில் இந்த மாதிரிப் பேசாமல் உடனடியாக —

That Sub-Inspector must be kept under suspension pending enquiry –

இது எங்களுடைய டிமாண்ட். அதைச் செய்யாவிட்டால் * * * *

அரசு நன்றாக நடைபெறவேண்டும். சட்டம் ஒழுங்கு இந்த நாட்டில் இருக்கவேண்டும் என்ற நன்னம்பிக்கையில்தான், அதிலே அக்கறையுள்ளவன் என்ற முறையில் கேஸ்கள் முறையாக நடைபெறவெண்டுமென்ற முறையில் எனக்குள்ள அக்கறையின் காரணமாக அரசிடத்தில் வேண்டிக்கொள்கிறேன். ஆகவே, வழக்கறிஞர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவர்கள்தான் உங்களுக்கு வழிகாட்ட முடியும் என்ற வகையில் உடனடியாக நடவடிக்கை எடுங்கள் — —

Pending enquiry let that Sub-Inspector be kept under suspension who had the audacity to attack an Advocate என்ற முறையில் அந்த சப் இன்ஸ்பெக்டரை உடனடியாக சஸ்பென்ட் செய்யவேண்டும். அட்வகேட் அஸோசியேஷன், பார் கவுன்சில் கேட்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றிப் பல்வேறு பிரச்சினைகளைப் பேச வேண்டியிருப்பதால் அதைப்பற்றி விவாதிக்க அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது '* * * *' என்று சொன்னார்கள் அது அவ்வளவு நன்றாக இருக்காது.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் நீங்கள் நினைப்பது மாதிரி நினைத்துப் பேசவில்லை. அந்தப் போக்கில் போகக்கூடியவன் அல்ல. பேச்சில் வேகம் இருக்குமே தவிர வேறல்ல, சொற் போருக்கு வருவேனே தவிர, மற்போருக்கல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: '* * * *' என்று பத்திரிகையில் வருமானால் அவ்வளவு நன்றாக இருக்காது. அந்த வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: '* * * *' என்றால் என்ன அன்பார்லிமெண்டரி என்று தெரியவில்லை. முதல் அமைச்சர் சொல்ல வேண்டியதைத் தாங்கள் சொல்வது உள்ளபடியே வருந்தத்தக்கது. ஒரு உறுப்பினரோ ஒரு கட்சியின் தலைவரோ

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பேசுகிற நேரத்தில் இருக்கிற நிலைமையை எடுத்துக்காட்டி, இதற்கு உடனடியாக தீர்வு காணாவிட்டால் விளைவுகள் வேறு விதமாக ஆகிவிடும் என்று அரசுக்கு எச்சரிக்கை செய்வது, அரசு அதிலே முறையாக நடந்து கொள்ளவேண்டுமென்ற காரணத்தால் தான் விளைவுகள் வேறுவிதமாக ஆகிவிடும் என்று சொல்வதில் தவறு இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன குரலில் அதே வாக்கிய அமைப்பில் சொன்னால் தவறில்லை. மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் கொஞ்சம் வேகமாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது போல் 'விளைவுகள் வேறு விதமாக ஆகிவிடும்' என்று சொன்னால் பரவாயில்லை. * *என்று அவர் பேசக்கூடாது என்றுதான் சொன்னேன். நீங்கள் சொல்வது போல் ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : எனக்கும் ஒன்றும் புரியவில்லை. எழுத்தில் வரும்போது குரல் எதிரொலிக்காது. எழுத்தில் வரும் போது நான் சொன்னது, இங்கே எடுத்துச் சொன்னது இரண்டும் ஒரே விதமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வாக்கிய அமைப் பையும் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : '* * *' என்பதற்குப் பதிலாக வேறு விதமாக ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால்கூடப் பரவாயில்லை.

திரு. ரா. மார்க்கபந்து : I have been authorised to pursue the matter by the Bar Council. என்ற முறையில் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர். வக்கீல்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஆறுமுகம் அவர்கள் வக்கீல் அல்ல.

திரு. மார்க்கபந்து அவர்கள் வக்கீல்கள் சங்கத்தின் சார்பாக பர்சனல் எக்ஸ்பிளனேஷனாக இரண்டு நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ளவேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1979 மார்ச் 19

*திரு. ரா. மார்க்கபந்து ; பேரவைத் தலைவர் அவர்களே, நானும் பி. எச். பாண்டியனும் தமிழ்நாடு பார் கவுன்சில் மெம்பர்களாக இருக்கிறோம். 11ஆம் தேதி பார் கவுன்சில் கூடியது. அதிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள் இந்தப் பிரச்சினை பற்றி விசாரிப்பதற்காக ஒரு நீதிபதியைப் போட்டு விசாரிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்து அதை சட்ட மன்றத்திலே சென்று பேசுங்கள் என்று பார் கவுன்சிலில் இருந்து எங்களைப் பணித்தார்கள். அந்த அடிப்படையில் நான் ஒரு சிறு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

இது எக்ஸிடியூடிவ், ஜுடிஷியரி அன்ட் லெஜிஸ்லேடிவ் என்ற மூன்று முக்கியமான These are the limbs of the Gov rnment என்று சொல்வதால் Judiciaryis also one of the limbs and the Judiciary has been completely paralysed இன்றைக்கு கோர்ட்டுகள் எல்லாம் நடை பெறவில்லை, நீதிமன்றங்கள் மூடப்பட்டு இருக்கின்றன, உயர்நீதி மன்றம் நடைபெறவில்லை, சட்டக்கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. இது எதற்காக என்று சொல்கிறபோது நான் இந்த மாமன்றம் நீதித் துறையைக் குறைவாக மதிப்பிடுவதாக யாரும் கருதவில்லை இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட இருக்கின்ற நீதிபதி எந்த விதமான விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பாற்பட்டு நீதியைத் தருவார் என்ற முறையிலே இந்த அரசாங்கம் கருதுகிறது. அந்த முறையிலே இங்கே அறிவிக்கப்பட்ட முடிவானது, நீதிபதி நியமிக்கப்படுவார் என்றும் அதற்கு வழக்கறிஞர்கள் தரப்பிலே ஒரு மெம்பரும். போலீஸார் தரப்பிலே ஒரு மெம்பரும் உதவியாக இருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் உத்திரவை நீதிபதி தான் அளிப்பார் என்று தெரிகிறது. ஆனால் உதவி செய்வது மெம்பர்களாக இருந்துதான் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீதிபதி தருகிற தீர்ப்பு என்றாலும் வழக்கறிஞர்கள் சார்பிலேயும், போலீஸார் சார்பிலேயும் மெம்பர்கள் இருப்பதுதான் போராட்டத்திற்கான காரணமாக இருப்பதால் அதை நீக்கிவிடுவது சரியானது என்று கருதுகிறேன். வழக்கறிஞர்கள் சார்பிலும், போலீசார்சார்பிலும் உள்ள அங்கத்தினர்கள் தீர்ப்பு சொல்லப்போவது இல்லை, நீதிபதிக்கு அவர்கள் உதவியாகத்தான் இருப்பார்கள், இருப்பினும் மெம்பர்களாக இருந்து உதவி செய்வதை விட மற்றவர்கள் போல விசாரணையில் உதவி செய்தால் அரசுக்கு எந்த விதமான சங்கடத்தையும் உருவாக்காது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் ஒரு உரையாக மாறக் கூடாது. நானும் தாங்கள் முடித்து விடுவீர்கள் என்று பார்த்தால் நீங்கள் உரையாக நிகழ்த்துகிறீர்கள்

1979 மார்ச் 19]

திரு கூத்தகுடி ச. சண்முகம்: உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்களா? அவர் ஒன்று சொல்கிறார், இவர் ஒன்று சொல்கிறார், ஒன்றுமே புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார் கவுன்சில் பிரதிநிதிகளை அனுப்பியதால் அவர் பேசியதற்கு இங்கே பெர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே கொடுக்கிறார். திரு மார்க்கபந்து, தாங்கள் பர்சனல் எக்ஸ்ப்ளநேஷனை மட்டும் கொடுத்துவிட்டு அமருங்கள்.

திரு ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தீர்மானத்தைக் கொண்டு வந்த எங்களைவிட அவர்கள் அதிகமாகப் பேசுகிறார்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நான் அப்படி அனுமதிக்க மாட்டேன். பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் என்ற முறையிலே சொல்கிறபோது அப்படி நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு துரை முருகன்; ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு பேசிக்கொண்டே போகக்கூடாது.

திரு துரை முருகன்: இல்லை, இரண்டு நிமிடத்திலே முடித்துக் கொள்கிறேன், வேண்டுமானால் கடிகாரத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவிவகாரம் என்னவென்றால் சப்இன்ஸ்பெக்டர் மாற்றப்படுவார் என்று முதலமைச்சர் சொன்னார். டிரான்ஸ்பர் என்றால் அது ஒரு பனிஷ்மெண்ட் மாதிரித்தான் செய்யப்பட வேண்டும். ஆனால் திருப்பரங்குன்றத்திலிருந்து திருமங்கலத்திற்கு மாற்றினார்கள். ஏற்கனவே அந்த சப்இன்ஸ்பெக்டர் திருமங்கலத்திற்கு டிரான்ஸ்பர் கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய மனைவி அங்கே வாழ்ந்து வருவதாகச் செய்தி வருகிறது. கலைஞர் மீது தாக்குதல் நடந்த சம்பவத்தையொட்டி நாங்குனேரியிலேயிருந்து கோயம்புத்தூருக்கு டிரான்ஸ்பர் பண்ணினீர்கள், ஆனால் இந்த சப் இன்ஸ்பெக்டரை மாத்திரம் ஒன்றரை மைலுக்குள் மாற்றுகிறீர்கள் என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது திரு சுப்பு சொல்ல வேண்டியது, நீங்கள் 42இல் கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: திருப்பரங்குன்றமாக இருப்பதால் முருகன் என்ற முறையிலே அவர் சொல்லுகிறார்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உழைப்பாளர் கட்சித் தலைவருக்கு தலைவர் அளித்த சலுகையைப் போலவே எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே எனக்கு அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் எழுந்து நிற்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார் கவுன்சில் பிரதிநிதி களை அனுப்பியது என்றும் அந்தத் தீர்மானத்தை என்னிடத்திலே அவர் காட்டியதால் பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் என்ற முறையிலே அவருக்கு அனுமதித்தேனே தவிர உங்களுக்கு அப்படியல்ல. நீங்கள் பேசலாம்.

[முற்பகல் 11.00]

திரு.மு.கருணாநிதி: தலைவரவர்களே, வழக்கறிஞர்களுடைய பிரச்னையும், அவர்கள் தொடர்ந்து நடத்தி வருகின்ற போராட்டமும் அரசினுடைய அலட்சியப் போக்கின் காரணமாக நீண்டுகொண்டே போகின்ற நிலையை நாம் காணுகின்றோம். பொதுவாக, எந்த அரசிலும் சில பிரச்னைகள் ஓரளவிற்கு முற்றி விட்ட நிலைமை எய்திய பிறகு முடிவுகள் எடுக்கப்படுவது தவிர்க்க முடியாதது. ஆனால் குறிப்பாக இந்த அரசைப் பொறுத்தவரையில் எல்லாப் பிரச்னைகளுமே இந்த அளவிற்கு முற்றிவிடுகின்ற சூழ்நிலையிலேதான் அதற்கு முடிவு காணுகின்ற ஒரு நிலைக்கு அரசு இணங்கி வருவதை நாம் கடந்த இரண்டாண்டு காலமாகப் பார்த்து வருகிறோம், அதேவகையிலேதான் இந்த வழக்கறிஞர் பிரச்னையில் இங்கு ஒத்தி வைப்புத் தீர்மாமைம் கொடுத்துப் பேசிய எல்லாக் கட்சிகளின் தலைவர்களும், உறுப் பினர்களும் குறிப்பிட்டதைப்போல அந்தப் போலீஸ் அதிகாரியை உடனடியாகத் தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கலாம். நீதிபதி ஒருவருடைய தலைமையிலே இந்த விசாரணையை அமைந்திருக்கலாம். அதிலே இரண்டு பிரதிநிதிகளையும் கொண்ட குழுவாக அமைதது இந்த விசாரணையை அமைத்திருக்கத் தேவையில்லை. இந்த இரண்டு கோரிக்கைகளையும் வைத்துத் தான் வழக்கறிஞர்கள் இன்று போராடி வருகிறார்கள்.

போலீஸ்காரரை அல்லது அதிகாரியை வேறு ஊருக்கு மாற்றம் செய்துவிட்டோம் என்பதிலேகூட துரைமுருகன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல திருப்பரங்குன்றத்திலிருந்து திருமங்கலத்திற்கு மாற்றம் செய்வது என்றால் இரண்டு இடங் களுக்கும் இடையில் உள்ள தூரம் கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறு மைல் தூரம்தான், இப்படி ஆறு மைல் தூரத்தில் மாற்றம் செய்துவிட்டு, அதிலும் அவர் கோரிய மாற்றத்தை வேறு செய்திருப்பதாக துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்தக் கருத்துக்கள் எவ்வளவு சரியானவை என்று எனக்குத்

1979 மார்ச் 19] [திரு. மு. கருணாநிதி]

தெரியாது. என்றாலும் எங்கே மாற்றம் செய்தாலும், இன்னும் நீண்ட தொலைவுக்கு மாற்றம் செய்தாலும் அது ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்றாக இல்லை. எனவே, தற்காலிக வேலை நீக்கம் செய்து, இங்குள்ள எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அத்தனை பேரும் கேட்டுக் கொண்டதைப் போலவும், வழக்கறிஞர் சங்கம் வலியுறுத்துவதைப் போலவும், ஒரு நீதிபதி விசாரணையை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை வழக்கறிஞர்கள் சார்பாக நானும் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மின்சாரத்துறை அமைச்சரவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள்தான் பதில் சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர் எங்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்காமல் நல்ல பதிலைச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், இரண்டு பேர் சார்பிலே ஒருவர் சொல்லியாகிவிட்டது.

திரு. பி. எச். பாண்டியன்: நான் காலையிலேயே சொல்லியிருக்கிறேன். பேரவைத் தலைவரவர்களே, இங்கே பேசிய உறுப்பினர்களில் பல்வேறு உறுப்பினர்கள் வழக்கறிஞர்கள் ஆவார்கள், நானும் அந்த வழக்கறிஞர் சமுதாயத்தைச் சேர்ந்த காரணத்தால், 12 ஆம் தேதியன்று அரசின் கவனத்திற்கு ஆர். டீ. ஓ. என்கொயரிக்குப் பதிலாக ஒரு நீதி விசாரணை போட வேண்டுமென்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை ஏற்றுக் கொண்டு அரசு அன்றையதினம் உத்தரவிட்டது. அதற்குப் பிறகு இங்கே பேசுகின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.மார்க்கபந்து அவர்கள் 'தமிழ்நாடு பார்கவுன்சிலின்' 11 ஆம் தேதிய கூட்டத்தில் என்னையும், நண்பர் மார்க்கபந்து அவர்களையும் அரசின் கவனத்திற்கு இந்த வழக்கறிஞர் பிரச்னையைக் கொண்டு வர வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். நான் அன்றைக்குக் கொண்டு வந்தேன். பிறகு இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளும், வெளியிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளும், ஏதோ இங்கே வழக்கறிஞர்களுக்குச் சாதகமாக அவர்களுடைய பிரச்சினையைச் சரியாக எடுத்து வைக்கவில்லை என்றும், நான் ஏதோ ஆளுங்கட்சிக்காக விட்டுவிட்டோம் என்ற நிலை அங்கே நிலவுகிறது.

ஆகவே, நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வது என்னவென்றால், நான் நெருக்கடி காலத்திலேயே, 1976 ஆம் ஆண்டு ''தமிழ்நாடு பார் கவுன்சிலின்'' உறுப்பினரான நேரத்திலேயே

நம்முடைய நீதிமன்றம் சுதந்திரமாக இயங்கவில்லை என்று அன்றைக்குத் தீர்மானம் கொடுத்தவன். அதற்குப்பிறகு ''தமிழ் நாடு பார் கவுன்சிலிலும்'' அகில இந்திய பார் கவுன்சிலிலும் தலைவராக, அன்றைக்கு இருந்த சட்டத்தைத் திருத்தி, அன்றைக்கு அட்வகேட் ஜெனரலும், அட்டார்னி ஜெனரலும் தலைவராக சட்ட விதியை நான் அன்றைக்கு எதிர்த்துத் தீர்மானத்தைக் கொடுத்தவன். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், முதல் நாளே இந்த அவையிலே பேசும் பொழுது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அங்கேயிருக்கின்ற அத்தனை வழக்கறிஞர்கள் சமுதாயத்திற்கு, ஜனநாயகத்தை, நீதித்துறையை பாதுகாக்க வேண்டுமென்ற நிலையைப்பற்றி அன்றைக்கு எடுத்து கூறினேன். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு நாட்டில் 'ஸ்டிராங் பார்' என்று சொல்வார்கள். அதாவது, வழக்கறிஞர்களின் ஒற்றுமை.

நாட்டின் நன்மைக்காக இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். ஆகவே, இந்த நிலைமையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்றால், அரசு வழக்கறிஞர்கள் ஃபீலிங்கை வழக்கறிஞர்கள் எண்ணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறி என்னுடைய விளக்கத்தை முடிக்கிறேன்.

திரு. க. சுப்பு: ஒரே ஒரு பாய்ண்ட். திரு. பாண்டியன் பேசும் பொழுது, ஒன்றைச் சொன்னார். 'போர்ட் ஆஃப் இன்குயரியை, ஏற்றுக்கொண்டது ஒருசில வழக்கறிஞர்களே தவிர, எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அது ஏதோ 'ஸ்லிப் ஆஃப் தி டங்' என்று நினைக்கிறேன்....

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன்.....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதிலே ஒரு டிபேட் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் அதைத்தான் சொல்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: 11-3-1979 அன்று தமிழ்நாடு 'பார் கவுன்சிலில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இங்கே தெரிவிக்கிறேன். 'ரிசால்வ்டு டு ரிக்குவஸ்ட்'......'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் அதைச் சொல்லவில்லை. நீங்கள் பேசியதைத்தான் சுட்டிக்காட்டினார்...

1979 மார்ச் 19]

திரு. பி. எச். பாண்டியன்: என்னுடைய எக்சிஸ்டன்ஸே இதில் இருக்கிறது. ஆகவே, அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அப்படி அனுமதி கேட்கக் கூடாது. தாங்கள் வலியுறுத்தி அனுமதி கேட்கக் கூடாது.

திரு. பி. எச். பாண்டியன்: நான் 16-ந் தேதியன்று பேசுகிற நேரத்தில் சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் இந்தப் பிரச்னை குறித்து, அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றியது குறித்து, எனக்குத் தகவல் கிடைக்காத காரணத்தால் அந்த வழக்கறிஞர்கள் இங்கே வருவதைப்பற்றி எனக்குத் தகவல் இல்லையென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்தப் பிரச்னை பற்றி மிகவும் சிக்கலான பிரச்னை என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அரசும் அதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசுகிறபொழுது அரசு காட்டிய அலட்சியத்தின் காரணமாகத்தான் இந்தப் பிரச்னை இவ்வளவு வளர்ந்தது என்றும் இது கடந்த இரண்டு ஆண்டுகளின் அனுபவமாக இருக்கிறது என்றும் இங்கே தெரிவித்தார்கள். ஆனால், என்னை பொறுத்தவரையில், அரசு கடைபிடிக்கின்ற நல்லெண்ணமும் பெருந்தன்மையும் கூட சில நேரங்களில் இத்தகைய நிலையைக் கொண்டு வருகிறதோ என்று ஐயுறுகிற அளவுக்கு எனது அனுபவம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சம்பவங்களை எடுத்துச் சொல்லி ஒவ்வொரு சம்பவத்திலேயும் அரசு ஒரு பதிலைத் தருவதும் அந்தப் பதிலை வழக்கறிஞர்கள் சங்கம் இல்லையென்று மறுக்கவும் அப்படியே போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இதில் என்ன தான் நடந்தது என்பது தெரியவில்லை என்றும் எடுத்துச் சொன்னார்கள். ஒரு சில நேரங்களில் உரிமைப் பிரச்னையாகக் கூட என்மீது கொண்டு வரப்பட்டது என்பதையும் இந்த மன்றம் நன்கு அறியும். ஆனால், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன், மதுரையில் இந்தச் சம்பவம் நடந்தபிறகு மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் மதுரை சென்று மதுரையிலிருந்து திரும்பி கோவைக்கு வந்து அங்கே காடம்பாறை நீரேற்று மின்திட்ட துவக்க விழாவில் கலந்து கொண்டார்கள். அப்பொழுது கூட இருக்கும் வாய்ப்பினை நான் பெற்றேன். அப்பொழுதே அவர்கள் இந்தப் பிரச்னையைப் பற்றி பேசும்பொழுது மதுரையில்

வழக்கறிஞர்கள் தன்னை வந்து சந்தித்ததாகவும் காவல்துறை அதிகாரியை அங்கேயிருந்து மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அவரை மாற்றச் சொல்லிவிட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். அதோடு தெரிவித்தார், நான் மாற்றச் சொல்லி இன்னும் கூட மாற்றாமல் இருக்கிறார்கள், பாருங்கள், என்று. எனவே சென்னைக்குத் தொலைபேசியில் சொல்லி, மாற்றச்சொன்னார்கள். ஆகவே, மதுரையில் வழக்கறிஞர்களைச் சந்தித்தபொழுது, அந்த அதிகாரியை மாற்றினால் போதும் என்பதை, நான் அடுத்தநாள் முதலமைச்சரைச் சந்தித்தவன் என்ற முறையிலும் உணர முடிகிறது. அதே போலத்தான், முதலில் கோட்டாட்சித் தலைவர் அளவில் விசாரணை நடைபெற்றால் போதும் என்று இருந்தது. அதற்குப் பின்னால், நீதி விசாரணை வேண்டுமென்று கோரிக்கை வந்தவுடன், அந்த நீதி விசாரணையை நடத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வழக்கறிஞர்கள் சங்க அங்கத்தினர்கள் வந்து பார்த்தபோது, ஒரு வழக்கறிஞரோடு தொடர்புகொண்டு. இதை அவர்களும் ஓரளவுக்கு ஒப்புக் கொண்ட பிறகுதான் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள்.

[முற்பகல் 11.10]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது வழக்கறிஞர் லக்ஷிமீ நாராயணன் அவர்கள் இது பற்றி எந்த விதக் கருத்தையும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். வழக்கறிஞர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். அப்படி வந்து சந்தித்தவர்களில் லட்சுமி நாராயணனும் இருந்தார். வழக்கறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களுக்குச் செல்லக் கூடாது என்று முடிவுசெய்து அந்தநிலை ஏற்பட்டபிறகு வழக்கறிஞர்கள் சங்கத்தை சேர்ந்தவர்களை கூட்டி நேரிடையான பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும் அதன் அடிப்படையில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று 17-3-79 அன்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இப்படி ஒரு தரப்பிலே பேசுவதும், அதற்குப் பிறகு அது இல்லை என்று அவர்கள் மறுப்பதும், இப்படி ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது, இதன் அடிப்படையில் அரசு என்ன முடிவு எடுத்தது என்றால், வழக்கறிஞர்கள் சங்கமானாலும் சரி, அரசானாலும் சரி, எதையும் எழுத்து மூலமாக வைத்துக் கொண்டால், இப்படி மறுப்புப் பிரச்னையே உருவாகாது என்ற அடிப்படையில், என்ன பேசுவதாக இருந்தாலும் கடிதப் போக்குவரத்தின் மூலமே தெரியப்படுத்த வேண்டும் என்று அரசு சார்பில் முடிவு எடுக்கப்பட்டது. வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் அவர்களுடைய நிலை என்ன என்பதைப் பற்றி கேட்கப்பட்ட பொழுது அவர்கள் பிரச்னையைப் பற்றி அவர்கள் கொடுத்த கடிதம் இதுதான்.

1979 மார்ச் 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள், இந்த அரசைப் பற்றி குறிப்பாக முதல்வரைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் மொட்டை கடிதம் அனுப்பியுள்ளார். இது ஒரு முதலமைச்சரின் வேலையா என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் நான் இப்பொழுது சொல்கிறேன். வழக்கறிஞர் -சங்கத்திலிருந்தும் இப்படி ஒரு கடிதம் கையெழுத்து இடப்படாமலேயே வந்தது, அதற்காக நாங்கள் இப்படி வழக்கறிஞர் சங்கத்தை கேட்கமாட்டோம். அவர்கள்பிரச்னையை அவர்கள் எடுத்துக் கூற வேண்டும் என்ற அடிப்படையில்தான் அவர்கள் கடிதத்தை ஏற்றுக் கொண்டோம். கையெழுத்து இல்லை ஆகவே உங்களோடு பேசமாட்டோம் என்று முதல்வர் அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் பிரச்னையை எடுத்துச் சொல்ல அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் அதை வாங்கிக் கொண்டோம். மொட்டை கடிதாசி எழுதுவதா வழக்கறிஞர்கள் வேலை? இது வழக்கறிஞர்கள் செய்யும் வேலையாகத் தெரியவில்லையே என்று நாங்கள் கேட்க மாட்டோம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள், அதை எழுத்து மூலமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தபிறகு கையெழுத்து இல்லாத கடிதத்தை ஏன் வாங்கிக் கொண்டீர்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு சண்முகம் அவர்கள் இப்படிக் கேட்பார்கள் என்று தெரிந்துதான் அவர்களை மீண்டும் அழைத்து கையெழுத்துப் போடச் சொன்னோம். அவர்கள் அதை மீண்டும் டைப் செய்து கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கிறார்கள். நான் இதை எதற்காகச் சொன்னேன் என்றால், பிரச்னைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும்போது கையெழுத்து போட்டாரா கையெழுத்துப் போடவில்லையா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவது சரியல்ல.

அது மட்டும் அலல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கடிதத்தை 12 மணிக்கு தான் வழக்கறிஞர்கள் சங்கத்தினர் கொடுத்தனர் ஆனல் 1 மணிக்குள் பதில் வேண்டுமென்று கேட்டார்கள் மாண்புமிகு முதல்வர் அன்று பிற்பகல் பம்பாய் புறப்பட வேண்டியிருந்தது இருப்பினும் முதலமைச்சரவர்கள் ஆபீஸ் காபியில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். 12 மணிக்குள் கடிதம் தயாராகவில்லை என்ற காரணத்தினால் நான்தான் ஆபீஸ் காபியில் கையெழுத்துப் போட்டுவிட்டேன. அவர்கள் அதை 1 மணிக்குள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மிகவும் முக்கியமான பிரச்னை அதனால் அதை தனிச்செயலாளரை வைத்து அனுப்பிவையுங்கள் என்று ஊருக்குப்

போகும் போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல தனிச் செயலாளர் முதலமைச்சர் கையெழுத்துப்போட்ட ஆபீஸ் காபியின் நகலை வைத்து வழக்கறிஞர்கள் சங்க செகரட்டரி கண்ணன் என்பவருக்கு,

'Dear Thiru Kannan,

Under instructions from the Hon. Chief Minister, I am enclosing a letter addressed by him to you. As the Hon. Chief Minister has already left for Bombay, he could not sign the fair copy.

ஆகவே, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் அந்தக் கடிதத்தை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். அவர் ஏற்கனவே பம்பாய்க்குப் புறப்பட்டு விட்ட காரணத்தால் இந்த பேர் காப்பி சைன் செய்ய முடியவில்லை என்று சமாதானத்தோடு எழுதி அனுப்பி இருக்கிறார். திரு. சுப்பு அவர்கள் தெரிவித்த மாதிரி மொட்டைக் கடிதம் அனுப்ப வேண்டிய அவசியம் நிச்சயமாக முதலமைச்சருக்கும் ஏற்படாது, ஏற்படவில்லை என்பதை நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இன்னொன்றும் சொல்லப்பட்டது. அந்த எஸ். ஐ. காவல்துறை சம்பந்தப்பட்டவரை ஏன் தற்காலிக வேலை நீக்கம் செய்யக்கூடாது. இது பற்றியும் வழக்கறிஞர்கள் சங்கத்தோடு பேசப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அவர்கள் மாற்றினால் போதும் என்று சொன்னதால் மாற்றியிருக்கிறார்கள் அதற்குப் பிறகும் அங்கே அவர்களைச் சஸ்பெண்டு செய்ய வேண்டும் என்று சொல்வது 'பிரி—ஜட்ஜிங் தி இஷ்யூ' அதாவது பிரச்னை என்ன என்பதற்கு முன்னாலேயே, ஒரு சாராரைச் சஸ்பெண்டு செய்வது என்பது நீதியான, நடுநிலைமையான சூழ்நிலைக்கு உகந்தது ஆகாது என்பதையும் எடுத்து விளக்கி இருக்கிறோம். இதே போல் அந்தக் கடிதத்திலே அந்த விவரங்கள் வந்து இருக்கின்றன. I do not agree with you. அவர்கள் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் கேட்டார்கள். மாற்றினால் மட்டும் போதாது என்று. நான் மாண்புமிகு எதிர் கட்சித் தலைவருக்கும் சொல்கிறேன், திரு. துரை முருகன் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன், மாறுதல் உத்தரவு கேட்டு வாங்குவது அல்ல, மாறுதல் உத்தரவு அரசின் சார்பில் போடப்பட்டது.

திரு. துரை முருகன்: மாற்றுவது என்றால் எங்கே மாற்றுவது? அவருடைய மனைவி ஏற்கனவே திருமங்கலத்தில் வேலை செய்கிறார்கள். ஏற்கனவே அந்த இடத்திற்குப் போகவேண்டும் என்று அவர் ட்ரை செய்து கொண்டு இருக்கிறார். அவர் கேட்டுக் கொண்டு இருக்கிற அதே இடத்திற்கு நீங்கள் அவரை மாற்றினால் அவர் சலாம் போட்டுக்கொண்டு அங்கே போவார். அதைத்தான் நான் எடுத்துக் கூறினேன்.

1979 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன், உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : மைக் போடுங்கய்யா (மைக் கண்டிரோல் அறையைப் பார்த்துக் கூறினார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படிச் சொல்வது சரியல்ல. என்னைக் கேட்டு விட்டுத்தான் பேசவேண்டும். அவர்களை அப்படிக் கேட்கக்கூடாது. அங்கே பார்த்து, அவர்களைப் பார்த்து மைக் போடு என்று சொல்வது உங்கள் பதவிக்கு சரியல்ல.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : அரசாங்கமே மாற்றி இருந்தாலும், 5 மைல் தூரத்தில் அவர் மாற்றப்பட்டு இருப்பதால் அதில் தலையிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற சந்தேகம் ஏற்படுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் சொல்ல வந்தது, அவர் மனைவி அந்த இடத்தில் பணி செய்கிறார் என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்து இருக்கலாம். என்னைப்பொறுத்தவரையில் தெரியாது. அவரை மாற்றவேண்டும் என்று கேட்டார்கள். உண்மை. மாற்ற வேண்டும் என்று முதலமைச்சரவர்கள் உத்தரவிட்டார்கள். அது உண்மை என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

To suspend would be to pre-judge the issue

இது தான் அரசாங்கத்தின்நிலை என்பதை விளக்க விரும்புகிறேன்.

மேலும் அந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டு இருப்பது, அந்த மூன்று பேர் கொண்ட குழுவில் வழக்கறிஞர்கள் பிரதிநிதியாக இருப்பவரும், காவல் துறையின் பிரதிநிதியாக இருப்பவரும் உதவி செய்யக்கூடிய அந்த நிலையில் தான் இருப்பார்கள். இறுதியான முடிவு எடுக்க கூடியவர் நீதிபதி. அந்த ஜட்ஜாக நாங்கள் யாரைப் போடுகிறோமோ அவர் தான் அந்த முடிவை எடுக்கக்கூடியவர்கள் என்பதையும் நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

"A District or High Court Judge whoever is appointed alone will be the sole arbiter of the issue and the representatives of the interests concerned, namely, lawyers and the police will merely assist the judge to elicit facts and present respeettve points of view.

I would like to make it perfectly clear that the two representatives will not have any say in arriving at findings on the issues, which would be the sole responsibility and prerogative of the Judge.

ஆகவே, ஜட்ஜுக்குத்தான் அந்த உரிமை. அவர்கள் இரண்டு பேரும் அவர்களுக்கு சிறப்பான விளக்கங்களை எடுத்து உதவி செய்யும் வகையில் நீதிபதிக்குத் தருகிற அந்த நிலையிலே இருப்பார்களே ஒழிய வேறு அல்ல என்பதை தெளிவாக நேற்றையதினம் எழுதிய கடிதத்தில் எடுத்துக்கூறி இருக்கிறார்கள்.

சட்டக்கல்லூரி மூடியதைப் பற்றியும், மற்றவற்றைப்பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் அமைதியாக நடந்த ஊர்வலத்தில் கலவரம் நடந்தது என்று எல்லாம் சொல்லி, கல் வீசினார்கள் என்று சொல்லலாமா என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட்டது, இத்தகைய கிளர்ச்சிகளிலே இத்தகைய போராட்ட முறைகளிலே ஈடுபடுகிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பது தான்.

[முற்பகல் 11 . 20]

வழக்கறிஞர் ஆனாலும் சரி, அல்லது சட்டக்கல்லூரி மாணவர்களானாலும் சரி அவர்கள் எல்லாம் இதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். ஏனென்றால் இந்தப் பிரச்னையைப் பயன்படுத்தி, வன்முறை தலைதூக்கிவிடுகின்ற வாய்ப்பு இருக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வந்த கடிதத்திலும் இது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதிபதிகள் உட்கார்ந்து இருக்கிற 'கான்ஃபிரன்ஸ் ஹாலில்' கல் வந்து விழுந்திருக்கிறது. நான் அந்தக் கடிதத்தின் சில பகுதிகளை மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

'The Advocates decision to boy-cott the Courts has disabled the courts from functioning in view of the fact that a large number of demonstrators including lawyers and Law College Students entering court campus of court buildings pervented the Judges going to the courts and doing the work. In fact, on the morning of 16th Mareh 1979, there was a few stone throwing into court buildings and few stones landed into the conference Hall of the High Court where the Hon. Judges have assembled.

In the City Civil Court also, there have been stone throwing and few glasspanes have been broken. We are deliberatelo refrained from giving publicity to the incidents in order not ty aggravate the situation.

ஆகவே, அவர்கள் அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் நீதி மன்றத்தில் நீதிபதிகள் உட்காரும் கான்ஃபிரன்ஸ் ஹாலில் கற்கள் வந்து விழுந்திருக்கின்றன, அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இந்த சூழ்நிலை இருக்கிறபோது அவர்கள் நியாயமான முறையில், அமைதியாக போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென்று விரும்பினாலும் நிலைமைகள் கட்டுக்கு மீறிப் போகக்கூடாது என்ற முன் எச்சரிக்கையின் காரணமாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

சட்டக் கல்லூரி இன்றைக்கு மூடி இருக்கிறது என்றால் நிச்சயமாக அதன்மூலம் மாணவர்களின் பாதுகாப்புக்காகத்தான். மாணவர்களின் நலனைக் கருதிதான் இவை எல்லாம் தடுப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த மன்றத்தில் எடுத்துப் பேசியதைப்போல அவ்வளவு பெரும் பதட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு சுமூகமான சூழ்நிலை உருவாகும் நல்ல வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நாங்கள் பிரச்சனைகளை எடுத்துச் சொன்ன பிறகும் நீதிபதி விசாரணை இல்லை என்று தெரிவதால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச்செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, நான் மிகுந்த கனிவோடு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் வழக்கறிஞர்கள் கோரிக்கையை எடுத்து வைத்தும் வழக்கம்போல் அது நிராகரிக்கப்பட்டு விட்ட காரணத்தால் அடையாளப்பூர்வமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இங்கே சில விளக்கங்களைக் கூறினார்கள். ஒரு ஜட்ஜ்தான் முடிவு எடுக்கப்போகிறார் என்று சொன்னார்கள். அப்படியானால் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜை வைத்து விசாரணை

நடத்தினால் பிரச்சனை தீரும். போலீஸ் அதிகாரியை உதவிக்கு வைத்துக்கொள்வது என்பது சரியல்ல. போலீசார் எங்காவது வெளியிலே போகும்போது தாக்குதல் என்றால் அது ஒரு வேளை பொருத்தமாக இருக்கும். ஆனால் தாக்குதல் நடை பெற்றது போலீஸ் ஸ்டேஷனில்; அதுவும் ஒரு வக்கில் தாக்கப் பட்டிருக்கிறார். மனித உரிமைக்காகப் போராடுகிற வக்கீல் தாக்கப்படுகிறார் என்றால் மனித உரிமை நசுக்கப்படுகிறது என்று அர்த்தம். ஆகவே, இந்த அரசில் மனித உரிமைக்கு பாதுகாப்பு இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை எடுத்துக் கூறியும், எங்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படாததால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம். (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப் பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, நீதிமன்றங் களிலே மனித உரிமைக்குப் போராடி, நீதியை நிலைநாட்டி, ஜன நாயகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற வழக்கறிஞர்களின் முதுகெலும்பை ஒடிக்கின்ற முறையில் செயல்படுவது நிச்சய மாக நல்ல ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாது என்ற காரணத்தாலும், நியாயமான கோரிக்கை ஏற்படவில்லை என்ற காரணத்தாலும் நானும் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் களிலே செய்தார்கள்).

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த பிரச்சனையில் முடிவு காண்பதற்காக, அதற்கு உதவியாக இருக்குமென்று இந்த 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து, அரசுக்கு உதவி செய்ய விரும்பினோம். ஆனால் அரசு பிடி வாதமாக இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முன்வராத காரணத்தாலும், வழக்கறிஞர்களின் நியாயமான கோரிக்கை யான நீதிபதி நியமனம் செய்யப்பட வேண்டும்; போலீஸ் அதிகாரி சஸ்பென்ட் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்காத காரணத்தாலும் நாங்கள் வெளிநடப்புச் செய் கிறோம்.

(ஜனதா கட்சியினர் வெளிநடப்புச் செய்தார்கள்).

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, தன்னுடைய நிர்வாகப் பொறுப்பை செம்மையாக நிறைவேற்றும் வகையில் அந்த போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்திருக்கவேண்டும் அதைச் செய்யவில்லை. மேலும் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும்

1979 மார்ச் 19] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஏற்காமல் அரசாங்கம் பிடிவாதமாக இருக்கிறது. ஆகையால் எங்கள் ஆட்சேபனையைத் தெரிவிக்கின்ற வகையில் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இன்றைக்கு எதிர்தரப்பிலே இருக்கின்ற பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். வெளியிலே இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் கோர்ட்டுகளே நடைபெறுவதில்லை. வழக்குகளை எல்லாம் பாய்காட் பண்ணுகிறார்கள். இந்த நிலையிலே அரசு தான் எடுத்த முடிவை வற்புறுத்திக் கொண்டிருந்தால் நிலைமையை எப்படி சமாளிக்க முடியும்? கோர்ட்டுகள் எப்படி நடைபெறும்? ஆகவே இப்படிப்பட்ட நிலைமையினை அரசு உணரவேண்டும். தான் முன்பு எடுத்த முடிவை மாற்றிக்கொள்வதில் கவுரவம் பார்க்கக்கூடாது. ஆகவே இந்த சம்பவம் காரணமாக என்னுடைய கட்சியின் சார்பிலே நான் வெளிநடப்புச் செய்யவில்லை. நாங்கள் இதனை மீண்டும் வற்புறுத்தி வக்கீல்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்றுக்கொள்வது தான் சரியானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது மூன்று பேர்கள் கொண்ட குழுவினைப் போட்டிருக்கிறீர்கள். அதனை மாற்றி ஒரே நீதிபதி கொண்ட குழுவை அமைப்பது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. இதை ஏன் இந்த அரசு செய்ய மறுக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நிலைமை மிகவும் சிக்கலாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே அரசாங்கம் கவுரவம் பார்க்காமல் அவர்கள் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைக்குத் திரும்பியதும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் அவருக்கு எடுத்துக்கூறப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்றபோது, இந்த அரசாங்கம் நீதித்துறையிலே மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறது என்றும் நீதித்துறையைச் சந்தேகிக்கின்ற அளவிலே இந்த அரசாங்கம் இல்லை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறையிலே தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்துக்கள்

இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. அதாவது வழக்கறிஞர்களின் பிரதிநிதி ஒருவரும், போலீஸ் அதிகாரிகளின் பிரதிநிதி ஒருவரும் அந்த விசாரணைக் குழுவிலே இடம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகம் பூராவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு பிரச்சினையாக இது இருப்பதன் காரணத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த விசாரணைக் குழுவை நீக்கிவிடுவது இந்த அரசாங்கத்திற்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்தாது என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்....

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இதனை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதைச் சொல்லுங்கள். அதிக நேரம் பிரச்சினையை விளக்கிக்கொண்டே போகக்கூடாது.

திரு. ரா. மார்க்கபந்து; அதே நேரத்தில் அந்த அதிகாரி மாற்றம் செய்யப்பட்டதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அடுத்து சஸ்பென்ட் செய்வது பற்றியும் கருத்துக்கள் சொல்லப்பட்டன. சஸ்பென்ட் செய்வது என்பது ஒரு தண்டனையாக இருக்க முடியாது. சஸ்பென்ட் செய்தால் அது விசாரணைக்குக் குந்தமாக முடியும் என்று சொன்னார்கள். சஸ்பென்ட் செய்வது என்பது விசாரணை செய்யப்படுவதற்காக இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்கு செய்யபடுவதே தவிர வேறல்ல. ஆகவே அந்த கோரிக்கையினை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்கிற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

கவன ஈர்ப்புகள்

(அ) கும்பகோணம் ராமன் அண்டு ராமன் நிறுவனம் மூடப்பெற்றது குறித்து

திரு. எஸ். ஆர். இராதா; பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கீழ்க்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

''கும்பகோணம் ராமன் அன்ட் ராமன் நிறுவனம் திடீரென மூடப்பட்டு, பல தொழிலாளர்கள் வேலை இழந்து, அதனால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''

1979 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே. கும்பகோணம் பிடாரிக்குளம் தெருவிலுள்ள திருவாளர்கள் ராமன் அண்டு ராமன் (பி) லிமிடெட் நிறுவனம் சுமார் 100 தொழிலாளர்களை கொண்டது. இதில் பெரும்பாலும் பெட்ரோலால் இயங்கும் மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்தும் சர்வீஸ் செய்தும் வந்தனர். தொழிலாளர்களிடையேயும் திருவாளர்கள் ராமன் அன்ட் ராமன் மற்றும அவர்களுடைய சக நிறுவனங்களின் (Sister Concerns) நிர்வாகத்திடையேயும் 1977-78க்கான பூரிப்பு ஊதியம் கொடுப்பது குறித்து ஒரு தொழில் தகராறு எழுந்தது. இதன் விளைவாக 25-10-78 முதல் நிர்வாகம் கதவடைப்பு செய்தது. இணை ஆணையர் தொழிலாளர் நலத்துறை, சென்னை நடத்திய சமசர பேச்சு வார்த்தைகளின் பயனாக 28-10-78 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. நிர்வாகம் 31-10-78 முதல் கதவடைப்பை நீக்கியது. கதவடைப்பை நீக்குமுன் தொழிலில் கடந்த 3 ஆண்டுகளாக ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தினாலும் நஷ்டம் மேலும் தொடர்ந்து ஏற்படுவதாலும் 1–1-79 முதல் கும்பகோணம் பிடாரிக்குளத்திலுள்ள தங்கள் மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் பட்டறையை மூடுவதாக தீர்மானித்துள்ளதாக தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவின் 25 FFAன் கீழ் 27-10-78 அன்று ஒரு அறிவிப்பை செய்திருந்தனர். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இப்பட்டறையை 1-1-79 முதல் மூடுவதால் 45 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதாக 31-12-78 அன்று ஒரு அறிவிப்பு செய்தனர். 1-1-79 முதல் இப்பட்டறை மூடப்பட்டுள்ளது. 27-11-78 அன்று நான் கும்பகோணம் சென்றிருந்த போதும் தொடர்ந்து சென்னையில் 5-12-78 மற்றும் 28-1-79 நாட்களில் இந்நிறுவனத்தில் நிர்வாக இயக்குநரிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். பட்டறையை விரைவில் திறந்து தொழிலாளர்களின் அல்லலைப் போக்க வேண்டியதின் அவசியத்தை அவரிடம் வலியுறுத்தினேன். அவரும் நிர்வாகத்தில் இதர இயக்குநர்களிடம் இந்நிறுவனத்தில் அக்கறையுள்ள அவரது குடும்பத்தாரிடமும் கலந்து ஆலோசித்து இந்நிறுவனத்தை சிறிய அளவிலாவது மறுபடியும் துவக்க முடியுமா என எனக்கு தெரிவிப்பதாகக் கூறினார், அவர் இறுதியாக தன்னுடைய 10-3-79 நாளிட்ட கடிதத்தில். இத் தொழில் ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தாலும், சமீபத்திய பெட்ரோல் மற்றும் கார் விலை உயர்வினாலும், இந்நிறுவனத்தை மூடுவதை தவிர்க்க முடியாது, என கூறியுள்ளார்.

இதற்கிடையில் இப்பட்டறையை மூடினது குறித்து தொழிலாளர்கள் தஞ்சாவூர் தொழிலாளர் நல அலுவலர் முன்பு தொழில் தகராறு எழுப்பினர். இத்தகராறை சுமுகமாக தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

[1979 மார்ச் 19

[முற்பகல் 11-30]

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலகம் மூடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கூறும் நேரத்தில்–பெட்ரோல் விலையேற்றம், கார்களின் விலையேற்றம் இவைகள் காரணமாகத் தான் மூடிவிட்டதாக இதன் உரிமையாளர் தெரிவிப்பதாக சொன்னார்கள். பெட்ரோல் விலை இப்பொது தான் ஏறியிருக் கிறது. அதற்கு முன்னாலேயே இந்தத் தொழிலகத்தை மூடுவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் பேரை வைத்துக்கொண்டு-அவரிடமிருந்து நூற்றுக்கனக்கான பேருந்துகளை அரசுடமையாக்கப்பட்டதின் காரணமாகத்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சுருக்கமாக கேள்வியாக கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: சுருக்கமாகத்தான் கேட்கிறேன். கேட்பதை விளக்கமாக சொல்லவேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதை சுருக்கமாக சொல்லுங்கள். விளக்கமாக பேசிக்கொண்டிருக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா: சுருக்கமாகத்தான் கேட்கிறேன். இப்போது மூடப்பட்டிருக்கின்ற தொழிலகத்திலுள்ள தொழிலாளர்களை சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமரச பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. Let us watch the progress with patience. இதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. எஸ். ஆர். இராதா; சமரச பேச்சுவார்த்தை நடப்பதாக சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தத் தொழிலகத்தில் முன்பு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அங்கிருந்த போலீஸ் வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று அந்த செட்டில்மென்டில் சொல்லப்பட்டிருந்தது. அது இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. ஆகவே அரசே இதை வற்புறுத்தி இந்த போலீஸ் வழக்கை வாபஸ் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

1979 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எல்லாப் பிரச்சினைகளையும் பேசி தீர்த்து விட முடியும் என்று நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ஆடு, மாடுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பெறுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, திருவாளர்கள், கூத்தகுடி சண்முகம், செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம், கே. பண்ணைசேதுராமன் ஆகியோர் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள். திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, ''கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான மாடுகள் கேரளாவிற்கும், ஆடுகள் ஆந்திராவிற்கும் அனுப்பப் படுவதால். தமிழ்நாட்டில் மாடுகளின் விலையும், ஆட்டு இறைச்சியின் விலையும் கூடுதலாயிருப்பது குறித்து.'' பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே!

1974 ஆம் ஆண்டு கால்நடை கணக்கின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 234 இலட்சம் கால்நடைகள் உள்ளன. இவற்றில் கால்நடை மற்றும் எருமைகள் 134.2 இலட்சம், செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் 93.4 இலட்சம்.

நமது மாநிலத்திலிருந்து கறவை மாடுகளும் இழுவை மாடுகளும் வெளி மாநிலங்களுக்கு, குறிப்பாக கேரள மாநிலத்திற்கு இறைச்சிக்காக பெரும் அளவில் கொண்டு செல்லப்படுவதாக முறையீடுகள் அரசுக்கு 1974 ஆம் ஆண்டில் வந்தன.

1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ் நாடு பால்வள நிறுவன நிர்வாக இயக்குநர், ஓராண்டு காலமாக நல்ல கறவை மாடுகளின் விலை ஏறிக்கொண்டு வருவதாகவும், நல்ல கலப்பின கறவை மாடுகள் நீலகிரியிலிருந்து, கேரளம், கர்நாடகம், மற்றும் ஏனைய மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்தார். ஆதலால் இம்மாநிலத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு கால் நடைகள் கொண்டு செல்லப்படுவதைக் கட்டுப்படுத்த சட்டமியற்ற வேண்டுமென கருத்துத் தெரிவித்தார.

கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரைக் கலந்து ஆலோசித்து, மாநிலங்களுக்கிடையே கால்நடைப் போக்கு வரத்தினைத் தடை செய்வதற்கான சட்டமியற்ற 1975-ம் ஆண்டு உத்தேசிக்கப்பட்டது.

உத்தேசிக்கப்பட்ட சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் ஒருங்கியல் சட்டமன்ற அதிகாரப் பட்டியலில் இடம் பெறுவதால் (Concurrent Legislative Field) இம்மசோதா மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசு இவ்வகைக் கால்நடை நடமாட்டக் கட்டுப்பாடு ஒரு மாநிலத்திற்கு மட்டும் ஏற்கப்படுமானால் மற்ற மாநிலங்களும் இவ்வகைக் கோரிக்கையினை முன்வைக்கும் என்றும், அதனால் வளர்க்கப்படும் கால்நடைகளின் நடமாட்டத்திற்குத் தடங்கல் எற்படும் என்றும் சுட்டிக்காட்டியது. மேலும் பயனற்ற கால்நடைகளின் நடமாட்டக் கட்டுப்பாடு அம்மாநிலத்தின் நலனுக்கு உகந்ததாயிராது என்றும், அத்துடன் கால்நடை தீவனம் மற்றும் பசுந் தீவனம்போன்றவை கிடைப்பதில் சிரமங்களை ஏற்படுத்தும் எனவும் மத்திய அரசு குறிப்பிட்டது. எனவே, மத்திய அரசு, ஆலோசனைப்படி குஜராத்தில் உள்ளது போல் பயனற்ற கால் நடைகளையும், வளர்ப்பதற்காக குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை வரை கறவை மாடுகளையும் மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்ல அமைதி வழங்க வகை செய்து "தமிழ்நாடு கால்நடை (நடமாட்டக் கட்டுப்பாடு) அவசரச் சட்டம்" என்ற பெயரில் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டது. இவ்வசரச் சட்டத்தினைக் கொண்டுவருவதற்கு குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற மத்திய அரசுக்கு 24-5-75-ம் தேதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

சில மாநிலங்களைப் பொறுத்தவரை கால்நடை நடமாட்டத் திற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவித்திருந்தாலும் அன்றைய சூழ்நிலையில் ஆரோக்கியமான கால்நடை வளர்ச்சிக்கு நாடு தழுவிய பொது விற்பனைத்தலம் தேவை என்றும், கால்நடை நடமாட்டத்திற்கு எவ்விதமான தடையும் கூடாது என்பதற்கான நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பிராந்திய உணர்வுகள் விரும்பத் தக்கவையல்ல என்றும் மத்திய அரசு 1976 ஏப்ரலில் தெரிவித்தது. இச்செயற்குறிப்பின் தொடர்புடைய எல்லா அம்சங்களையும் கருத்திற்கொண்டு தேவையெனில் புதிய செயற் குறிப்புகள் அனுப்பலாமெனவும் மத்திய அரசு தெரிவித்தது.

1976 ஜுலையில் நமது மாநிலத்தில் பசு பாதுகாப்பிற்குத் தகுந்த நடவடிக்கைகள் உள்ளனவா என ஆராயும்போது, மாநில எல்லைக்கப்பால் கால்நடைகள் கொண்டு செல்லப்படுவது பற்றி ஆராயப்பட்டது. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் (Food and Agricultural Organisation) அறிக்கையில் (1975 ம் ஆண்டு) தமிழ் நாட்டில் மாடுகளின் எண்ணிக்கையினை குறைத்து செம்மறி

1979 மார்ச் 19] *[செல்வி பி. டி. சரஸ்வதி]*

ஆடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி இவற்றின் சதவிதத்தினை அதிகரிக்க வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. அவ்வறிக்கை, தீவனப் பற்றாக்குறை ஏற்படுமெனவும், ஆகவே மாடுகளின் தொகையினை 50% அல்லது அதற்குமேல குறைக்க வேண்டுமெனவும் பரிந்துரை செய்துள்ளது. இப்பிரச்சினையினை ஆழ்ந்து ஆராய்ந்தபின் செயற்கையான தடை மூலம் மாநிலங்களுக்குள்ளான மாட்டு வியாபாரத்தில் குறுக்கிடுவது நல்லதல்ல எனக் கருதப்பட்டது.

1976 ம் ஆண்டில் கால்நடைகளின் நடமாட்டம் பற்றிப் புள்ளி விவர ஆய்வு நடத்தியபோது வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படும் மாடுகளில் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மாடுகள் தரம் குறைந்த, பயனற்ற, மற்றும் வயதான, இம் மாநிலத்தில் விலை போகாத மாடுகள் என்று அறியப்பட்டது. இப்படிப்பட்ட பயனற்ற மாடுகளைத் தக்கவைத்துக் கொள்வதால் கால்நடை தீவனப் பஞ்சம் ஏற்படுமெனவும் இவைகளை இம்மாநிலத்தைவிட்டு வெளியே கொண்டு செல்ல அனுமதிப்பதன் மூலம் கால்நடை தீவன விரயம் தடுக்கப்படலாம் எனவும் அறியப்பட்டது. மேலும், தற்பொழுது நமது மாநிலத்திற்குப் பிற மாநிலங்களிலிருந்து தரமான கால்நடைகள் கிடைக்கப் பெறுகின்றன.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் இம்மாநிலத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் மாடுகள் நடமாட்டம் பற்றி தடை விதிக்க சாத்தியக் கூறில்லை.

பொதுவாக, இறைச்சியின் விலையேற்றத்திற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) கால்நடைகளும், இறைச்சியும் பிறமாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

(2) பருவ மழை தவறாமல் பெய்வதால், கால்நடைகளின் மேய்ச்சலுக்கு ஏற்றவகையில் புல்வெளி நிலங்கள் அதிக அளவில் உள்ளன. அதனால், விற்பனைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளன.

(3) கால்நடைகளின் வணிகத்தில் பெருமளவில் ஈடுபட்டுள்ள சிலர் கால்நடை விற்பனையைக் கட்டுப்படுத்துவதாகத் தெரிகிறது.

கால்நடை போக்குவரத்தை கட்டுப்படுத்துவதில் சில பிரச்கினைகள் ஏற்படுகின்றன. அரிசி மற்றும் கோதுமை போன்றவைகளுக்கு நாடு முழுவதும் ஒரே மண்டலமாக்கி. உணவு தானிய போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. கால்

நடைகள் பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதை தடை செய்தால் அண்டைமாநிலங்களும் அம்முறையை கையாளும், அதனால் ஆந்திராவிலிருந்து சென்னை நகரத்திற்கு கொண்டு வரப்படும் கால்நடைகள் நிறுத்தப்படும். கால்நடைப் போக்கு வரத்தை தடைப்படுத்துவதால் கால்நடைகளின் விற்பனை விலையேறி கால்நடை விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

பண்டங்களின் விலையை, குறிப்பாக இறைச்சியின் விலையைக் கட்டுப்படுத்துவதன் மூலம், அவ்வணிகத்தில் ஈடுபட்டுள்ளோர் அது சம்பந்தமாக உரிமம் பெறுவதையும், தங்களிடமுள்ள இருப்பு சம்பந்தமான விவர அறிக்கை அரசு அதிகாரிகளுக்கு அனுப்பு வதையும் ஒழுங்குபடுத்த முடியும். இதன் மூலம் பதுக்கலைத் தடுக்கலாம்.

இறைச்சி விலையைக் கட்டுப்படுத்த, அங்காடிக்கு வருகின்ற கால்நடைகளின் விற்பனை விலைக்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டும். மாநிலங்களுங்கிடையே கால்நடைகளின் போக்கு வரத்தை தங்கு தடை இன்றி அனுமதித்தால் கால்நடைகளின் விற்பனை விலையை ஒரே சீராக வைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. ஆனால் நடைமுறையில் இதைச் செயல்படுத்தச் சாத்தியமில்லை.

சட்டரீதியில் இறைச்சியின் விற்பனை விலையை அறுதியிடுவது சம்பந்தமாக ஆராயப்பட்டது. நிலைமைகளையொட்டி விலைகள் தாமாகவே நிலை பெறுமாறு விட்டுவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தரமான இறைச்சி மலிவான விலையில் கிடைப்பதற்காக இவ்வரசு 47 கோடி ரூபாய் செலவில் ஒரு ஆடு வளர்ப்புத் திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்ட அறிக்கை கீழ்க்கண்டவகைளுக்கு வகை செய்கிறது:

1) 33,000 ஆட்டினப் பிரிவுகளை ஏற்படுத்துதல்;

2) தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்துதல்;

3) பெரும் அளவில் ஆடுகளைப் பாதிக்கும் குடற்புழுக்களை நீக்குதலின் மூலம் இறைச்சி உற்பத்தியைப் பெருக்குதல்;

4) பெரிய அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்;

5) கலப்பின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்;

6) ஆட்டிறைச்சிக் கொட்டில்களை நவீனப்படுத்துதல்.

இத்திட்டம் ஆறு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். தற் பொழுது தமிழ் நாட்டில் ஆண்டொன்றுக்கு 24 இலட்சம் செம்மறியாடுகளும் 19 இலட்சம் வெள்ளாடுகளும் இறைச்சிக்காக

1979 மார்ச் 19] [செல்வி பி. டி. சரஸ்வதி]

கிடைக்கின்றன. இத்திட்டத்தின் மூலம் இறைச்சிக்காகக் கிடைக்கும் ஆடுகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

வருடம்.	ஆட்டுக் கிடா.	பெட்டை ஆடுகள்.
	(எண்ணிக்கை இலட்சத்தில்.)	
முதல் ஆண்டு	2·97	7·92
இரண்டாம் ஆண்டு	4·29	10·56
மூன்றாம் ஆண்டு	6·27	13·86
நான்காம் ஆண்டு	8·58	18 48
ஐந்தாம் ஆண்டு	11·22	23·75
ஆறாம் ஆண்டு	16·50	36·30

மேலும் இறைச்சி சுகாதார முறைப்படி குறைந்த விலையில் கிடைப்பதற்கு தனி நிறுவனம் ஒன்று நிறுவி நவீன இறைச்சிக் கொட்டில் ஒன்று நிறுவி (Modern Abattoir) ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் ஆட்டிறைச்சி மலிவான விலையில் மக்களுக்குக் கிடைக்குமென அரசு எதிர் பார்க்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆட்டு இறைச்சியின் விலை கூடுதலாகியுள்ளதைப் பற்றி கவனத்திற்கு கொண்டு வருகிறபோது, ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். 74—லே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பதிலின் விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை, கடந்த இரண்டு மாத காலமாக, இந்த ஆட்டு இறைச்சி அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. கிலோ ரூ. 10 என்றிருந்தது, இப்போது கிலோ ரூ. 20-க்கு விற்கப்படுகிறது. சராசரி தமிழ் நாட்டில் ஒரு நாளைக்கு 5 லட்சம் கிலோ தேவைப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால், தினசரி 50 லட்சம் ரூபாயை இங்குள்ள மக்கள் அதிகமாக தர வேண்டி யிருக்கிறது. அது மாத்திரமல்ல. இப்படிக் கணக்குப் பார்த்தால், மாதம் ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் என்றும், ஆண்டு ஒன்றுக்கு 180 கோடி ரூபாய் என்றும் வருகிறது. இரண்டு கோடி ரூபாய் மக்கள் மீது வரி போட்டதற்கே உணர்வு கொள்ளுகின்ற அமைச்சர் அவர்கள், இப்படி 180 கோடி ரூபாய் கொடுக்கின்ற அளவிற்கு, அதிலும் கடந்த இரண்டு மாத காலமாக இப்படிப்பட்ட ஒரு பெரிய அளவில் நிலைமை ஏற்பட்டிருக்கிறதை, இதனால் எந்த அளவுக்கு தமிழக மக்கள் பாதிப்பார்கள் என்பதை கவனிக்க வேண்டும். தமிழ்நாட்டிலே தான் இந்த இறைச்சி சாப்பிடுகின்றவர்கள் ஜாஸ்தி.

[1979 மார்ச் 19

[முற்பகல் 11·40]

இது எப்படி பாதிக்கும் என்பதையும் இது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாடுகளைக் கேரளாவுக்கு ஓட்டிக்கொண்டு செல்லுகிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பொது விவாதத்தில் இதைப்பற்றி எல்லாம் பேசலாம். இல்லையென்றால் திரு. அம்பிகாபதி அவர்கள் பொது விவாதத்தில் தன்னுடைய நேரத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: மாடுகள் கேரளாவுக்குப் போய்க் கொண்டே இருக்கின்றன. எங்கள் ஜில்லாவில் விவசாயிகள் காசு கொடுத்து மாடு வாங்க முடியாத நிலைமையில் ஓட்டிப் போகிற மாடுகளை மறித்து உழலாமா என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிற மாடுகளின் எண்ணிக்கையை ஆராய்ந்து பார்த்தபோது அவை 90 சதவிகிதம் பயனற்ற மாடுகள் அல்லது இந்த ஊரில் விலை போகாத மாடுகள் என்ற காரணத்தாலும், மத்திய அரசு மாநிலங்களுக்கு மத்தியில் கால்நடைகள் நடமாட்டம் இருக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருக்கும் காரணத்தாலும் இதைத் தடைசெய்வதற்தில்லை என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இறைச்சியில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது பற்றிச் சொன்னார்கள். எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது கால் நடைகளைப் பராமரிக்கும் இலாகா. நான் இதுகுறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவர்கள் மத்திய அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள், இந்த மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்கு அல்ல — தமிழகத்தில் இருந்து அடுத்த நாடுகளுக்கு கால்நடைகள் கடத்தப்படுவதை நிறுத்த வேண்டுமென்று.

திரு. செ. சிவசாமி: அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் உதவாக்கரை மாடுகள் ஓட்டிச் செல்லப்படுகின்றன என்று சொன்னார்கள். கேரளத்தில் இந்த மாடுகளின் இறைச்சியைத் தயார் செய்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். தோல்களை எல்லாம் பதப்படுத்த நல்ல

முறையில் பெரிய பாக்டரிகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அந்தத் தோல்களைக் கொண்டு ஏன் நம்முடைய தமிழகத்திலேயே ஒரு டானிங் இண்டஸ்ட்ரியை ஏற்படுத்தக் கூடாது. அந்த இறைச்சியைப் பதப்படுத்தி நாமே ஏன் வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாது? எலும்பை பாஸ்பேட் உரத்திற்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? உதவாக்கரை மாடுகளானாலும் இறைச்சி, தோல், எலும்பு இருக்கிற காரணத்தால் அதைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட வழி செய்வார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது, எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது கால்நடை வளர்ப்பு பற்றியது. அவற்றின் உயிரைப் பறிக்கிற அதிகாரம் எனக்கு இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: ஆடுகளும் மாடுகளும் அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதன் காரணமாக தமிழகத்தில் கால்நடைச் செல்வங்கள் நாளுக்கு நாள் அழிந்து கொண்டு வருவதை கால்நடைப் பராமரிப்புத் துறை, வளர்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? கால்நடைச் செல்வங்கள் இல்லாமல் விவசாயிகள் தவிப்பதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இன்றைக்கு மாடுகள் பெருமளவில் நாட்டில் குறைந்து வருவதன் காரணமாக விவசாயிகள் தங்களுடைய விவசாயத் தொழிலுக்கு மாடுகளை வாங்க முடியாத அளவுக்கு விலையேற்றத்தின் காரணமாக அவர்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இன்றைக்கு ஆட்டிறைச்சியைப் பொறுத்தவரை சேலத்திலுள்ள மேச்சேரி, திருச்செங்கோடு, ராசிபுரம் அறுசுவைக்குப் பேர் போனது, அந்தப் பகுதியிலேயே ஆட்டிறைச்சி கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் குடிசைத்தொழில் தோல்பதனிடும் தொழில் பாதிக்கப்படுவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆகவே, அண்டை மாநிலங்களுக்கு ஆடு மாடுகள் கடத்தப்படுவதை தடுக்க விரிவான சட்டம் கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: ஆந்திரத்திற்கு ஆடுகள் அனுப்பப்படுகின்றன. அதே நேரத்தில் ஆந்திரத்திலிருந்து தரமான கால்நடைகள் இங்கு கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக இங்கே தோலைப் பற்றிச் சொன்னார்கள். முதல் கேள்வியிலேயே அதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன். அதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் நான் இல்லை. அவர்கள் எண்ணிக்கையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். நான் மாடுகளின் தரத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இந்த அரசு பொறுபேற்ற பிறகு ஒவ்வொரு மாவட்ட கால்நடைப் பண்ணையிலும்

ஒவ்வொரு விதமான கால்நடைகளை வளர்க்க முயற்சி எடுத்துள்ளோம். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்துள்ள மாடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் முன்பு 52 கால்நடைகளை அனுப்பியிருந்தார்கள். இப்போதும் 100 கால்நடைகளை அனுப்பியிருக்கிறார்கள். இப்படி முழுக்சு முழுக்க தரமான கால்நடைகளை வளர்க்கிற முறையிலே நீலகிரி மாவட்டத்திலே ஜெர்ஸி ஹாஸ்டின் ஒசூர் பகுதியிலே சிந்தி, ஜெர்ஸி கலப்பினக் கால்நடைகளையும் உருவாக்கி வருகிறபோது தரமற்ற கால் நடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதில்லை. தரமுள்ள மாடுகளை அதிகரிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த இலாகா தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி விலையைப்பற்றித்தான். ஆடு வளர்ப்பு பற்றி, மாடு வளர்ப்பு பற்றி கேட்கவில்லை. நாளைக்கு யாரிடம் கேட்பது என்பதைத் தலைவர் தெரிவிக்கவேண்டும். ஆட்டினுடைய விலை பற்றியும், மாட்டினுடைய விலை பற்றியும் தான் கேள்வி கேட்டிருக்கிறேன், அப்படியானால் வேறு அமைச்சர் அதை எடுத்துக்கொண்டு பதில் சொல்லியிருக்கலாமே, யாரிடத்திலே கொடுக்கவேண்டுமென்று தெரிவிக்கவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: நாங்கள் கவன ஈர்ப்புக் கொடுப்பதன் அடிப்படை நோக்கம் கால்நடைச் செல்வங்கள் அழிந்து போகாதபடி தடுக்கப்படவும், அதன் மூலமாக குடிசைத் தொழில்களான ஆட்டு ரோமம், கம்பளம் தயாரிக்கும் தொழில்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும் கொண்டு வருகிறபோது அமைச்சர் பாதிப் பொறுப்புத்தான் எனக்கு இருக்கிறது, மீதி பாதி மற்றொரு அமைச்சருக்கு இருக்கிறது என்று சொல்கிறார்களே, சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு கூத்தகுடி சண்முகம் அவர்கள் சொன்னதுபோல் எந்த இலாகா என்று பரிசீலித்து முடிவு எடுக்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் 41இல் கொடுத்தார்கள், கேள்வி கேட்டார்கள், பதில் சொல்கிறார்கள் நான் கொடுக்கவில்லை, ஆகவே கேள்வி கேட்கவில்லை, ஆனால் முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாடுகள் கேரளாவிற்கும் ஆடுகள் ஆந்திராவிற்கும் கடத்தப்படுவதால், சென்னை மாநகரத்திலே

1979 மார்ச் 19] [திரு. துரை. முருகன்]

ஆட்டு ஈரலுக்குப் பதிலாக, நாய் ஈரல் போடுகிறார்கள் என்று சட்டநாதன் கமிட்டி அறிக்கை கொடுத்திருக்கிறது, அதைப் போக்குவதற்கு சர்க்கார் சட்டம் வைத்திருக்கிறதா?

திரு. க. சுப்பு: ரொம்ப முக்கியமான விஷயம், ஒன்றே ஒன்று. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சாவூரிலே பேசும்போது மத்திய அரசு நெல்லுக்கு 130 ரூபாய் விலை கொடுக்கவில்லையென்றால் அமைச்சர்கள் உண்ணாவிரதமிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் இருக்க வேண்டியதுதான், நாங்கள் அதை வரவேற்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லவேண்டியது என்ன என்று மாத்திரம் சொல்லுங்கள், பிரச்சினையைப் பேசிக் கொண்டே போகிறீர்களே, எனக்குத் தெரியாதது போலவும் தாங்கள் விளக்குவதைப் போலவும் சொல்கிறீர்களே, சரிதானா?

திரு க. சுப்பு; ஏற்கனவே விதி 42 இன் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் விறாலிமலையிலே விவசாயிகள் கடன் வசூல் கெடுபிடி தாங்காமல் அதன் காரணமாக அவர்கள் அல்லலுக்கு ஆளாகியிருப்பதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு 42 பேர்கள் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அதனால் பதட்ட நிலைமை இருக்கிறது என்று தீர்மானம் சனிக்கிழமை கொடுத்திருந்தேன். ஆகையினாலே அமைச்சர்கள் உண்ணாவிரதம் இருப்போம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள் எப்பொழுது ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கொடுத்திருப்பது முற்றுகையிடுவதாகத் தகவல் வருவதால் என்றுதான் கொடுத்திருக்கிறீர்கள், ஆகவே பதட்ட நிலமை இருக்கிறதா என்று இலாகா மூலம் விசாரித்து கொண்டு சொல்கிறேன், உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எப்போதும் எழுந்து இருக்கலாம், எனவே அப்படிச் சொல்லிக்கொண்டு தாங்கள் எழுகிறீர்கள்.

திரு. துரைமுருகன்; இம்பார்ட்டண்ட் பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கேளுங்கள் மிகமிகப் பரபரப்பான சூழ்நிலை வெளியில் நடந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான சட்டக் கல்லூரி மாணவர்கள் கோட்டைக்கு ஊர்வலமாக வந்து கைது

செய்யப்பட்டு லாரியிலே அவர்களை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். கோட்டைக்கு ஊர்வலம் வந்தாலும் கைது என்ற முறையிலே ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற மாதிரி, (மணியடிக்கப்பட்டது) என்னைப் பேச வேண்டா மென்றால் சொல்லுங்கள், அதற்காக அடிக்கடி மைக்கை ஆப் செய்வது எனக்கு அவமானமாக இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நான் மணி அடித்தாலே அவர்கள் ஆப் செய்ய வேண்டும் அதுதான் முறை. தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள், அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

திரு. துரைமுருகன்; அப்படியானல், சர்க்கார் என்ன பதில் சொல்லுகிறது என்று கேளுங்களேன்.

[முற்பகல் 11.50]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில் விடுமுறை அளிக்கப் பட்டு விட்டது. ஆகவே, மாணவர்கள் இங்கே இருக்கிறார்களா இல்லையா என்பது தெரிந்து சொல்லவேண்டிய விஷயம்.

திரு. துரைமுருகன் : இப்பொழுது வெளியிலே போய்க் கொண்டிருக்கிறார்கள்.

7. வரவு-செலவுத் திட்டம் 1979-80— பொதுவிவாதம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு குறையைச் சொல்ல விரும்பு கிறேன். எங்களுக்கு உரிய நேரம் கிடைக்காமல் போகிறது. ஆகையால் இன்றைக்கு அந்த நேரத்தைக் கொடுத்துப் பேசச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 100 நிமிடங்கள் இருக் கின்றன, நான் எப்படிச் செய்யமுடியும்? அடுத்து, 1979-80—ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, 1979-80-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் : திரு. எஸ். ஜே. இராமசாமி— (தலைமை)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபொழுது உள்ள படியே பாராட்டக் கூடிய அளவிற்கு வார்த்தைகளாலே அலங்காரங்கள் இருக்கின்றன. ஆனால் நடைமுறையிலே பார்க்கின்றபொழுது அது ஒத்துவருமா, நிர்வாகத்திற்கு உட்பட்டு வருமா என்று பார்க்கின்றபொழுது இது உண்மையான அறிக்கை அல்ல, இது நாட்டிற்குப் பயன்படக்கூடிய அறிக்கை அல்ல என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோன்ற அறிக்கையைப்பற்றி ஒரு பெரிய மனிதர், நம்முடைய தமிழக அரசால் நியமிக்கப்பட்ட பெரிய மனிதர், நம்முடைய பங்காளி மாநிலமான பக்கத்து மாநிலத்தைப்பற்றி,

அவர்களுடைய நிதிநிலை அறிக்கையைப்பற்றி, அதுவும் பத்து கோடி வருமானம் வரக்கூடிய அந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். காரணம், இப்பொழுது ஆளுங்கட்சியாக இருக்கின்ற இதே கட்சிதான் நம்முடைய அண்டை மாநிலத்திலும் அப்பொழுது ஆளுங்கட்சியாக இருந்தது. அந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும் பொழுது இப்படிக்கூடச் செய்வார்களா என்ற அளவிற்கு இருந்தது. ஆளுக்கு ஒரு வீடு, ஒரு ஃபியட் கார், இரண்டு எருமை மாடுகள், ஐந்து ஏக்கர் நிலம். ரூபாய்க்கு இரண்டு படி அரிசி போடக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள், எண்ணமுள்ள நிலையிலே உள்ளவர்கள், இப்படி அவர் உண்மையாகவே சொன்னாரா அல்லது நையாண்டிக்காகச் சொன்னாரா என்று எனக்குத் தெரியாது. அந்த நிலையிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப் பட்டிருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கிராமங் களில் இருக்கின்ற மக்களுக்கு வேலையில்லாத நேரத்தில், approximately Rs. 3 என்று ஆங்கிலத்திலே Some wheat or some rice என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தாராளமாக மூன்று ரூபாய் என்று சொல்கிறார்கள். ஒன்றேகால் ரூபாய்கூட இருக்கலாம். Some wheat or some rice என்று சொல்லும்பொழுது ஆங்கில பட்ஜெட்டிலே சொல்லும்பொழுது அள்ளிக் கொடுக்கப் போகின்றீர்களா அல்லது கிள்ளிக் கொடுக்கப் போகின்றீர்களா என்று கேட்பது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

அதேநேரத்திலே, நம்முடைய நாட்டில் இப்பொழுது சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதற்குப் பல்வேறு சம்பவங்கள் எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இன்றைய தினம்கூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற இடங்களிலேயே திருட்டுக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. உறுப்பினர்கள் பலர்

தங்களுடைய உடமைகளை இழந்திருக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துப் பேசப்பட்டன, நேற்றைக்கு முன்தினமும் இன்றைய தினமும்.

அதுமட்டுமல்ல, இன்னொன்று, அண்மையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி, ஈ. ஐ. டி. பாரியிலே வேலை செய்பவர், எஸ். ஜே. பிரிட்டோ என்று பெயர், கடந்த 28–9–78–ல் தன்னுடைய வீட்டிற்குச் செல்கின்ற நேரத்தில் வீட்டிலேயிருந்த பல சாமான்கள் திருட்டுப் போயிருக்கின்றன என்று எச்-3 போலீஸ் ஸ்டேஷனில்——(மணியடிக்கப்பட்டது) பேச வேண்டாமென்று சொன்னால் சொல்லிவிடுங்கள், இப்பொழுதுதான் ஆரம்பித்தேன். அவர் ரிப்போர்ட் செய்திருக்கிறார், ஒன்பதாம் மாதம் செய்திருக்கிறார். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில், கிருபாகரன் என்ற மீனவர் எண்ணூருக்குச் சென்றிருக்கிறார். 28-12-78ஆம் தேதியன்று எண்ணூருக்குச் சென்றவர் இதுவரையில் கிடைக்கவில்லை, எண்ணூர் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. முதலமைச்சரவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது, ஐ. ஜி-க்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள டி. எஸ். பி-க்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு நடவடிக்கையும் இல்லை. இதைப் பார்க்கின்றபொழுது எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. நமது முதலமைச்சரவர்கள் கூட அண்மையிலே ஒரு அரிய கருத்தைக் குறிப்பிட்டார்கள். திருடனைப் பிடித்தாலும் திட்டுகிறார்கள் என்று நமது முதலமைச்சரவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆக, திருடனைப் பிடிப்பவர்கள்....

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி) : தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் 5 நிமிடம். எல்லோருக்கும், 5, 5 நிமிடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்காவது நான் பாரபட்சம் காட்டினால் உறுப்பினர்கள் அப்பொழுது கேட்கலாம், உடகாருங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாற்றுத் தலைவரவர்களே, கொஞ்சம் கருணை வையுங்கள். திருடனைப் பிடித்தால் திட்டுகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே திருடனைப் பிடித்தால் திட்டுகிறார்கள் என்றோ, என்னவோ இது போன்ற திருடுகள் பல்வேறு பிராது கொடுத்தும் இந்த ஆட்சியில் கண்டு பிடிக்கப்படாத ஒரு அவல நிலை இருக்கிறதென்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1979 மார்ச் 19] [திரு. ப. பொன்னுரங்கம்]

அடுத்து, பெரியாரைப்பற்றி, பெரியார் விழா கொண்டாடுகிறோம், பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம் என்று அதற்கு விடுமுறை கூட விட்டார்கள், மாநில அரசு ஊழியர்களுக்கு. ஆனால், ஏன் மற்றவர்களுக்கு விட்டிருக்கக் கூடாது? விடுமுறையை என்ன தாராளமாகவா தந்திருக்கிறார்கள்? அந்த விடுமுறையை காம்பன்சேஷன் செய்திருக்கிறார்கள். பெரியாருடைய நூற்றாண்டு விழாவுக்கு விடுமுறை கொடுத்ததற்காக, இன்னொரு நாளை காம்பன்சேஷன் செய்திருக்கிறார்கள். அப்படியென்றால், மற்றவர்களுக்கும்—ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமல்லாமல், எல்லோருக்கும்—விட்டிருக்கலாமே. அப்படியென்றால், அண்ணாவுக்கு விடலாம், முத்துராமலிங்கத் தேவருக்கு விடலாம், ஒவ்வொரு தலைவருக்கும் விடுமுறை விட்டிருக்கலாம்.

அடுத்து, பெரியார் சொன்ன தமிழ் சீர்திருத்தத்தைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அது தேவைதான். ஆனால், அது முறையாக நடைபெறவேண்டுமென்பது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த, தானைத் தலைவர் கட்டுரை எழுதினார்கள். அதற்கு வெளியிலே என்னென்ன விமர்சனங்கள் ஆளும் தரப்பிலே இருந்து வந்தது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால், பெரியார் சொன்ன தமிழ் சீர்திருத்தம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்றால், இல்லையென்பதற்கு அரசு கெஸட்டை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்....
(மணியடிக்கப்பெற்றது)

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தற்காலிக தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைக் கூறுகின்ற முகத்தான் அதன் மீது கருத்துக்களை வழங்குவதற்கு அனுமதித்ததற்காக முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கைமீது கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசிய அத்தனை உறுப்பினர்களும் இருக்கிற நிறைகளையும் குறைகளையும் எடுத்துக் கூறினார்கள். குறிப்பாக, ஆளுங்கட்சித் தரப்பிலே இருக்கிற அத்தனை பேர்களும் இருக்கிற நன்மைகளையும், அடித்தள மக்களுக்காக இருக்கிற நன்மைகளையும் எடுத்துக் காட்டி, பாராட்டிப் பேசினார்கள். அதேபோல், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் இருக்கிற குறைகளை சொல்கின்ற வகையிலே கேலியும் கிண்டலுமாக ஒருசில திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். நான் அதற்கெல்லாம் பதில் கூறவேண்டுமென்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்த போது, 16–3–1960-ஆம் நாள், நிதிநிலை அறிக்கை என்றால், எப்படி இருக்கவேண்டுமென்று இங்கே பேசிய கருத்தினை, குறிப்பிட்டாக வேண்டும். ''ஒவ்வொரு ஆண்டிலேயும் தரப்படும் நிதிநிலை அறிக்கைகளில்

இருந்து அடுத்த ஆண்டிலே எந்த அளவுக்கு எல்லா துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டத்தக்க வகையில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுமானால் மிகவும் உபயோகரமாக இருக்கும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக்கை, ஏழ்மையிலே இருக்கிற மக்களுக்கும் படித்து வேலையில்லாமலிருக்கிற மக்களுக்கும் வாழ்வு தருகிற வகையில் அமைந்திருக்கிறது என்பதை இங்கே மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒருசில வரிகள் போட்டதைப் பற்றிக் கூட குறிப்பிட்டார்கள். என்னுடைய ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து, இந்த அறிக்கையினால் ஏற்பட்டிருக்கிற நன்மைகளைக் கோடிட்டு குறிப்பிட்டுவிட்ட காரணத்தால், நான் ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்லவிரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

இங்கே போடப்பட்டிருக்கிற வரிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 71-72-ம் ஆண்டிலே தனது நிதிநிலை அறிக்கையைப் பற்றி இந்த மாமன்றத்தில் பேசிய போது ''இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப் பட வேண்டும் என்பதற்காகத் தான்—நாம் எப்படியும் தவிர்த்து விடலாம் என்று எண்ணினால் கூட—வரிகளின் மூலம் அவற்றிற்குத் தேவையான நிதி வாயில்களைப் பெருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். விற்பனை வரியில் கூட 3 சதவீதம் வரியை $3\frac{1}{2}$ சதவீதம் ஆக ஆக்கிய அதே நேரத்தில், நேற்று அந்தத் துறை தொடர்புடைய அமைச்சர் அவர்கள் இங்கே சில சலுகைகளை அளித்திருக்கிறார்கள். 15,000 ரூபாய் வரை டர்னோவர் உள்ளவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்பதை மாற்றி 25,000 ரூபாய் வரை டர்ன் ஓவர் உள்ளவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்றும், ரூ. 75,000 வரை கம்பவுண்டிங் பண்ணலாம் என்பதை ஒரு லட்ச ரூபாய் வரை கம்பவுண்டிங் பண்ணலாம் என்றும் சலுகைகளை நேற்றைய தினம் தெரிவித்து இருக்கிறார்கள்'' என்று பேசியிருக்கிறார்கள். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் எதிர்க்கட்சியிலே இருக்கிற போது ஒரு விதத்திலும் ஆளுங்கட்சியிலே இருக்கிற போது வேறு ஒரு விதத்திலும் சொல்கிறார்கள் என்று சொல்லவருகிறேன். அதே போல பத்து சதவீதம் சர்சார்ஜ் விற்பனை வரி பற்றி பேசும் போது, ''சென்னைக்கு மட்டும்தான் இந்த வரியா? கோவை சேலம், மதுரை, திருச்சி போன்ற நகரப்பகுதிகளுக்கு இந்த வரி கிடையாதா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆகவே, சென்னையின் புற நகரப்பகுதிகளுக்கும், கோவை, திருச்சி, மதுரை சேலம் போன்ற நகரங்களையும் அவற்றின்

1979 மார்ச் 19] [திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியம்]

புற நகர்ப்புறங்களையும் இணைத்து இதே விற்பனை வரி சர்சார்ஜை விதிக்கலாம் என்று உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க 10 சதவீதம் என்று இருக்கும் மேல்வரியை 5 சதவீதமாகக் குறைத்து விதிக்கலாம்'' என்று அறிவித்தார்கள். இதை எதற்கு சொல்கிறேன் என்றால் இன்றைய தினம் 25,000 ரூபாய் வரை வரிவிலக்கு அளித்திருப்பதை குறித்து பேசுகையில், 25,000 ரூபாயை நிர்ணயம் செய்வது யார்? அதை நிர்ணயம் செய்வதிலேதான் ஊழல் ஆரம்பிக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு கூறினார். நான் கேட்கிறேன். அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 25,000 ரூபாய் வரை வரிவிலக்கு அளித்தீர்களே அதை நிர்ணயம் செய்தது யார், அன்றைய மாவட்ட செயலாளர்களா? வட்ட செயலாளர்களா? எந்த அண்ணா நகர் கிராக்கியையும் வில்லிவாக்கம் கிராக்கியையும் மனதில் கொண்டு அப்படி செய்தீர்கள். மேலும் கூற வேண்டுமானால் நீங்கள் சேலம், கோவை, மதுரை போன்ற நகரங்களில் புறநகர் பகுதி நீங்கலாக சர்சார்ஜ் போட்டீர்கள். அதை நாங்கள் புற நகர்ப் பகுதிகளுக்கும் விரிவு படுத்தியிருக்கிறோம். எனவே, நீங்கள் ஆளுகின்ற பொழுது ஒரு முறையும், அதே நேரத்தில் எதிர்க் கட்சியானால் ஒரு மாதிரியும் பேசுவதைத்தான் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். எந்த அளவுக்கு வரி போட்டாலும் அது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அடித்தளத்தில் இருக்கும் மக்களை பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும், மாமேதை கீன்ஸ், மாஸ்கிரோவ் கூட வரி போடுவதால் விலைவாசி குறையும் என்று கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது அதேப்போல நாங்கள் எம்பிளாயின்மெண்ட் காரண்டி ஸ்கீம் என்று கொண்டு வந்ததை பற்றிப் பேசினார்கள். Food for work என்பதை பெயரை மாற்றி எம்பிளாயின்மெண்ட் காரண்டி ஸ்கீம் என்று போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பெயர் என்னவாக இருந்தால் என்ன. நாங்கள் கொண்டு வருவதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் வைக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. நாங்கள் ஒரு பூனையோ, நாயோ வளர்த்தால் அதற்கு தீனன் என்றோ, திருடன் என்றோ பெயர் வைக்க வளர்ப்பவர்களுக்கு உரிமை உண்டு. அதைப்போல எம்பிளாயின்மெண்ட் காரண்டி ஸ்கீம் என்றாலும், Food for work programme என்றாலும் அது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இருக்கிறதா என்றுதான் ஆராய வேண்டும். பெயரைப் பார்க்க வேண்டிய தேவை இல்லை. இதைப் பேசும்போது அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது.

"The prospect would not be easy. All this will not be finished with the first hundred days, nor will it be finished with the first thousand days, nor in the life of this administration

nor even perhaps in our life time on this plannet. But let us begin.,, ஒளிமயமான எதிர்காலம் என்பது எளிதல்ல. நாம் மக்களுக்காகச் செய்ய வேண்டிய நன்மைகள் முழுவதும் செய்ய ஒரு வருஷம் ஆகலாம். பல வருஷங்களும் ஆகலாம். முடியாமலும் போகலாம். செய்கிற வேலையை இன்றே தொடங்க வேண்டும் என்றார்கள். அதைப்போல தொடங்கியிருக்கிற திட்டம் படித்த, படிக்காத வேலையில்லாத மக்களுக்கு வேலை கொடுத்து தினம் 3 ரூபாயும் கிடைப்பதால் ஏழை மக்கள் மனம் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறது. மணியடிக்கப்பட்டது எனவே கென்னடி அவர்கள் குறிப்பிட்டதைப்போல நல்லதை தொடங்க தயக்கம் காட்டக் கூடாது என்றுதான் ஆரம்பித்திருக்கிறோம்.

திரு. அ. செல்லப்பா : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், எதிர்கட்சிக்காரர்கள் பேசும்போது 5 நிமிடங்களுக்கு மேல் பேசக் கூடாது, ஆளும் கட்சி ஆட்கள் என்றால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அளிக்கலாமா ?

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி) : நானும் அதற்குத்தான் மணியடித்தேன். திரு. சுப்பிரமணியன் அவர்கள் சீக்கிரமாக முடித்துக் கொள்ளக் கோருகிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன் : It is a radical budget. இது ஏழைகளின் குறை தீர்க்க நல்ல முறையில் கொண்டுவரப்பட்ட முற்போக்கான நிதிநிலை அறிக்கையாகும். குறிப்பாக வறட்சியால் வாடும் மக்களின் வாட்டத்தைப்போக்க வந்த புரட்சி பட்ஜெட் என்று கூறி வரவேற்று முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ்: ஜே. இராமசாமி) : திரு. மு. அம்பிகாபதி அவர்களை பேச அழைக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களை கூற விரும்புகிறேன். இந்த பட்ஜெட் நாட்டில் அடிப்படையாக எந்தவிதமான மாற்றங்களும் இல்லாத ஆண்டுதோறும் அளிக்கப்படுகிற வழக்கமான ஒரு பட்ஜெட்.

பட்ஜெட் வருகிறது என்றாலே சகல பொருள்களும் மறைந்துவிடும். ஏனென்றால் நிச்சயமாக வரி உண்டு என்பது அவர்களுக்குத் தெரியும். இப்போது மத்திய அரசு பட்ஜெட்

1979 மார்ச் 19] [திரு. மு. அம்பிகாபதி]

அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மாநில அரசின் பட்ஜெட்டும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மண்ணெண்ணெய் இப்போது காணாமல் போய்விட்டது. மண்ணெண்ணெய் கிடைக்காததால் மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, பட்ஜெட் அறிவிப்பு என்றால் வரி வரும் என்று மக்கள் உணர்ந்து இருக்கும் விஷயமாகும்.

குறிப்பாக பழைய நிதியமைச்சர்கள் நிதிச் செயலாளர் மதிப்பிற்குரிய குகன் அவர்களை நம்பி படகில்பயணம் தொடங்கி நிதிநிலை அறிக்கை வாயிலாக மக்களை பாதிக்கும் அத்தகைய வரிகளை அறிவித்ததன் விளைவாக அந்தப் படகு கவிழ்ந்து போய் விட்டது. இன்று இருக்கும் நிதி அமைச்சர் மதிப்பிற்குரிய நிதித் துறைச் செயலாளர் வெங்கடேசன் அவர்களை நம்பி மலையேற நினைக்கிறார்கள். நிச்சயமாக நினைத்து இருப்பது நடக்காது. நீங்கள் நிச்சயமாக மலையில் இருந்து கீழே விழு வீர்கள், உங்களுடைய லட்சியம் நிச்சயமாக நிறைவேறாது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

ஏனென்றால் பெரிய தொழிற்சாலைகளை துவக்கும் எந்த விதமான திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. கவர்னர் உரையில் 'மெரைன் காம்பிளக்ஸ்' பற்றி சுட்டிக் காட்டப்பட்டு இருந்தது. அதைத் தீவிரமாக உருவாக்குவதைப் பற்றியோ, அதற்கு நிதி ஒதுக்குவதைப் பற்றியோ, மற்ற எந்த விதமான விவரங்களைப் பற்றியோ, இந்த அறிக்கையில் குறிப் பிடவில்லை என்பது மட்டுமல்ல, பெரிய தொழிற்சாலைகளாக இருக்கும் ஹெவி பாய்லர் தொழிற்சாலை, பெரம்பூர் கோச் பாக்டரி, துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நம் மாநிலத்தில் ஏற்படுத்த, விரிவுபடுத்த, மத்திய அரசோடு பேச்சை நடத்தி வாங்குவதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

7—வது நிதிக் குழுவிற்கு தமிழகத்தின் சார்பில் ஒரு அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது, அந்த அறிக்கையைப் பற்றி கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டோம். சர்வ கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்து, விவாதித்து, அவர்கள் கருத்தறிந்து அதனை மத்திய அரசுக்கு அளிக்கவேண்டும் ஒன்று. மற்றொன்று தமிழகத்திற்கான திட்டங்கள் மத்திய அரசிடம் அளிக்கப்படுகிறபோது அதை சட்டமன்றத்தில் வைத்துவிவாதித்து அதன் பின்னர் அதை அளிக்கவேண்டும். இந்த இரண்டு விஷயங்களையும் நான் இப்போது வற்புறுத்துவதோடு இப்படிப் பட்ட அறிக்கைகளை தயாரிக்கிறபோது சர்வ கட்சிகளை நேரடியாகவோ, அல்லது சட்டமன்றத்தின் மூலம் முறையாகவோ கலந்து, அவர்கள் தருகிற ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு செய்தால் அது சரியாக இருக்கும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு மிகவும் முக்கியமானது என்று கருதப்படுகிற தூத்துக்குடி வரையிலும் பிராட்கேஜ் ரயில்பாதை அமைப்பதைப் பற்றியதாகும், மிகப் பெரிய நகரங்களில் இப்போது மதுரை தான் பிராட்கேஜ் ரயில்பாதையோடு இணைக்கப்படாத நகரமாகும். இன்றைக்கு எர்ணாகுளத்தில் இருந்து திருவனந்தபுரம் வரையில் கேரள அரசு பிராட்கேஜ் ரயில் பாதை போட நிலம், சிலிப்பர் கட்டைகள் போன்றவற்றை கொடுத்து, அந்த வேலையை முடித்துக்கொண்டு விட்டார்கள், இந்த மாநில அரசாங்கம் தமிழ்நாட்டில் பிராட்கேஜ் ரயில் பாதை போட எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? தொழில் துறை முன்னேற்றத்தில் உங்களுக்கு அக்கரை இல்லையா? நீங்கள் பிராட்கேஜ் அமைக்கும் முறையில் சரியான கவனம் செலுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க சர்க்கார் வேலையின் அளவை அளவு எடுத்து, மெஷரிங் எடுத்து, கோதுமை, பணம் கொடுப்போம், வேலை இல்லாத காலத்திற்கு கொஞ்சம் கோதுமை கொடுப்போம் என்று அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு வந்து பதிவு செய்யவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். சீர்காழியில் இருப்பவர்கள் தஞ்சைக்கு வர முடியுமா? சீர்காழியில் இருப்பவன் சென்னைக்குத் தான் வர முடியுமா? இதற்கான தெளிவான விளக்கமும் அளிக்கப் படவில்லை. மத்திய அரசு புட் பார் ஒர்க் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்பு 'ஐடில் மேன் பவர்' என்று காங்கிரஸ் கட்சி அறிவித்து இருந்தது. சீரணிப் படை என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வந்து அது அழிந்தே போயிற்று. அடிப்படையான மாற்றம் செய்வதற்கு, படித்த இளைஞர்களுக்கு பதவி கொடுக்க. உதவி செய்ய என்ன திட்டம் இருக்கிறது? அனைத்து இந்திய இளைஞர்கள் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் கன்னியாகுமரியில் இருந்து கால்நடையாக இராஜா அவர்கள் தலைமையில் சென்னை கோட்டையை நோக்கி 'வேலை வேண்டும் என்று கேட்டு வருகிறார்கள். அதேபோல் கோவையில் இருந்து எம். எ. பழனியப்பன் தலைமையில் பல்லாயிரக்கணக்கானவர்கள் வருகிறார்கள், அவர்கள் 23-ம் தேதி மாவீரன் பகவத் சிங் தூக்குமேடை ஏறிய அந்த நாளில் இங்கே வருகிறார்கள். சான்டோஸ் என்ற கலெக்டரை சுட்டு வீழ்த்த, பாராளுமன்றத்தின்மீது குண்டு வீசிய அந்த பகவத் சிங், லாலா லஜபத்ராய் அவர்களின் கழுத்தில் அடித்து மண்டையை உடைத்த சாண்டோஸ் அவர்களைக் கொன்று தூக்குமேடை ஏறிய பகவத் சிங் நினைவு நாளில் சென்னை கோட்டையை நோக்கி லட்சக்கணக்கான இளைஞர்கள் வலை வேண்டும் என்று கோரி விண்ணப்பம் கொண்டு

1979 மார்ச் 19]

[பிற்பகல் 12-10]

இங்கே வந்துகொண்டு இருக்கிறார்கள். நீங்கள் கொடுத்திருக்கிற இந்த உறுதிமொழியை, வேலை செய்தால் சாப்பாடு, செய்கின்ற அளவு கூலி என்பதை நாங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கேரளத்தைப்போல, மேற்கு வங்கத்தைப் போல படித்து வேலையற்றிருக்கிற இளைஞர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும். அதற்கான திட்டம் வேண்டும். திட்டம் இல்லாத நீங்கள் குடித்தால் 6 மாதம் என்று சட்டம் கொண்டுவர என்ன நியாயம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் வேலை செய்து பணம் பெறுவதை விட வேலை செய்யாமல் பணம் பெறுவதை ஆதரிக்கிறார்களா?

திரு. மு. அம்பிகாபதி: உழைக்காமல் ஊதியம் பெறுவது சரியல்ல. ஆனால்....வேலை கொடுக்க முடியாதவர்கள் நிவாரணமாவது கொடுக்கவேண்டும்.

திரு. ப. சந்திரன்: மாற்றுத் தலைவரவர்களே, பகவத்சிங் குண்டு வெடித்ததற்கும் வேலையில்லாப் பிரச்சனைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: நாங்கள் பகவத்சிங் பரம்பரை. அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாங்கள் அந்த நாளில் உரிமை கோருகிறோம் என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறோம்; பூரிப்பு அடைகிறோம். தேச விடுதலைக்கு இரத்தம் சிந்திய அந்தச் சிங்கத்தின் பரம்பரை நாங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நாம் அனைவரும் இந்தியர், எல்லோரும் அந்த பரம்பரைதான்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அந்தப் பரம்பரையைச் சேர்ந்த நாங்கள் இந்த ஊர்வலத்தை நடத்தி, கொடுக்க இருக்கிறோம். மதுவிலக்குச் சட்டத்தில் 1974-லிருந்து 1979 வரையில் 507,35,00,000 ரூபாய் நமக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று 7-வது நிதிக் கமிஷனுக்குக் கொடுத்த அறிக்கையில் கூறி இருக்கிறார்கள். இதே அறிக்கையில் 31-ம் பக்கத்தில் 1979-லிருந்து 1984 வரை 937,97,00,000 ரூபாய் இழப்பு என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட இழப்பு மட்டுமல்ல. மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்துவதில் பல கோடி ரூபாய் செலவாகிறது. இந்தச் சட்டம் அறிவிக்கப்

பட்ட பிறகு குடித்தவனிடம் 100 ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொண்டிருந்த சில போலீஸ் அதிகாரிகள் இன்று 400 ரூபாய் 500 ரூபாய் என்று வாங்க ஆரம்பித்து விட்டார்கள். 4 நாட்களுக்குள் அந்த அளவுக்கு ரேட் ஏறிவிட்டது. அதைப் போல பிராந்தி, சாராயம் விலையும் பல மடங்கு ஏறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. விவரம் தெரியாது; சொல்லப்படுகிறது.

மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் ஏற்படுகிற இப்படிப்பட்ட இழப்புக்களைத் தவிர்ப்பது மட்டுமல்லாது, ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கலாம்; சாலைகள் அமைக்கலாம் என்பதைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லி, இதை மறுபரிசீலனை செய்ய செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று அத்தனை எதிர்க்கட்சிகளும் சொன்னோம். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொல்லியும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. செலக்ட் கமிட்டிக்கு விடாமல், எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் சட்டத்தை நிறைவேற்றினீர்கள். அது உங்களுடைய பலம்; நிறைவேற்றினீர்கள்: ஆனால் அந்த பலத்தினால் வரக்கூடிய கெடுதலை நீங்கள் உணரவில்லை. வருவாய் இழப்பு ஒருபக்கம் இருக்க. ஏழை எளிய மக்கள் பாதிப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் மதுவிலக்குச் சட்டத்தால் நமக்கு பெரும் அபாயம்தான் இருக்கிறது. மது விலக்குச் சட்டத்தினால் 900 கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லி விட்டுவிட்டீர்கள். ஆனால் இரண்டரை கோடி ரூபாய்க்கு சட்டினி அரைக்கும் தேங்காய்க்கும் நெருப்பு பற்றவைக்கும் தீப்பெட்டிக்கும் வரி போட்டிருக்கிறீர்கள். சட்டினி அரைப்பதும், நெருப்புப் பற்ற வைப்பதும் அடுப்பங் கரையிலே. அந்த அடுப்பங்கரையிலே நுழைய உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது ? இந்த பட்ஜெட்டிலே சட்டினிக்கு வரி, நெருப்புப் பெட்டிக்கு வரி. அடுத்த பட்ஜெட்டிலே மாங்காய்க்கு வரி போடுவீர்கள் என்று நினைக்கிறேன்.

''வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்'' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணா வழியில் வந்தவர்கள் நாங்கள் என்று சொல்லிக்கொள்கிற நீங்கள் என்ன செய்கிறீர்கள் ? 840 கோடி ரூபாய்க்கு வரி உயர்ந் திருக்கிறது. வசதி பெருகியதா ? வறுமை, பசி, பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது: வரி உயர்ந் திருக்கிறது (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன் அருமை அண்ணா.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் பேச்சை முடிக்கப் போகிறார்கள். தீப்பெட்டி பற்றி யெல்லாம் சொன்னார்கள். பிராந்தியின் விலை இன்றைய தினம் என்ன என்று சொன்னார்கள். சுவையாக இருந்தது.

1979 மார்ச் 19] *[திரு. பி. முசிறிப்புத்தன்]*

மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அரசு விவசாயிகளுக்கு கூலியினை உயர்த்தியது சம்பந்தமாகவும் உழுபவனுக்கு 75 சதவீதமும் நிலச்சுவான்தாருக்கு 25 சதவீதமும் பங்கிட வேண்டும் என்று ஏற்பாடு செய்தது சம்பந்தமாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.......

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அதைப்பற்றியும் சொல்கிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரு இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அதாவது உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று அறிவிப்பு செய்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். 75 சதவீதம் 25 சதவீதம் என்பதெல்லாம் பெரிதல்ல. கூலிச் சட்டம் கீழத் தஞ்சைக்கு மட்டும் அறிவிப்பு, மாநிலம் முழுவதும் இல்லை. அதாவது பூராவும் உழுபவனுக்கே சொந்தம் என்று சொல்லியிருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாற்றுத் தலைவரவர்களே, இந்த கூலி உயர்வு கீழத் தஞ்சைக்கு மட்டும் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் பூராவும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் கூட இருக்கிறார்கள், அந்தக் குழுவின் பரிந்துரையை எதிர்ப்பார்க்கப்படுகிறது என்ற தகவலை தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மாற்றுத்தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களே சொன்னார்கள், அறிவிக்கப்பட்டிருக்கிற சட்டமும் கீழத்தஞ்சைக்கு மட்டும்தான் என்று. தமிழகம் முழுவதும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு கொடுக்கின்ற அடிப்படையில் போடப்பட்டிருக்கின்ற குழுவிலே மாண்புமிகு திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே குழுவிலே ஆளும் கட்சியினருக்கு சாதகமாக திரு. பாலசுப்பிரமணியம் என்பவரையும் போட்டிருக்கிறார்கள்...

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர் பெரும் பாலோர் ஆதி திராவிட மக்களைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் அந்த வகுப்பைச் சேர்ந்த சட்டம் படித்த ஒருவரை அந்தக் குழுவிலே போட்டிருக்கிறோம் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : எங்களிடமும் சட்டம் படித்தவர்கள் இல்லையா ? தமிழ் நாட்டில் பெரிய சங்கம் எங்கள் சங்கம்தான். இதில் தோழர் உத்திராபதியைப் போன்ற விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி விவரம் அறிந்தவர்கள் உண்டு. ஆகவே இப்படிப்பட்ட குழுக்களில் சர்வ கட்சியினரையும் இணைத்துப் போடுவதுதான் சர்க்காருக்கு நல்லது என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

*Thiru A. EAKAMBARA REDDIAR : Mr. temporary Speaker Sir, I raise to speak on various developmental schemes formulated by the Hon'ble Minister for Finance in the Budget for the year 1979-80. Though it aimed and envisaged ambitious measures for all round development in general and rural development in particular, the foaming community which was anxiously waiting with a ray of hope was thoroughly disappointed. Year after year the target of food-grains has been successfully achieved by the Government with the unstinted efforts of the grower incurring huge expenditure with poor returns and thereby making food position comfortable in the State. I may point out in this connection that everyone, from an ordinary man to the highest dignatory of our State saying that farmers should be given fair price, i. e. reasonable price, and cheaper inputs I may also point out in this connection the speech of the President of India on the eve of the 30th Anniversary. The President of India has stated "give farmers fair prices" and "cheaper inputs". The President also said in a message on the eve of the 30th Anniversary of Republic Day about India's villages, the hard working farmer, his contribution in securing a record output of foodgrains his needs and welfare. In the welter of demands and agitation by urban pressure groups for an ever increasing shares in the national cake, the needs of the poor farmer the real producer of wealth in our country are up to be overlooked. Let us not forget that India will prosper only if tiller of the soil lives and prospers. "Sir, I may not be at fault if I say that these are only "Lip Sympathy". I may not be at but if I say that everyone of us speak about the farmer's welfare but nobody puts into action about this. The Government of India fixed the procurement price on the basis of the Agricultural Prices commission's recommendation. They fixed Rs. 85 per quintal for paddy and Rs. 112.50 per quintal for wheat with a subsidy of Rs. 23.19 per quintal of wheat and only 4 paise to a quintal of rice.

(பிற்பகல் 12-20)

The Agricultural Prices Commission is of the view that paddy is not an end-product. Even agreeing that, they could have allowed a subsidy of at least 75% of the subsidy given to wheat and wipe out the disparity. I earnestly request the State Government to kindly move the Central Government and wipe out the disparity and press the

Centre to fix a remunerative price as already promised to State Governments. Their promise to State Governments could not be kept up for so many resons attributed by them. For so many years the agricultural population are not in a position to have a good crop due to floods, cyclone, drought and heavy rains. The farmers therefore are not in a position to repay their Government loans and co-operative loans and not because of any fault on their part but because of natural calamities; the farmers are not dishonest people. They are loyal people. But they are not in a position to pay due to natural calamities like drought, cyclone, floods and heavy rain etc. I must say in this connection that they are not at all at fault. Since they are not dishonest, I request the State Government to kindly come forward with a sound measure and bring in legislation to wipe out all the arrears and provide for current loans with long and easy instalments with cheaper interest. I may in this connection bring to the notice of the State Government that as long back as 1937-39 when Mr. Rajagopalachari (Rajaji) was the Chief Minister of Madras, he brought forward a legislation i. e. Agricultural Debt Relief Act. By that measure the entire loan arrears of agriculturists, the entire loan, was wiped out and at that time so many families (agriculturists) small and middle class families of agriculturists got relief. I request the present State Government to bring in legislation to wipe out loan arrears of agriculturists and thus provide relief to the farmers being the meekest in the weaker sections of society, I request the Hon. Chief Minister and the Hon. Minister for Revenue to bring in a legis lation to wipe out the loan arrears and also provide for easy and long instalments with lesser interest for current loans.

I am very glad the Tamil Nadu Land Ceiling Bill has been introduced. It is a welcome measure. In this connection I may point out that the lands taken over by the Government are going to be distributed to landless labourers and small agriculturists in the weaker sections of the farming community. Here I may point out that the Andhra Government has brought forward a legislation exempting small farmers from payment of land revenue, farmers owning 2½ acres of wet lands and 5 acres of dry lands. Mr. Kamaraj when he was Chief Minister of Tamil Nadu was about to bring in a legislation like that. But unfortunately he had to resign his post of the Chief Ministership of Tamil Nadu to take up the Presidentship of Indian National Congress. So that opportunity was lost due to his elevation to the Presidentship of Indian National Congress. I request the Hon. Chief Minister and Minister for Revenue to kindly bring in legislation to exempt the land revenue for small farmers and earn reputation in the comity of States. Farmers owning 2½ acres of wet

and 5 acres of dry lands should be exempted from the payment of land revenue. This will not entail any huge expenditure or tell upon the economy of the State exchequer.

Then about the employment guarantee scheme in rural areas. It is no doubt a welcome measure. I suggest a crash scheme for rural employment which is labour-cum-production-oriented. It will definitely benefit the rural population. The scheme can very well be introduced at the block level asking the educated unemployed and agricultural unemployed there to register their names with the Panchayat Union. The works can be executed under the supervision and control of Panchayat Union Commissioner. Labour-cum-production-oriented schemes like irrigation and roads works can be entrusted to Panchayat Unions. Wages can be paid without contract calculated on the out-turn basis. Then the daily wages will be between 6 to 9 rupees approximately, for every educated unemployed and agricultural unemployed working under this scheme. This will benefit the rural population. The allotment under Food for Work Scheme can de drawn from the Centre and utilised for this.

Then about irrigation, I am sorry to note that under minor irrigation, a drastic cut of Rs. 2,90,64,000. had been made; in the case of animal husbandry, the cut has been to the extent of Rs. 98,46,000. These two are allied sectors of agriculture. The present cut will hamper the growth of agriculture definitely. I am shocked at this cut. I request the Hon. Minister for Finance to provide sufficient funds in the revised estimates under Animal Husbandry and Minor Irrigation.

Under irrigation, in my constituency i. e. Pallipat there are two major PWD tanks, one at Veligram and the other at Pallipat for which the head works and supply channel are in Andhra Pradesh area and the tanks and beneficiaries are in Tamil Nadu. The same is the position to a PWD tank at Ponnimangadu in Tiruttani taluk. These are the transferred areas and no improvements and repairs were undertaken to the headworks and supply channels of these tanks from the year 1960 onwards. I request the Government of Tamil Nadu to undertake repairs and improvements after getting the concurrence from Andhra Pradesh with out any delay, so that more yield could be got.

Regarding handlooms, they provide the largest employment next to agriculture. Nearly 2½ crores of people depend on it in our country and 30 lakhs weavers are there in our State. Only an amount of Rs. 75 crores is spent on it whereas Rs. 2400 crores on public money is spent on the mill sector, where only 7to8 lakhspeople

depend on it. I request the Government to provide more working capital loans to weavers societies. I also request that yarn should be supplied from State societies regularly. The Central Government should be moved to reduce the price of yarn so that the weavers may be benefited.

We are glad that water supply schemes are being executed in 39 municipalities and 68 town panchayats during this year and will be extended to 4 more municipalities and 41 town panchayats next year. My previous request to take up this scheme in Podatoorpet town panchayat which is psedominantly a weavers, area has not been considered. I again request the Hon. Minister to kindly see that Podatoorpet and Pallipat town panchayats are included under this scheme, at least next year.

I welcomo the construction of residential quarters for revenue officials in their places of work. that is a welcomc measure.

Thiru R. THAMARAIKANI ; Mr. CHAIRMAN Sir, the hon. Member Mr. Reddiar spoke in English It may be translated into Tamil.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எஸ். ஜே. இராமசாமி), அவர் அப்படிப் பேசலாம். ஆந்திரப் பகுதியிலே இருந்து வந்திருக்கிறார். அப்படிப் பேசுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது ; எனவே பேசலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமசசந்திரன் : திரு. தாமரைக்கனி அவர்கள் ஆங்கிலத்திலே பேசியதால், அவரும் இதைப் புரிந்து கொண்டுதான் இருக்கிறார்.

Thiru. A. EKAMBARA REDDI : We are happy that 14 sub-taluks are going to be upgraded into taluks during the next year and that buildings are also going to be constructed. In this connection, recommendations for up grading the Pallipat sub-taluk were already there from the Collector and the Board of Revenue. As such, I request the Government, the Hon. Chief Minister and the Hon Ministers for Revenue and Finance to kindly see that Pallipat sub-taluk is upgraded with a banking sub-treasury and do justice to the people of that area.

[திரு. எ. ஏகாம்பர ரெட்டி] [1979 மார்ச் 19

As regards Integrated Rural Development Programme, we are extremely happy, that this scheme intended to develop villeges in all aspects is being implemented in 161 panchayat unions during this year, and going to be extended to 30 more panchayat unions next year. The policy of the Government is to extend the scheme only to places where the S. F. D. A. programme is in existence. Some non-S.F.D.A. blocks were also taken. I request and suggest that the backward blocks in my constituency which are coming under Categosy V may kindly be taken. I request the Government to include and take up Integrated Rural Development Programme in Pallipet, R. K. pet and Tiruttani Blocks which are very backward and fall in the category of down-graded Vth category.

Sir, a word about pensioners. The pensioners all over Tamil Nadu are gratful to the Chief Minister and the Finance Minister for granting recent pension increase to take effect from 1-4-79 I may suggest for kind consideration of the Government the grant of medical allowance of Rs. 15 instead of re-imbursement of medical charges provided in the Budget allotment for pensioners and this showing the act of grace. The minimum pension of retired officials and teacher pensioners should be raised to Rs. 150 as a Budjet gift this year. The anamoles in the quantum of pension between the present category of pensioners and those who retired earlier before 1970 should be removed by grant of D. A. to ensure parity

I conclude with a ray of hope that the minimum genuine request regarding the farmers will be complied with. Thank you Sir.

[பிற்பகல் 12-30.]

திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். கிராம மக்கள் வாழ்க்கைத்தரம் உயர பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். இன்றைக்குள்ள சூழ்நிலையில் கிராமங்கள் இருக்கிற நிலையினை நான் இங்கு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தெரு விளக்குகள் பல ஆண்டுகளாக பல கிராமங்களில் சரியாக எரிவதில்லை. பல கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு டியூப் லைட், பல்புகள் மற்றச் சாமான்கள் உடனடியாக வாங்கிக் கொடுக்க வழிவகை செய்யவில்லை. பல ஊராட்சி ஒன்றியங்களில் தனியார் கடைகளில் இருந்து வாங்கி மின்விளக்கு சாமான்களைக் கொடுக்கிறார்கள். அரசு சிறப்பு அங்காடியில் இருந்து அவற்றை வாங்க வேண்டும். தனியார் கடையில் வாங்குவதால் பல மோசடிகள் நடக்கின்றன.

1979 மார்ச் 19] [திரு. த. புஷ்பராஜு]

தகுதி, இல்லாத தரமில்லாத சாமான்களை அவர்கள் கொடுக்கிறார்கள். இவை எல்லாம் ஒன்று சேர்ந்து கிராமப்புறங்களை இருள்மயமாக ஆக்கிவிட்ட காட்சியை நாங்கள் இன்று பார்க்கிறோம். ஆகையால் இந்த நிலையை அரசு உடனடியாகப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

கிராமங்களில் முப்பதாயிரம், நாற்பதாயிரம் ரூபாய் செலவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டியிருக்கிறார்கள். அவை சில மாதங்கள் மட்டும் இயங்கி இன்று மூன்று ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளாக அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்காமல் மக்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லாமல் இருக்கிற நிலைமை இன்று கிராமங்களில் இருக்கிறது. ஆகையால் ஊராட்சி ஒன்றியங்கள் அளவில் எத்தனை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்கவில்லை என்ற புள்ளிவிவரங்களைச் சேகரித்து இதனைச் சரிசெய்ய வேண்டுமென்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இயங்கச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமங்களில் அரிசனங்கள் குடியிருப்புப் பகுதிகள் எந்த விதமான வசதிகளும் செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில கிராமங்களில் அவர்கள் குடியிருப்புகளுக்குச் செல்ல சாலை வசதி, தெரு விளக்கு வசதிகள் இல்லை. எந்த வித வசதிகளும் இல்லை. சில இடங்களில் அவர்கள் ஈமச் சடங்குகள் செய்வதற்குக்கூட இடம் இல்லாத நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க நிச்சயமாக, உடனடியாக அரசு முன்வரவேண்டும்.

அரிசனங்கள் குடியிருக்கும் பகுதியில் கிராம வானொலிக் கட்டடம் கட்டித்தராமல், பல பஞ்சாயத்துக்கள் அவர்களைப் புறக்கணிக்கிறார்கள். ஒரு கிராம வானொலிக் கட்டடம் கட்ட ரூ. 2,500 தான் செலவாகும். நிதி இருக்கிற பஞ்சாயத்துக்கள் உடனடியாக அரிசன குடியிருப்புப் பகுதிகளுக்கு வானொலிக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், நிதி இல்லாத பஞ்சாயத்துக்களில் அரிசனங்கள் நல நிதியிலிருந்து கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் அரசு அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம மக்களுக்கு வைத்திய வசதி மிக மிகக் குறைவு. இதை மனதில் கொண்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று இருப்பதை இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று ஏற்படுத்தி கிராம மக்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல உயர்நிலைப் பள்ளிகளில் பெண்களுக்குக் கூட சிறுநீர் கழிப்பிடம் இல்லாத அவல நிலையை உடன் போக்க வேண்டும்,

அரசு ஊழியர்கள் பதவிக் காலத்தில் இறந்தால் ரூபாய் பத்தாயிரம் அவர்கள் குடும்பத்திற்கு உதவிப் பணம் கொடுக்கப் படுகிறது. ஆனால் அதேபோல் கூட்டுறவு இயக்கங்களில் பணி புரிகின்ற ஊழியர்களுக்கும் இந்தப் பத்தாயிரம் ரூபாயைக் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் நகைக் கடன்கள் இன்னும் வழங்கப்படவில்லை, கிராம மக்கள் அதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே எல்லா கிராம கூட்டுறவுச் சங்கங்களிலேயும் நகைக் கடன்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்றைய விவசாயிகள் பிரச்சினையை யாரோ தூண்டி விடுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு இருந்து விடாமல் விவசாயிகள் இன்று இருக்கின்ற நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அரசு முன்வர வேண்டும். ஏனென்றால் சுமக்க முடியாத கடன் தொல்லை, உற்பத்தி செய்த பொருள்களுக்குத் தகுந்த விலை கிடைக்காத நிலை, இவ்வாறு பல காரணங்களால் விவசாயிகள் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நிரந்தர நிவாரணம் செய்யவில்லை என்றால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட கிராமப் புறங்களுக்குப் போக முடியாத ஒரு நிலைமை ஏற்படும் என்பதை நான் அரசுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம், வெள்ளப் பெருக்குக் காலங்களில் வருகின்ற காவேரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பயன்படும்படி அரசு ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்தி எங்கள் மாவட்டத்தை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காச நோயால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகம் இருக்கிறார்கள். ஆகவே எங்கள் மாவட்டத்தில் தனியாக காச நோய் மருத்துவ மனையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம மக்கள் வசதியைப் பெருக்குவதற்காக, ஆரம்பிக்கப் படவிருக்கும் மினி பஸ் விடும் திட்டத்தை விரைவில் எங்கள் மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 19] [திரு. த. புஷ்பராஜு]

புதுக்கோட்டை நகரத்தில் சிறந்த உயர்நிலைப்பள்ளியாக தனது பணியினைச் செய்கின்ற டி. இ. எல். சி. உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது ஆலங்குடித் தொகுதியில் இந்தியா அளவில் பெரிய பழப் பண்ணை வல்லத்தராக் கோட்டை பழப்பண்ணையை ஆரம்பித்த தமிழக அரசுக்கும் இந்தப் பழப் பண்ணை ஆரம்பிக்கப்பட உறுதுணையாக இருந்து செயல்பட்ட செய்தி அறநிலையத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பழப் பண்ணையில் வேலை கொடுப்பதில் இலங்கையிலிருந்து அகதி களாக தாயகம் திரும்பிய ஏழை மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் உள்ள குளமங்கலம் வில்லுனி ஆறு அணைக்கட்டுத் திட்டத்தையும் நகரம் அணைக்கட்டுத் திட்டத்தையும் விரைவில் செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலங்குடி, கரம்பக்குடி ஆகிய நகரங்களிலும் பயணிகள் தங்கும் விடுதிகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலங்குடி, கரம்பக்குடி, கீரமங்கலம் அரசு மருத்துவ மனைகளில் போதிய கட்டட வசதி இல்லை, இம்மூன்று மருத்துவ மனைகளிலும் கட்டட வசதி செய்து கொடுத்து படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும் அவைகளை விஸ்தரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

புதுக் கோட்டையிலிருந்து சென்னைக்கும், புதுக்கோட்டை யிலிருந்து கோயம்புத்தூருக்கும் விரைவு பேருந்துகள் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளின் தேவைகளின் அடிப்படையில் அடுத்த ஆண்டு இருபது சிறு நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட இருப்பதை நான் வரவேற்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கி, பொன்னமராவதி, கரம்பக்குடி ஆகிய சிறு நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. என். பெருமாள்: மாண்புமிகு பேரவை தாற்காலிகத் தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்பித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்

இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரை தமிழக மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதோடு, புரட்சித் தலைவரின் புனித அரசு ஏழை எளிய மக்களிடமும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களிடமும் கொண்டுள்ள அக்கறையை மிகத் தெளிவாகக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேளாண்மை உற்பத்தி, நிலமேம்பாடு, கறவையின வளர்ச்சி, ஆடு, கோழி, பட்டுப் பூச்சி வளர்த்தல் போன்றவற்றைச் செயல் படுத்துவதன் மூலம் கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதாகவும் அமையும். குழந்தைகள் ஆண்டான இவ்வாண்டில் குழந்தைகள் அரும் பொருட்காட்சியகம் ஆறு லட்சம் ரூபாயில நிறுவ உள்ளது பாராட்டத் தக்கதாகும்.

இந்தியாவிலேயே மதிய உணவுத் திட்டத்தை முதன்முதலில் அமல்படுத்தி வெற்றிகண்ட நம் தமிழ்நாடு, இத்திட்டத்தை மேலும் செவ்வனே செயல்படுத்துவதற்கு ஏற்ற முறையில் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மையச் சமையற் கூடங்களை கேர் நிறுவன உதவியுடன் செயல்படுத்த இருப்பதைப் பாராட்டி, இதை மேலும் திருச்சி மாவட்டத்திற்கு விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி ஆகியவற்றில் தமிழ் நாடு தன்னிறைவு பெற்றுள்ள போதிலும் மேலும் இத்திட்டங் களை நன்கு செயல்படுத்த நிதிநிலை அறிக்கையில் வழி வகைகள் செய்து நிதி ஒதுக்கீடு செய்து இருப்பது பாராட்டத் தக்க ஒன்றாகும்.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப்பற்றிக் குறிப் பிடுவது பொருத்தம் என்று எண்ணுகிறேன். 1935 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக ஜிப்சம் வெட்டியெடுக்கும் தொழில் வரகூர் தொகுதியில் நடந்தது, 14—11—76 முதல்

(பிற்பகல் 12.40)

நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் அந்தப் பகுதி ஏழை மக்கள் சுமார் 5,000-க்கும் மேல் வேலையின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது. இந்நிலையைப் போக்க அரசு ஜிப்சம் வெட்டி எடுக்கும் பணியைத் தன் பொறுப்பில் மேற்கொண்டு வேலை யிழந்து தவிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் பயன்பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு ஜிப்சம் வெட்டி எடுப்பதன் மூலம் அரசுக்குச் சொந்தமான அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் சுலபமாகக் கிடைக்கும். இப்பகுதி மக்க ளிடையே உள்ள வேலையில்லாப் பிரச்சனை தீர்க்கப் பட்டது போலவும் இருக்கும்.

1979 மார்ச் 19] [திரு. என். பெருமாள்]

கடந்த அக்டோபர் 2-ஆம் தேதி முதல் நாடு முழுக்க முதியோர் கல்வித் திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்துவதாக அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், கிராமங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக வேப்பூர். ஆலத்தூர், பெரம்பலூர், துறையூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் இந்தத் திட்டத்தின் மூலமாக இரவில் பள்ளிகள் நடந்து கொண்டு வருவதை நானே நன்கு அறிவேன். ஆனால் அவர்களை நான் கேட்ட நேரத்தில், அரசு நிதி உதவி தருவதாக அறிவித்தும் இதுநாள் வரை நிதி உதவி தரவில்லை என்று சொல்கிறார்கள். மக்கள் மத்தியில் கிராமப்புறங்களில் இந்த முதியோர் கல்வித் திட்டத்திற்குப் நல்ல வரவேற்பு இருந்தும் அரசு இதில் அக்கறை காட்டாமல் இருப்பது பாமர மக்களிடத்தில் ஏமாற்றமாக இருக்கிறது. முதியோர் கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரை மத்திய-மாநில அரசுகளின் கொள்கை என்ன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

பெரம்பலூர் தொகுதியில் உள்ள ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையில் இருந்து வெளிவரும் கரும்புச் சக்கையை வெறும் எரிபொருளாக மட்டும் தற்பொழுது பயன்படுத்தி வருகின்றனர். அரசுத் திட்டத்தின்படி கரும்புச் சக்கையை வெறும் எரிபொருளாக மட்டும் பயன்படுத்தாமல் அரிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி, செய்தித்தாள் காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை எனது தொகுதியில் உள்ள அரியலூர்-பெரம்பலூர் சாலையில் ஒதியத்திற்கு அருகாமையில் 900 ஏக்கருக்கு மேல் உள்ள வன இலாக்காவிற்குச் சொந்தமான இடத்தில் நிறுவ வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். எனது தொகுதியில் இதுவரை எவ்விதமான தொழிற்சாலையும் இல்லை. மூலப்பொருளாகிய ஜிப்சம் வெட்டி எடுக்கும் தொழிற்சாலை, செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அரசு நிறுவினால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள எனது தொகுதி மக்கள் பயன் அடைவர். மேலும் அருகாமை தொகுதிகளில் உள்ள எறையூர்-ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைகளில் எனது தொகுதியில் இருந்து படித்த இளைஞர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளாதது குறித்துப் பொதுமக்களிடத்தில் அதிருப்தி நிலவுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

*திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய ஐயா, இந்த பட்ஜெட் மீது பலபேர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த பட்ஜெட்டைப்பற்றி இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால் பழைய கள் புது மொந்தை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த மொந்தை கூட மொந்தை மாதிரி தெரியக்கூடாது என்பதற்காக வேண்டி

பல வர்ணங்களைக் கொண்டு அதைத் தீட்டி அவ்வளவு அழகாக இன்றைக்கு அந்த பட்ஜெட் இங்கே கொண்டு வந்து வைக்கப் பட்டுள்ளது.

மக்கள் ஏமாற்றம் அடையக்கூடிய ஒரு பட்ஜெட், ஜகஜாலப் புரட்டு செய்யக்கூடிய ஒரு பட்ஜெட் என்றுதான் சொல்ல வேண்டும். சாமர்த்தியமாக அது வைக்கப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆகவே, எப்படியிருந்தாலும் இன்றைக்கு மக்களுடைய வேதனையைப் போக்கக் கூடிய அளவிற்கு, ஏழை எளிய மக்களுக்கு, அவர்கள் படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காதவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக் கூடிய தன்மையிலே இது அமைந்திருக்கிறதா என்று பார்க்கக் கூடிய நேரத்திலே, வேண்டுமென்றால் சொல்லலாம். இதனால்தான் 18 வயதிற்கு மேற்பட்ட, கிராமத்திலே உள்ள எல்லா மக்களும் உடனடியாக எம்ப்ளாய்மெண்டில் பதிவு செய்தால் அவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கப்போகிறோம், சுமார் மூன்று ரூபாய், அரிசி, பருப்பு, கோதுமை இதெல்லாம் கொடுக்கப்போகிறோம், எவ்வளவு, என்ன என்று சொல்ல முடியாது என்ற அளவிற்கு இப்படிக் கிராமத்திலே உள்ள மக்களுக்கு ஒரு ஆசை வார்த்தை கூறப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கக்கூடிய தன்மையிலே என்றால், நகரத்திலே உள்ளவர் களுக்கு ஒன்றுமே கிடையாது, நகரத்திலே உள்ள படித்தவர் களுக்கு ஒன்றுமே கிடையாது, இப்படி நகரத்தைப் புறக்கணிக்கக் கூடிய தன்மையிலே, நகரத்திற்கும் கிராமங்களுக்கும் சண்டை மூட்டக்கூடிய தன்மையிலேதான் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்த இலட்சணத்திலே வரியே போடாமல் இருப்பதைப் போலவும், வரியைப் போட்டது போலவும், துண்டு விழாத பட்ஜெட்டைப் போலவும், ஓரளவிற்குத் துண்டு விழுவதைப்போலவும் காட்டக் கூடிய தன்மையிலே தேங்காய்மீது வரி, அதே போன்று தீப்பெட்டியின் மீது வரி, விற்பனைமீது சர்சார்ஜ் போன்ற வரி, மத்திய சர்க்கார் ஒரு பக்கம் சாதாரண ஏழை எளிய மக்கள் உபயோகிக்கக் கூடிய சோப்பு போன்ற பொருள்கள் மீது வரி போட்டுள்ளது. அதே போன்று மாநில அரசும் இங்கே வரிகளைப் போட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட நிலைமை யிலே, வரிகளையெல்லாம் போடக் கூடிய நேரத்திலே, அதை எதிர்த்துப் பேசினால், அமைச்சரவர்கள் சொல்லலாம், வரியே போடாமல் யார் வந்தாலும் ஆட்சி செலுத்த முடியாது என்று. வரி போடக் கூடாது என்று நான் சொல்லவில்லை. வரியைப் போடுங்கள், தாராளமாக. ஆனால், யார் மேல் போட வேண்டும், யார்மேல் போடக் கூடாது என்று பார்க்க வேண்டும். சிட்டுக்குருவி தலைமேல் பாராங்கல்லையும், யானை தலைமேல் சுண்டைக்காயையும் வைக்கக் கூடாது. சிட்டுக்குருவி தலை

1979 மார்ச் 19] [திரு. வி. கே. கோதண்டராமன்]

மேல் பாராங்கல்லை வைத்தால் அது சட்னியாகிவிடும். ஆகவே யானை தலைமீது பாராங்கல்லையும், சிட்டுக்குருவி தலைமீது சுண்டைக்காயையும் வையுங்கள் என்று சொல்கிறோம். ஆகவே, ஏழை, எளிய மக்களைப் பாதிக்கக் கூடிய வரிகளை போடக் கூடாது என்றுதான் சொல்கிறோமே தவிர வரிகளே போடக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் இன்றைக்கு இந்த பட்ஜெட் இருக்கிறது.

இந்த பட்ஜெட்டிலே, பல ஏழை, எளிய மக்களுக்கு, வயதான காலத்திலே அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய உதவிப் பணம், ரூ.20-லிருந்து ரூ.25ஆக ஆக்கப்பட்டிருக்கிறது, பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். ஆனால், இன்றைக்கிருக்கிற சூழ்நிலையிலே அது எந்த அளவு போதும்? அதே போல் புடவை, வேஷ்டி எல்லாமே அங்கே கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது, ஆனால், அவர்கள் மத்தியிலே என்ன நிலைமை? வயதான காலத்திலே ஓரளவாவது உயிரோடு இருப்பதற்குக் கொடுப்பாரக ளானால் பரவாயில்லை, இந்தப் புடவை, வேஷ்டி சாகிற காலத்திலே, அதைப் போர்த்தி அனுப்புவதற்கா என்று அவர்கள் கேட்கிறார்கள், எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அந்த அளவுக்கு இதிலே ஒரு நல்லெண்ணம் இல்லாத அளவு பேசப்படுகிற சூழ்நிலை இருக்கிறது அதைப்போல் ஊனமுற்றவர்களுக்கு இன்றைக்கு ஆதரவு கொடுக்கப்போகிறோம், ஊன்றுகோல், சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அரசியல் கண்ணோட்ட அடிப் படையில் இது பார்க்கப்படுகிறது. இதற்கு உதாரணம் சொல்ல முடியுமா என்று உடனே மந்திரி கேட்கலாம். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், வடஆற்காடு மாவட்டத்திலே இருக்கக்கூடியவர், நடக்க முடியாது—இரண்டு கால்களும் இல்லாதவர் அவர்—கிட்டப்பா என்ற பெயர் உடையவர். பல வருஷக் காலமாக எழுதிக் கேட்டும் கூட, அவருக்கு மறுக்கப்படுகிறது என்று சொன்னால், அரசியல் கண்ணோட்டம் என்றுதானே சொல்ல வேண்டும். ஆகவே, இன்றைக்கு அரசியல் கண்ணோட்டத்தி னுடைய அடிப்படையிலே பார்த்துக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அதுபோன்ற நிலைமை இருக்கக்கூடாது.

பெரிய தொழிற்சாலைகளைப் பற்றி ஒன்றுமே இல்லை. ஏதோ சிறிய தொழில்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்டிறைச்சியை, மாட்டிறைச்சியை இனிமேல் வியாபாரம் பண்ணப் போகிறோம், ஏற்றுமதி பண்ணப் போகிறோம், அதே போல் கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப் போகிறோம், அல்லது பட்டுப் பூச்சி வளர்க்கப் போகிறோம். செடியை வளர்க்கப் போகிறோம், பட்டு தயார் செய்யப் போகிறோம், அதனாலே 20,000 பேருக்கு வேலை கிடைக்கும், 50,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது.

ஆனால், இன்றைக்கு எத்தனை தொழிற்சாலைகள் நடைபெற்று வந்தவை, மூடப்பட்டுள்ளன; அதனால் எத்தனை பேர்கள் வேலையில்லாமல் திண்டாடி நடுத்தெருவில் நிற்கிறார்கள் என்று அதையும் சொல்ல வேண்டும். நாங்கள் அதைச் செய்யப்போகிறோம், இதைச் செய்யப் போகிறோம், இவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னால் மட்டும் போதாது. எவ்வளவு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். உதாரணத்திற்கு, குரோம் லெதர் கம்பெனி ஒன்பது மாதகாலமாக மூடப்பட்டிருக்கிறது. அத்தொழிற்சாலை 1908-வது வருஷத்திலே ஆரம்பிக்கப்பட்டது, இன்றைக்கு 700 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் திண்டாடக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று சொன்னால், அப்படிப்பட்ட தொழிற்சாலையை உடனடியாக அரசே எடுத்து நடத்த வேண்டும். இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இன்றைக்கு எத்தனையோ தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பேர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இல்லையென்று சொன்னால், வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னால், ஒரு பக்கம் நீங்கள் கொடுக்கிறீர்கள் என்றால் இன்னொரு பக்கம் அது பிய்த்துப் பிடுங்கிக் கொண்டு போகிறது, வேலையில்லாத நிலை அந்த அளவுக்கு இருக்கிறது.

அதேபோல், வடாற்காடு மாவட்டத்திலே டானரி தொழிற்சாலைகளில், திடீர் திடீரென்று நினைத்தால் வேலை, நினைத்தால் வேலையில்லை என்ற அளவுக்கு இருக்கிறது. இது போன்ற நிலைமையைப் போக்க வேண்டும். தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது ரொம்ப அழகாகச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12.50)

ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது, அதில் இதைக் கொடுக்கிறோம், அதைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள், திடீர் திடீர் என்று மூடுகிறார்கள், மீண்டும் அவர்கள் புது தொழிலாளிகளாகவே வருகிறார்கள். அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை, எந்த சலுகையும் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிற நேரத்தில் அதற்கு எந்தவித பதிலும் கிடையாது, ஆகவே, இப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில் பெரிய தொழிற்சாலைகளை அரசாங்கம் ஆரம்பித்தாக வேண்டும்.

சென்ற ஆண்டிலே இதே அவையில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தன தைலம் உற்பத்தி செய்கிற தொழிற்சாலை ஒன்று $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன் என்று சொன்னார். ஆனால், அந்தத் தொழிற்சாலை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை, காரணம் என்ன? நான் கேள்விப்பட்டது என்னவென்றால் திருட்டுத்

1979 மார்ச் 19] [திரு. வி. கே. கோதண்டராமன்]

தனமாக சந்தனக் கட்டையை எடுத்துக் கொண்டு போய் விற்று கொள்ளையடிப்பவர்கள் மத்திய அரசு, மாநில அரசு அமைச்சர் களைப் பார்த்ததாகவும் கேள்விப்படுகிறேன். மத்திய அரசிடமும் கேட்டிருக்கிறார்கள். இங்கும் கேட்டிருக்கிறார்கள். இந்த காரணத்தின் அடிப்படையில்தான் அது இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை என்று கேள்விப்பட்டேன். சென்ற ஆண்டு கொடுத்த வாக்கை இன்னும் நிறைவேற்ற முடியாமல் இருப்பதைப் பார்க்கும் போது நான் கேள்விப்பட்டது எனக்கு ஊர்ஜிதம் ஆகிறது. ஆகவே இந்த சந்தனத் தொழிற்சாலையையும் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் உறுதி கொடுத்தபடி அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இன்றைக்குப் போராட்டம் நடத்துகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். எல்லா மாவட்டத்திலும் காலையில் அவர்களை கைது செய்து மாலையில் விட்டு விடுகிறார்கள். மதுரை மாவட்டத்தில் மட்டும் இன்னும் ஆயிரம் பேர்களுக்கு மேல் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தியாகிகளுக்குக்கொடுத்துவந்த உதவித் தொகையை 75-லிருந்து 100 ரூபாயாக உயர்த்தி விட்டோம் என்று பெருமையாகச் சொல்கிறார்கள். அந்த '00 ரூபாயை எத்தனை பேர் வாங்குகிறார்கள் இன்றைக்கு என்றுதான் கேட்கிறேன். நான் இதைப்பற்றி முதலமைச்சருக்கு 2-1-79 அன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அந்த லெட்டரில் எல்லா தியாகிகளுக்கும் இந்த உதவி கிடைக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். 100 ரூபாய் வருவாய் இருந்தால் தியாகிகள் பென்ஷன் கிடையாது என்பதை நீக்க வேண்டும். எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். இரண்டாவது, அவர்கள் குடும்பத்தின் எண்ணிக்கையை பொறுத்து, விலைவாசியைப் பொறுத்து அவர்களுக்கு பென்ஷன் உயர்த்தி கொடுக்க வேண்டும். மூன்று, தியாகிகளுடைய பிள்ளைகளுக்கு படிப்பு வசதிகள், மற்ற சலுகைகள் இவற்றில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். நான்கு, தியாகிகளின் படித்த பிள்ளைகளுக்கு உத்தியோகம் கொடுப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றெல்லாம் கேட்டிருந்தேன். அவர்களின் குடும்பத்திற்கு மருத்துவ வசதியையும் அளிக்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தேன்.

திரு. கக்கன் அவர்களுக்குக் கொடுத்துள்ளார்கள், 500 ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்கள் இலவசமாக பஸ்ஸில் பிரயாணம் செய்யலாம் என்று போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் கொடுக்க வேண்டியதுதான். நான் என்ன சொல்கிறேன் என்றால், இதை விட தியாகம் செய்தவர்கள், 100 ரூபாய் வருமானம் இருந்தால் என்று வைத்து விட்டதால்,

இந்த உதவியைப் பெற முடியாமல் இருக்கிறார்கள் என்கிறேன். ஒரு குடும்பத்தில், 4, 5 பேர் இருக்கும்போது 100 ரூபாய் வருமானம் வருகிறது என்று பேசாமல் இருந்தால் எல்லோரும் பிழைக்க முடியுமா? அதற்காக ஏதோ தொழிலோ, வியாபாரமோ செய்கிறார்கள். அப்படியும் அவர்கள் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உதவி கிடைக்காதே. எனக்குத் தெரிந்த ஒருவர்—ஒரு உதாரணத்திற்கு சொல்கிறேன்—திருவண்ணாமலையில் இராமானுஜலு செட்டியார் என்ற ஒருவர், அவர் என்னோடு சிறைசென்றவர். திருவண்ணாமலை கோவில் வாசல் படியில் கற்பூரம், குங்குமம், ஊதுபத்தி விற்கும் கடையை வைத்திருக்கிறார்கள். அங்கே அவரும் அவர் மகனும் சேர்ந்து கஷ்டப்படுகிறார்கள். அந்த தியாகிக்கும் வருட வருமானம் 1,434 ரூபாய் என்று சொல்லி கிடைத்துக் கொண்டிருந்த தியாகிகள் பென்ஷனையும் கிடைக்காமல் நிறுத்தி விட்டார்கள். இது போன்று பல பேர்கள். ஆகவே தான் மாத வருமானம் 100 ரூபாய்க்கு இருந்தால் என்ற அந்த வரம்பை நீக்கிவிட வேண்டும். மத்திய அரசு 5,000 ரூபாய் என்று தீர்மானித்தது அதை இப்பொழுது 10,000 ஆக ஆக்குவதற்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அட பத்தாயிரம் கொடுக்காவிட்டாலும் அந்த 5 ஆயிரமாவது/வருட வருமானம் என்று வைத்து கொடுக்கச் செய்யுங்கள் என்று தான் கேட்கிறேன். சிறு தொழில் வளர்ப்பதாகச் சொல்லப்படுகிறது, குடிசைத் தொழில் வளர்ப்பதாகச் சொல்லப்படுகிறது. ரூ.25,000-க்குள் இருந்தால் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு விதிவிலக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. 25,000 ரூ. என்று சொன்னால் அது இரண்டு நாள் உற்பத்திதான். அந்த 25,000 ரூ. தான் அவன் லைசென்சு வாங்க வேண்டும், குளோரைடு வாங்கவேண்டும், மற்றும் வாட்கை இவ்வளவும் செய்யவேண்டும். ஆகவே, அது கட்டுபடியாகாது. ஆகவே இன்று இருக்கும் சூழ்நிலையில் அந்த வரி, குடிசைத்தொழில்மீது போடப்பட்டுள்ள வரி நீக்கப்படவேண்டும். மத்திய சர்க்கார் விம்கோ தொழிற்சாலைமீது வரி போட்டதன் விளைவாக இன்று அந்தத் தொழிற்சாலையில் வேலையை நிறுத்தி இருக்கிறார்கள். உற்பத்தி குறைக்கப்பட்டு, இன்று ஆயிரக்கணக்கான பேர் வேலை இல்லை என்று அனுப்பப்படும் நிலைக்கு வந்து இருக்கிறது. ஆகவே, ஒன்று சர்க்காரே அந்தத் தொழிற்சாலையை மேற்கொள்ளவேண்டும், அல்லது அந்த வரியை நீக்கவேண்டும், அல்லது அதற்கு வேறு பரிகாரம் என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும். அந்த அளவிற்கு ஒன்றுமே சிந்திக்காதது கண்டு மிகவும் வேதனைப்படுகிறேன். (மணியடிக்கப்பட்டது) சார், 12-45 க்குத்தான் ஆரம்பித்தேன். அதற்குள் அடித்தால் எப்படி?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): 12.42-க்கு ஆரம்பித்தீர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

1979 மார்ச் 19]

திரு. இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நேரம் அதிகம் அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள். வட ஆற்காடு மாவட்டம் என்பதால் இவ்வளவு தாராளமாக இருக்கிறீர்களா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எஸ். ஜே. இராமசாமி) : எல்லோருக்குப் ஒன்றாகத்தான் நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. யாருக்கும் இதிலே வித்தியாசம் கிடையாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : வடாற்காடு மாவட்டம் என்பதால் அவர்கள் கொடுக்கவில்லை. ஏற்கனவே சபாநாயகர் நேரம் ஒதுக்கித் தந்து இருக்கிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): சபாநாயகர் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இன்றையதினம் அரிசன மக்களைப் பற்றியோ, மலைவாசிகளைப் பற்றியோ எதுவுமே சொல்லாமல் என்னமோ ஏதோ என்று இருக்கிறார்கள். கொத்தடிமை பற்றி 15 நாளைக்கு முன்னால் பார்த்தேன். இந்தியா பூராவிலும் 15 லட்சம் பேர் இருப்பதாகவும், தமிழ் நாட்டில் மாத்திரம் $2\frac{1}{2}$ லட்சம் கொத்தடிமைகள் இருப்ப தாகவும் பத்திரிக்கையில் சர்க்கார் அறிவிப்பின் பேரில் போட்டு இருக்கிறார்கள். இந்த கொத்தடிமையைப் போக்கும் நிலைமை யில் நடவடிக்கை எடுக்கப்போகிறீர்களா, அல்லது கொத்தடிமையை மேலும் மேலும் வளர்க்கும் அளவில் நடவடிக்கை எடுக்கப்போகிறீர்களா? ஆனால் நடைமுறையில் பார்த்தால் கொத்தடிமை முறை மேலும் வளரும் தன்மையில் இருக்கிறது. இன்று அத்தகைய மோசமான போக்கில் போய்க் கொண்டு இருக்கிறது. சுகாதாரத் தொழிலாளி, தாழ்த்தப் பட்டவன், தாழ்த்தப்பட்டவனைவிட மோசமான நிலையில் இருப் பவர்கள். அவர்களுக்கு வேண்டிய வசதி செய்துதரும் தன்மையில் ஏற்கனவே போட்டு இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் சர்க்கார் உத்தரவுகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்து வருகிறது. அது உடனடியாக கவனிக்கப்படவேண்டும். அவர் களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டும். அந்த அளவிற்கு கவனிக்கையில், அந்த அரிசன மக்கள் ஏற்கனவே மத்திய சர்க்காரில் இருந்து அவர்கள் வீட்டுக் குழந்தைகள் படிக்கிறது என்று சொன்னால் ஸ்காலர்ஷிப் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். 1975–ம் ஆண்டுக்குப்பிறகு 2 பிள்ளைகளுக்குத்தான் கொடுக்கப் பட்டு வருகிறது. அதேபோல் பேக்வார்ட் என்றால் யாருக்கும் கிடையாது. இதையெல்லாம் மத்திய சர்க்காரை எதிர்த்து டிரை பண்ணி வாங்கவேண்டும். அதற்காக நாங்கள் கேட்டோம், கடிதம் எழுதினோம், பதில் இல்லை என்று சொன்னால் பிரயோசனம் இல்லை. இதனால் எந்த அளவிற்கு அவர்கள்

கல்வி பாதிக்கப்படுகிறது என்பதை பார்க்கவேண்டும். இன்றைக்கு பக்கத்தில் இருக்கும் மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவில் ரூ. 6,000 வரை ஸ்காலர்ஷிப் உண்டு என்று வைத்து இருக்கிறார்கள். அந்த வரம்பு இங்கேயும் கொண்டு வரவேண்டும். ரூ. 500 சம்பளம் வாங்குபவர்கள் பிள்ளைகளை கல்லூரியில் படிக்க வைக்க முடியுமா? இதனால் ஏழை எளிய மக்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்ப முடிய வில்லை. ஆகவே, கண்டிப்பாக அந்த வரம்பை உயர்த்த வேண்டும். ஆஸ்டலில் தங்கி படிக்கிறவர்கள் என்று சொன்னால் அவர்களுக்கும்.... (மணியடிக்கப்பட்டது) 15 நிமிடம் தான் ஆகியிருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): 18 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் 1 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்; இந்த நிலைமையில் ஆஸ்டலில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு எல்லாச் சலுகை களையும் தரவேண்டும். மெஸ் பீஸ், ஆஸ்டல் செலவு எல்லாம் அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி); தாங்கள் அருள்கூர்ந்து இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்; நான் 12.45—க்கு ஆரம் பித்தேன். இடையிலே 5 நிமிடம் வேஸ்டாகி விட்டது. அதனால் இன்னும் 5 நிமிடம் கூடுதலாகக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): நீங்கள் பேசிய நேரத்தை நான் குறித்து வைத்திருக்கிறேன். 12-42-க்கு ஆரம்பித்தீர்கள். 1.02—க்குள் நீங்கள் முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. வி, கே. கோதண்டராமன்; கொஞ்சம் நேரம் கொடுங்கள், முக்கியமான விஷயங்கள் எல்லாம் பேசவேண்டி யிருக்கிறது. முக்கியமாக நீர்ப்பாசன வசதி செய்யப்பட வேண்டும். வடாற்காடு மாவட்டம் இந்த மாநிலத்திலே உற்பத்தி செய்யப்படக்கூடிய உணவுப் பொருட்களில் 25 சதவிகிதம் உற்பத்திச் செய்கிறது. அப்பேர்ப்பட்ட மாவட்டத்திற்கு இன்றைக்கு நீர்ப்பாசன வசதி ஏதாவது செய்யக்கூடிய அளவுக்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா என்று பார்க்கிறபோது

ஏற்கெனவே இருந்த அரசுகள் எப்படி தயாராக இல்லையோ அதைப்போல இந்த அரசும் தயாராக இல்லை என்றுதான் தெரிகிறது. ஏற்கெனவே இருந்த அரசின் முதலமைச்சர் கருணாநிதி 1975 ஆம் ஆண்டு அங்கே மோர்தானா டாம் கட்டுவதற்கு 'இன்னாகுரேஷன்' செய்தார். அதன பிறகு அந்த கல்லையே தூக்கிப் போட்டுவிட்டார்கள். ஆகவே, லாப நஷ்ட கணக்குப் பார்க்காமல், கிடைக்கக்கூடிய தண்ணீரை விவசாயத் திற்குப் பயன்படுத்தக்கூடிய தேவை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, வடாற்காடு மாவட்டத்தில் சிறு சிறு அணைகள் பலவற்றைக் கட்ட வேண்டும். மோர்தானா டாம், பத்தரப் பள்ளி டாம், புல்லூர் டாம் போன்ற சிறு சிறு டாம்களை கட்ட வேண்டும், அதைப்போல பாலாறு பேசின் திட்டத்தை யும் நிறைவேற்ற வேண்டும். (மணியடிக்கப்பட்டது). மலைப் பிரதேசங்களில் மண் அரிப்பு ஏற்பட்டு சேதம் விளைவிக்கப் படுவதால் அதைத் தடுக்க செக்டாம் கட்டி முடிக்க வேண்டும்......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): அடுத்து, திரு. ரா. கு. பெருமாள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இன்னும் மூன்று நிமிடம் கொடுங்கள். எனக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இன்னும் முடிய வில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்கு மேலேயே நீங்கள் பேசிவிட்டீர்கள், நீங்கள் இப்படிப் பிடிவாதமாக இருந்தால் மற்றவர்கள் என்ன செய்வார்கள்? நான் எப்படி சபையை நடத்த முடியும்? அருள்கூர்ந்து உட்காருங்கள். அடுத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. கு. பெருமாள்.

* திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நாவுக்கரசர் நாஞ்சலார் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித் திருக்கிறார்கள். அதைப்பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதற்கண் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 88, 73 இலட்சம் டன் உணவு தானியங்களும், 36.45 இலட்சம் டன் பணப் பயிர்களும் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை வேளாண்மைத் துறை வகுத்துச் செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டு கிறேன்.

அதே நேரத்தில் இந்தியாவிலேயே பால்பெருக்குத் திட்டத்தில் முதலாவதாக இருப்ப நம்முடைய மாநிலம். அதுமட்டுமல்லாமல் வரும் ஐந்து ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, 9.5 இலட்சம் கால்நடைகள் கொண்டுவரப்பட்டு, 8 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, 2.76 கோடி ரூபாய் செலவிட்டு, 160 விசைப் படகுகள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிலமற்ற விவசாயிகள், சிறு உழவர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் சிறப்பாகப் பலன்பெற்று அவர்தம் வாழ்க்கை நிலை உயரும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் முழுமனதோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் உள்ள படித்து வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற சுமார் இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாக பட்டுப்பூச்சி வளர்த்தல், சிறு தீப்பெட்டித் தொழில் போன்ற சிறு தொழில்கள் மூலம் சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்புத் தந்துள்ளதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் அரசுக்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இந்த சிறு தொழில் மூலம் நம்முடைய தமிழ்நாட்டில் பெரும்பாலும் செய்யப்படுகின்ற தீப்பெட்டிகளில் விம்கோ தொழிற்சாலையில் 60 சதவீதமும், பி-கிளாசில் 25 சதவீதமும் மீதியை சி-கிளாஸ் என்று சொல்லப்படுகிற கூட்டுறவுச் சங்கங்கள், சர்வோதய நிறுவனங்கள் மூலமும் தயார் செய்கிறார்கள். இப்படித் தயாரிக்கின்ற தீப்பெட்டிகளில், கையினால் செய்யப்படுகின்றவைகளுக்கு மத்திய சர்க்கார் வரிபோடாமலும், இயந்திரங்களில் தயாரிக்கின்றவைகளுக்கு அதிக வரி விதித்தும் அறிவித்திருக்கிறார்கள். இது கைத்தொழிலை ஊக்குவிக்க மேற்கொண்ட ஒரு நடவடிக்கை. ஆகையால் இந்த முடிவை எடுத்த மத்திய அரசை நான் பாராட்டுகிறேன். மத்திய அரசைப் பாராட்டுகிறேன் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் திரு. ஜேம்ஸ் அவர்கள் மாநில அரசு செய்கின்ற நல்ல காரியங்களைப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

கிராமங்களில் இலட்சக்கணக்கானபேர் வேலையற்றுத் தவிக்கிறார்கள் என்று திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். கைத்தொழில் மூலமாக தீப்பெட்டி செய்வதை ஊக்குவிக்கின்ற வகையில் வரிவிலக்கு அளித்தால் நிறையபேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இப்போது 60 சதவீதம்

1979 மார்ச் 19] [திரு. ரா. கு. பெருமாள்]

இயந்திரங்களின் மூலமாகத் தயார் செய்கின்ற தீப்பெட்டி வெளி நாடுகளுக்கு மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. விம்கோ தீப்பெட்டி தொழிற்சாலை 1700 பேர்களை நிறுத்திவிடப் போவதாக அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அந்த 1,700 பேர் களும் சேர்ந்து கூட்டுறவு முறையில் தொழில் நடத்த உரிமை கொடுத்தால் நல்லது. இப்படி எல்லாம் செய்தால் பல இலட்சம் பேர் கிராமத்திலுள்ளவர்கள் பயன் பெறுவார்கள். இப்போது கிராமப்புறங்களில் வருமானம் இல்லாததன் காரணத்தாலேதான் அவர்கள் நகரப் புறங்களுக்கு வருகிறார்கள். அதனைத் தடுக் கின்ற வகையிலே கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்பு அதிகமாக ஏற்படுவதற்கு வழி செய்யலாம். அப்போது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல் கிராம ராஜ்யம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்........(மணி யடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): அடுத்து திரு. பொ. விஜயராகவன் அவர்களைப் பேச அழைக் கிறேன்.

திரு ரா. கு. பெருமாள் : நான் குறிப்பிடுவது தொழிலாளர் பிரச்சினை. ஆகவே எனக்கு அதிக நேரம் கொடுத்தாலும் பரவா யில்லை. இந்தத் தீப்பெட்டித் தொழிலின் மூலமாக படித்த வாலிபர்களுக்கும் படிக்காத பாமர வாலிபர்களுக்கும் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு அதிகமாக ஏற்படுகின்ற வகைகளில் உரிமங்களையும் பல சலுகைகளையும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): சீக்கிரம் முடியுங்கள். நான் அடுத்தவரை அழைத்துவிட்டேன்.

திரு. அ, செல்லப்பா : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர் களே, பாயின்ட் ஆம் ஆர்டர்.........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எஸ். ஜே. இராமசாமி) அவர் முடிக்கட்டும். அதற்குப் பிறகு நீங்கள் கேளுங்கள்.

திரு. ரா. கு. பெருமாள் : இன்னொன்று மட்டும் சொல்லிவிடுகிறேன். நெல்லை மாவட்டத்திலே விளாத்திகுளம் தொகுதியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே ரூபாய் 8.50 கோடி மதிப் பீட்டில் வைப்பாறு அணை திட்டம் போடப்பட்டு அது ஆய்வுக்கு வந்தது.......(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): அடுத்து திரு. பொ. விஜயராகவன்.

திரு. பொ. விஜயராகவன் ; தலைவரவர்களே, எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற மிகக்குறுகிய நேரத்தில் 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை மிக ஏமாற்றத்தைத் தரக்கூடியதாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த சர்க்கார் மக்களை ஏமாற்று கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நிறைய திட்டங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இப்போது புதுத்திட்டங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்திருக் கிறார்கள். ஆகவே அறிவிக்கின்ற திட்டங்களை உண்மையிலேயே நிறைவேற்றுகிறார்களா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. இந்தச் சந்தேகம் பொது மக்கள் மத்தியிலேயும் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

1977-78 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை வைக்கிறபோது அதிலே வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு என்னும் இடத்தில் கமண்டலாற்றுக்கு குறுக்கே 3.55 இலட்சம் ரூபாய் செலவில் நீர்தேக்கம் ஒன்றை அமைப்பது நடப் பாண்டில் மேற்கொள்ளப்படும் முக்கியமான திட்டமாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு திட்டத்தை எவ்வளவு வேகத்தோடு சொன்னார்கள் இப்போது அந்தத் திட்டம் எந்த முறையிலே செயல்படுகிறது என்பதைப் பார்த்தால் 1978-79ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5 இலட்ச ரூபாய் அனுமதிக்கப் பட்டு அது செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்பதை வேதனை யோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1978-79 ஆம் ஆண்டில் சித்தமல்லி நீர்த்தேக்கம் என்கிற ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்டுவதற்கு 10 இலட்ச ரூபாய் அனு மதிக்கப்பட்டது. அந்த பத்து இலட்ச ரூபாய்க்கு போடப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை,

(பிற்பகல் 1–10)

அதே போல், 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக் கையில் பொய்கை அணைத் திட்டத்திற்காக 15 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை ஒரு காசு கூட அந்த பொய்கை திட்டத்திற்காகச் செலவு செய்யவில்லை. அந்தத் திட்டம் என்னவாயிற்று என்றே எங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

என்றைக்கும் மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலம் முன்னோடியாக இருந்திருக்கிறது. மதிய உணவுத் திட்டம் போன்ற திட்டங்களை எடுத்துக்கொண்டால் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் அது அமல்நடத்தப்பட்டு, அதை மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற அளவில் தமிழகத்தில்—

1979 மார்ச் 19] *[திரு. பொ. விஜயராகவன்]*

தமிழ்நாடு நிர்வாகத்தில் சிறந்த புதுமையான திட்டமாக அவைகளை நிறைவேற்றி வந்தோம். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சர்க்கார் மத்திய சர்க்காரினுடைய திட்டத்தை தத்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்—இதை எப்போதிருந்து தத்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால்—ஃபுட் ஃபார் வொர்க்—திட்டத்தின் மற்ற மாநிலங்கள் எல்லாம் முன்னேறிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இன்றைக்குத்தான் இந்த சர்க்கார் அதை கொண்டு வந்து செயலாற்றப்போவதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி 'டியூப் லைட்டாக' இருந்து கொண்டிருக்கிறது நம்முடைய அரசு......

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:</u> 'ஃபுட் ஃபார் வொர்க்' என்ற திட்டம் மத்திய அரசு அறிவித்த திட்டமாக இருந்தாலும், நாம் சொல்லுகின்ற திட்டம் 'எம்பிளாய்மென்ட் கியாரண்டி' என்கின்ற திட்டம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. பொ. விஜயராகவன்:</u> ஆளும் கட்சியில் இருந்தவர்களே இதைச் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் தான் நான் இதைப் பேசுகிறேன். மார்ச் 12-ம் தேதி 'இந்து' பத்திரிகையில் இது பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. அதில்........

"About 200 million mandays would have been generated through the pumping in of six lakh tonnes of grain during the year ending March 31, 1979 under the Food-for work Programme, intended to prevent exploitation of weaker sections of the rural community during the lean season and ensure price stability, especially in the far-flung and remote areas" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மட்டுமல்லாமல்,......

"Already during the period from April 1978 to mid—February 1979, the programme had generated 160 million mandays of employment and resulted in the utilisation of 5.30 lakh tonnes of food grains. In 1977-78 only 39 million mandays were generated with the use of 1.27 lakh tonnes of grain." அதுமட்டுமல்லாமல்,......

"Orissa and Rajasthan have made the maximum use of the grain available under the programme so far. In April–December 1978 Rajasthan utilised 1.13 lakh tonnes of grain and Orissa 1.12 lakh tonnes. West Bengal utilised about 80,000 tonnes of grain, Uttar Pradesh used 53,000 tonnes, Bihar 47,000 tonnes Madhya Pradesh 30,558 tonnes, இப்படிப் பல மாநிலங்கள் முன்னேற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் நமது மாநிலம் இப்போது

தான் ஒரு அடி எடுத்து வைத்திருக்கின்ற நிலையைப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன். முன்பெல்லாம் தமிழ்நாடு அரசு தான் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற நிலையிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு மற்றவர்கள் வழி காட்டுகின்ற அளவுக்கு நம்முடைய நிலை வந்து விட்டதே என்பதற்காக வேதனைப்படுகின்றேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சினிமாத் துறையிலிருந்து வந்தவர்கள். சினிமாத்துறைக்கு அளிக்கக்கூடிய ஊக்கம் விவசாயிகளுக்கு அளிக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சினிமாத் துறைக்கு கம்பௌன்டிங் டாக்ஸ் மூலமாக, வரிவிதிப்புப் போட்டதின் காரணமாக அரசாங்கத்திற்கு 7, 8 கோடி இழப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நிலவரியாக இந்த மாநிலத்தில் 9 கோடி 29 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மட்டுமே இந்த அரசுக்கு வருகின்றது. அந்த அளவுக்கு இருக்கின்ற நிலவரியைக் குறைப்பதற்கு எந்தவிதமான முயற்சி கொள்ளவில்லை. ஆனால் அதே நேரத்தில் கம்பௌன்டிங் டாக்ஸ் என்று போட்டு கணக்குக் காண்பித்தால் அரசு நஷ்டம் அடைகிறது என்று சினிமாத் துறைக்கு காட்டுகிற அக்கறை கூட விவசாயிகளுக்குக் காட்டவில்லை என்கின்ற ஒரு கருத்தைச் சொல்லி, நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* <u>திரு. இரா. ஆதிசுவாமி</u> : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விழைகிறேன். இந்த அறிக்கையிலே வேலை வாய்ப்புக்கோ அல்லது மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடியதற்கோ, எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை. ஒவ்வொரு குடிசைத் தொழிலும், மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது. ஒரு தொழிலை இன்றைக்கு ஆரம்பித்து நடத்துகின்றவர்கள், அதை விரிவுபடுத்த வேண்டுமென்று ஒரு 5 ஆர்ஸ் பவர் மோட்டார் வேண்டுமென்று விண்ணப்பித்தால், அவர்கள் உடனே கார்ப்பரேஷனுக்கோ அல்லது முனிசிபாலிடிக்கோ அப்ளை பண்ண வேண்டியிருக்கிறது. அதற்கு மேலும் அவர்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால், அவர்கள் எம். எம். டீ. ஏ. வுக்கு அப்ளை பண்ண வேண்டியிருக்கிறது. இதனால், பல இடங்களில் இவ்வாறு ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பாதிக்கப்படுகின்றன.

மேலும், எங்கள் ஜில்லாவில் பெருவாரியானவர்கள் செய்யக்கூடியது கயிற்றுத் தொழில், இன்றைக்கு இந்தத் தொழிலுக்கு இடுக்கண் ஏற்பட்டு

1979 மார்ச் 19] [திரு. இரா. ஆதிசுவாமி]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இருக்கிறது. இந்தத் தொழிலுக்கு தொண்டானது கன்னியாகுமரிக்கு பல பாகங்களிலே இருந்து வரவேண்டியிருக்கிறது. கேரளாவிலே இருந்து வந்து கொண்டிருந்தது; அங்கே அவர்கள் தொழில் பாதிக்கப்படுகின்ற காரணத்தால், அவர்கள் அதை தடை செய்து விட்டார்கள். இன்றைக்கு நம் மாநிலத்தில், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வருகின்ற தொண்டையும் தடை செய்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே, இது சம்பந்தப்பட்ட ஏழு சிறு சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதில் 3 தொழிற்சாலைகள் கே. டி. கோசல்ராம் நடத்துகிறார். இந்த ஒரே காரணத்திற்காக, திருநெல்வேலி மாவட்டத்திலே இருந்து வரக்கூடிய தொண்டுக்கும் தடை செய்திருக்கிறார்கள். அதனால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருவதை நிறுத்தியிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யக்கூடிய, தும்பையானது திரும்பவும் கயிறு திரிப்பதற்காக (அதாவது மட்டைகளை) கன்னியாகுமரிக்கு அல்லது சேலத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கே கயிறை முறுக்குவதற்கான ஒருவிதமான தொழிலும் இன்னும் வரவில்லை.

அதே சமயத்தில், தேங்காய் போன்ற அழுகும் பொருளுக்கு இதற்கு முந்தைய அரசு 3 ஆண்டுகளுக்கு முன் தேங்காய் மீதான விற்பனை வரியை ரத்து செய்தார்கள். அப்படிச் செய்துவிட்டு, கொப்பறைக்கு வரிபோட்டார்கள். ஆனால் இன்றைக்கு நிதி நிலை அறிக்கையிலே, இந்த கொப்பறைக்கு வரியை ரத்து செய்யாது, அதற்குக் காரணம் சொல்லி, அதை ஒழுங்காக அமல் படுத்த முடியவில்லை என்று சொல்லி, இந்த தேங்காய்க்கு பழையபடி விற்பனை வரி இருந்ததுபோல், 2 சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். இதைத் தவிர, தென்னைத் தோட்டங்கள் வைத்திருப்பவர்களுக்கு இன்னொரு அபாயம் வந்திருக்கிறது. விவசாய வருமான வரிக்கு 2 ஏக்கர்கள் என்று சொன்னால் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று முன் இருந்தது. அதை இன்றைக்கு 1 ஏக்கர் 33 செண்ட் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. அதன்படி பார்த்தால், 6 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது இன்றைக்கு ஏக்கர். எனவே, இதிலே ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது 6-க்கு 1 என்று சொல்லப்படுகிறது. இப்படிப் பலவிதமாக தென்னை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இதைப்பற்றி சர்க்கார் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடற்கரை ஓரத்திலே இருக்கும் மீனவர்கள் பெரியவர்களாக இருந்தால், கடலுக்குச் செல்வார்கள். ஆனால், வீட்டிலே இருப்பவர்கள் வலை பின்னும் தொழிலிலே ஈடுபடுவார்கள். இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள் ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதுவும் அமைச்சர் அவர்கள்

வருகிறபோது இத்தகைய ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தைச் செய்தார்கள். அன்றைக்கு அங்கு வந்த மந்திரி அவர்கள் ஒரு வாக்குறுதியை அளித்தார்கள், அன்றைய தினம் அவர்கள் இந்த நெட் பின்னுவதற்கு லைசன்சை கான்சல் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால், இப்போதும் புதிதாக அந்தத் தொழிற்சாலைக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம், அங்குள்ள மக்களுக்கு புதிதாகத் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்காவிட்டாலும், தாங்கள் ஈடுபட்டிருக்கின்ற இந்தத் தொழிலைப் பறிக்கக் கூடாது என்றுதான் கேட்கிறார்கள். அவர் ஒருவேளை கஞ்சிக்கு இதைக் கேட்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் அவர்கள் கேட்கவில்லை.

அதேபோல், எல்லா ஜில்லாவிற்கும் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எங்கள் ஜில்லாவிற்கு அப்படியில்லை. ஆனால், எங்கள் ஜில்லா பெருமழையினால் பாதிக்கப்பட்டு, காட்டாறுகளிலே எல்லாம் உடைப்பு ஏற்பட்டு, பெருஞ்சேதம் ஏற்பட்டிருந்தது. இதைச் செப்பனிடுவதற்கு, ஏதோ 55 லட்ச ரூபாய்தான் எஸ்டிமேட் போடப்பட்டு இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

15 லட்சம் ரூபாய் இந்த நிதியாண்டில் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதிலே இப்போது 4 லட்சம் ரூபாய் குறைவு செய்திருப்பதாக அறிகிறேன். ஜுன், ஜுலை மாதங்களில் மழை காலம் வரப்போகிறது. இவற்றையெல்லாம் செப்பனிடாவிட்டால் திரும்பவும் மழை பெய்யும்போது பெரும் சேதம் விளைவிக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகையால் உடனடியாகக் கூடுதல் தொகையை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களுக்கு இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் சென்ட்ரல் கிச்சன் வைப்பதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. எங்கள் ஜில்லாவில் 66% பள்ளிக்கூடங்கள் சர்க்காரால் நடத்தப்படுகின்றன. எல்லா பிரைமரி பள்ளிகளிலும் தகராறு வருவதே இந்த மதிய உணவில்தான். கல்வியமைச்சர் அவர்கள் சென்ட்ரல் கிச்சன் அமைக்கும் திட்டத்தை எங்கள் பகுதிக்கும் விஸ்தரித்தால் அங்குள்ள ஏழைக் குழந்தைகளுக்கும் வசதிகள் கிடைக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. சீனி. செல்வராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைக் கற்கண்டுத் தமிழிலே சொற்கண்டு, கன்னித் தமிழிலே புடைத்தெடுத்து, சொல்லுக்குச் சொல் அவை போற்றி, சுதந்தரத் தமிழால் மொழி அடுக்கி, தனது நீண்டநாள் அரசியல்

1979 மார்ச் 19] [திரு. சீனி. செல்வராஜ்]

அனுபவத்தையும் முதிர்ந்த அரசியல் ஞானத்தையும், தெளிந்த பொருளாதாரக் கண்ணோட்டத்தையும், ஏழைகளின்மேல் மிகுந்த பரிவையும், பாசத்தையும், இந்த அரசுக்கும், புரட்சித் தலைவருக்கும் உள்ள அக்கறையினை, ஆர்வத்தினை காஞ்சி வழி வந்த நாஞ்சிலார் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அப்பேர்ப்பட்ட நிதிநிலை அறிக்கையினை வரவேற்றுப் பேசும் வாய்ப்புக் கிடைத்ததற்கு என் நன்றியையும், நல்வணக்கத்தினையும் முதற்கண் சமர்ப்பித்து இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற நான் ஆசைப்படுகிறேன்.

பழைய பாட்டிற்குப் புதிய மெட்டுப் போட வந்த பாகவதரை போல பழைய கள் புதிய மொந்தை என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்வேன், 'உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும்.' உள்ளத்தில் இருள் உண்டானால் வாக்கினில் என்ன வரும் என்பதைப் போல், 'ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற் பின் தீதுண்டோ மன்னுமுயிர்க்கு' என தெள்ளுதமிழ் வள்ளுவன் கூறிச் சென்றதைப் போல், மக்கள் ஆரோக்கியமாக இருந்தால் வைத்தியருக்கு நோய் வரும் என்பதைப் போல, நோயாளிக்குத் தேனும் கசக்கும் என்பதைப் போல, பிரசவ வேதனைகளுக்குப் பிறகு குழந்தைப் பிறப்பதைப் போல, இயற்கை சீற்றங்களுக்கும், செயற்கை சீற்றங்களுக்கும் பிறகு நாஞ்சிலார் படைத்த நிதிநிலை அறிக்கையினை குறைகூறுபவர்கள் ஒரு நிமிடமாவது கடந்த காலத்தையும் எண்ணி, தற்போதுள்ள நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நடுநிலைமையாளர்கள், நல்லவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுவார்கள். அதே சமயத்தில் நல்ல மனதுடன் நடுநிலையுடன் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்.

கடந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த நிலையிலும் தமிழகம் கடும் மழையாலும், கொடும் புயலாலும், பெரும்வெள்ளத்தாலும் தாக்கப்பட்டிருந்தது. தாக்கப்பட்ட பகுதி களில் ரூ. 155 கோடிக்குமேல் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிட இருந்த பணத்தை மீட்சிப் பணிகளுக்கு புரட்சித் தலைவர் அரசு செலவு செய்து மக்களின் துயர்களைக் களைந்தது.

எத்தனையோ இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட கொடுமைகளையும் செயற்கை சீற்றங்களினால் ஏற்படுத்தப்பட்ட கொடுமைகளையும் எதிர்க்கட்சிகளால் நடத்தப்பட்ட, தூண்டி விடப்பட்ட கிளர்ச்சிகளையும், ஆர்ப்பாட்டங்களையும் போர்ப் பாட்டுக்களையும் சந்தித்துச் சமாளித்து வெற்றி பெற்ற நிலையிலும் சிங்காரச் சென்னையை இயற்கை அன்னை சீரழித்த நேரத்திலும், தொழிற்சாலைகளைத் தொல்லைச் சாலைகளாக் குவதில் சிலர் நேரத்தையும் நினைப்பையும் செலவழித்த

நேரத்திலும் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற எண்ணத்தில் மக்கள் குறைகளைப் போக்க அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அரசு நிறைவேற்றி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அரசின் மீதும் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்-கல்லைத்தான், மண்ணைத்தான், காய்ச்சித்தான், குடிக்கத்தான் கற்பித்தானா? என்று சித்தர் பாடல்களைப் புத்தரைப் போல் எடுத்துப் பாடியவர்கள் ஆட்சியில் என்ன நடந்தது என்று எண்ணிப் பார்ப்பார்களானால் தற்போது நல்லாட்சி நடைபெறுகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ''உறுபசியும், ஓவாப் பிணியும் செறு பகையும் சேரா தியல்வது நாடு'' என்று தெள்ளு தமிழ் வள்ளுவன் கூறிச்சென்றதைப் போன்று அந்தக் குறளுக்கு எடுத்துக்காட்டாக, இலக்கணமாக தமிழக அரசு அமைந்து பொறுப்பேற்ற பிறகு இந்தத் தமிழ்நாட்டில் உணவுப் பற்றாக் குறை இல்லை, பஞ்சம் இல்லை, பசி இல்லை, பட்டினி இல்லை, பட்டினிச் சாவு இல்லை, அரிசி நடமாட்டத் தடையும் இல்லை, பாசன நீர்த்தட்டுப்பாடு இல்லை, மின்சார வெட்டு இல்லை, உரத் தட்டுப்பாடு இல்லை, பொறுக்கு விதைகள் அளிப்பதில் தட்டுப்பாடு இல்லை, விலைவாசி ஏற்றம் இல்லை, வேதனைப் புயல் இல்லை, அரிசிக்கு க்யூ இல்லை, அல்லும் பகலும் கஷ்டம் இல்லை, பூனை தூங்கும் அடுப்பு இல்லை, பொழுதெல்லாம் கண்ணீர் இல்லை, லஞ்சம் இல்லை, லாவண்யம் இல்லை, ஊழல் இல்லை, ஊதாரித்தனம் இல்லை, மாட மாளிகை கூட கோபுரம் கட்டவில்லை, மற்றவர்கள் பேரில் சொத்துக்கள் வாங்கவில்லை என்ற நிலைமையில் இன்றைக்கு தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பொழுது விடியாதா, போராட்டம் ஆரம்பிக்காதா என்று எதிர்க்கட்சிகள் போராட்டத்தைத் தொடங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் போராட்டங்களை இந்த அரசு சந்தித்து, சமாளித்து வெற்றி பெற்று சாதனைகள் பல புரிந்து வருகிறது. இந்த தமிழகத்திற்காக, இந்த தமிழக மக்களுக்காக நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து நன்மைகளைப் புரிந்து வருகிறது. இப்படிப்பட்ட நேரத்தில், இந்தச் சட்டமன்றத்திலே நம்பிக்கை யில்லை என்று நம்பிக்கையில்லாதவர்களால் கொண்டுவரப் படுகின்ற தீர்மானத்தையும் முறியடித்து வெற்றி நடைபோட்டு வருகின்ற இந்த நேரத்திலே எனக்குப் பேசுவதற்கு நல்வாய்ப்பை அளித்த தலைவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்திலே என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறுவதற்கும் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி, இரண்டு முறை அமைச்சர்களைப் பெற்றிருக்கிற அரசியல் பாரம்பரியம் கொண்டது ஆகும். (மணியடிக்கப்பட்டது.) என்னுடைய

தொகுதியில் கொட்டகைமேடு என்ற ஒரு சிறு கிராமம் எந்த வித முன்னேற்றமும் இல்லாமற் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இதை முன்னேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

* திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் பலன் தரக்கூடிய ஆக்கப்பூர்வமான திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பது என்னுடைய கருத்தாகும். விவசாயிகள் உற்பத்தி செய்கிற, நெல், கரும்பு, மணிலா போன்ற பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்று விவசாயிகள் போராடி வருகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஆதரவாக இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதக் குறிப்புகளும் காணப்படவில்லை. அப்படிக் காணப்படவில்லை யென்றாலும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் நெல், கரும்பு போன்றவற்றிற்கு விலைகளைக் கூட்டித் தரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றாலும்கூட நம்முடைய மாநில அரசின் நிதியிலிருந்து நெல், கரும்பு போன்றவற்றிற்கு விலைகளைக் கூட்டித்தருவதற்கு, நிதி ஒதுக்கி விலைகளைக் கூட்டித்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கடன்கள், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமோ அல்லது மற்ற அமைப்புகளின் மூலமோ கடன் வழங்கப்படவில்லை, இப்படி வழங்கப்படவில்லையே என்று கேள்வி நேரத்திலே கேட்கப் பட்டதற்கு, அமைச்சர் பதில் சொல்லி இருக்கிறார், தற்போது மத்திய வங்கி தவணை கடன் பாக்கியுள்ளது என்று கூறியிருக்கிறார். மத்திய வங்கி தவணைக் கடன் பாக்கி என்றால் ஐ.எம்.எஸ். கடன் என்ற முறையிலே விவசாயிகளுக்குக் கடன் வழங்கியிருக்க வேண்டும், வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாத்தனூர் அணை பாசன வசதிகள் உள்ள பகுதி. அங்கே விவசாயிகளுக்கு உரக்கடன்களும் வழங்கப் படவில்லை, ரொக்கக் கடன்களும் வழங்கப்படவில்லை, இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன, எனவே ஒன்றியத்தின் மூலமாகக் கடன்கள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே உள்ள பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுப்பதுபற்றி 1977–78, 1978–79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 65 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. அதை யொட்டிக் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு 90 நாட்கள்

டைம் கொடுத்து நோட்டீஸ் கொடுத்து அவர்கள் எல்லாம் அதன் காரணமாக பல சங்கடங்களுக்கு ஆளாகி மோட்டார்கள் வாங்க கடன்களை வாங்கிப் பொருத்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு 90 நாட்கள் கெடு முடிந்தபிறகும் கூட மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. இதன் காரணத்தால் இன்றைக்கு திருவண்ணாமலைப் பகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் எல்லாம் நஷ்டமடையக் கூடிய நிலைமை இருக்கிறது. சிங்காரப் பேட்டையிலிருந்து திருவண்ணாமலைக்கு 40 எம்.யு.ஆர், தரவேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது திடீரென்று அதை குறைத்து விட்டார்கள், ஆகவே அந்தப் பகுதியிலே இருந்து கிரிப்பிடர் திருவண்ணாமலைக்கு உடனடியாக மின்சாரம் போதுமான அளவிற்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே அதிகமாக மழைபெய்து ஆங்காங்கே வெள்ள நிவாரணம் கொடுக்கப்படுகிற நேரத்திலே திருவண்ணாமலை, செங்கம் போன்ற இடங்களிலே, அந்த வட்டங்களிலே தொடர்ந்து 4,5 ஆண்டுகளாகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக தற்போது அங்கே குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது, பஞ்சம் இருக்கிறது, எனவே, தகுந்த அதிகாரிகளை அனுப்பி விவசாயிகளுக்கு என்ன பயிர் சேதம் என்று பார்த்து. எப்படி வெள்ளத்திற்கு நிவாரணம் தரப்பட்டதோ அதைப் போன்று அந்தப் பகுதிகளிலே ஏற்பட்ட வறட்சியையொட்டி, வறட்சி நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–30]

என்னுடைய தொகுதியிலே சாத்தனூர் அணை இருக்கிறது. அந்த சாத்தனூர் அணையிலேயிருந்து சில கிராமங்களுக்குக் கால்வாய்கள் வெட்டி, அதன் மூலம் புதிதாக ஏரிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச உதவ வேண்டுமென்று மனுக்கள் தரப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தண்டாரம்பட்டு தொகுதியிலே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

122. தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் பயன்படுத்தப் பெறுகிற பயனியர் ஜீப்பு வண்டிகளைப் பொறுத்தவரையில் செலுத்தத் தக்க வரிவீதத்தில் சலுகையளிப்பது குறித்து, உள் துறையின் (போக்குவரத்து—I) 19—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற 3112 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

123. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தலைவர்கள், உறுப்பினர்களின் தேர்தல் நடத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 20-12-1978 ஆம் தேதியிடப்பெற்ற 1957 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS